
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

அக்டோபர் - 2003
ம.க.இ.க. மாத இதழ்
சிறப்பிதழ் ரூ. 10.00





கோ சாலைகள் - ஒரு புனித மோசடி

மாடு வெட்டினால் ஏழாண்டு சிறை

மக்களின் உணவாக மாட்டுக்கறி

பசுத்தோலின்றி மிருதங்கமில்லை

சென்னை: மாடு வளர்ப்போரின் துயரம்

மலரும் நினைவாய் மணப்பாறை சந்தை

நாம் அறிந்திராத மாட்டின் பயன்பாடு

கிடா வெட்டும் போராட்டம் ஏன்?

## பார்ப்பனப் புனிதமா பயன்படும் செல்வமா?

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பொடாவிற்குப் போட்டியாக பசுவதைத் தடைச் சட்டம் | 4 |
| சென்னை - மாடு வளர்க்கத் தடை: முளையில் கட்டப்பட்ட மாடுகள் மாட்டுடன் கட்டுண்ட மனிதர்கள் | 6 |
| தகஜ"னு தகதிமி... தாளமில்லை... மாடு வெட்டாமல் மிருதங்கமில்லை! | 10 |
| தமிழ் மக்களின் புலால் உணவு மரபு | 13 |
| கிடா வெட்டத் தடை: மதுரை பாண்டிமுனி கோயில் - மக்கள் கருத்து | 14 |
| திருச்சியில் கிடா வெட்டும் போராட்டம் | 17 |
| ஆ உரித்துத் தின்ற பார்ப்பனர்கள் அசைக்க முடியாத ஆதாரங்கள் | 19 |
| இந்தியாவில் மாடுகள்: புனிதமா... பொருளாதாரமா? | 20 |
| "யாகத்திற்கு பசுவை வெட்ட வேண்டும்" - மகா பெரியவாள் வாக்குமூலம் | 24 |
| ஆவின்றி அமையாது உலகு: நாம் அறிந்திராத மாட்டின் பயன்பாடுகள் | 26 |
| மலரும் நினைவுகளாய் - மணப்பாறை மாட்டுச் சந்தை மக்களிடம் நேருக்கு நேர் | 30 |
| கோசாலை: காப்பகமா - காட்சிக் கூடமா? | 33 |
| கொழுப்பு - *சிறுகதை* | 36 |
| கிடா வெட்டும் போராட்டம்: மூடநம்பிக்கையை வளர்க்குமா? | 39 |
| மாட்டுக்கறி : ஒரு மக்கள் உணவு | 43 |
| "காக்க... காக்க...": நிஜத்தில் வில்லன்கள் நிழலில் நாயகர்களாக... - *திரைப்பட விமரிசனம்* | 46 |
| பாரதி அவலம் - தொடர் | 48 |
| வாசகர் கடிதம் | 51 |



*ஓவியங்கள் : **முகிலன்***
*இதழ் வடிவமைப்பு : **துரை***
*அட்டை வடிவமைப்பு : **ஸ்பார்ட்டகஸ்***
*அட்டை மற்றும் கட்டுரைப் புகைப்படங்கள் : **ஜோதி***




## நேபாள் மாவோயிஸ்ட் தலைவர் கஜூராலை விடுதலை செய்!

நேபாளத்தில் மன்னராட்சிக்கு எதிராக மக்களாட்சியை நீக்கி, புதிய ஜனநாயக ஆட்சியமைக்கப் போராடி வருகிறது, நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்). இதன் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்களில் ஒருவர் தோழர் சி.பி. கஜூரால்.

நேபாளத்தில் நடக்கின்ற மன்னராட்சிக் கொடுங்கோன்மையை விளக்கவும், மக்கள் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டவும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்காகச் சென்னை வந்தவர், ஆகஸ்ட் 20-ம் தேதி சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

ஒரு மாதத்திற்கும் மேலாக சிறையிலிருக்கும் தோழரை காவல் நீட்டிப்பிற்காக 1-10-03 அன்று ஆலந்தூர் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்தது, தமிழகப் போலீசு. அப்போது, செஞ்சட்டையணிந்த 30-க்கும் மேற்பட்ட ம.க.இ.க மற்றும் பு.ஜ.தொ.மு தோழர்கள், கொடிகள் மற்றும் முழக்க அட்டைகளை ஏந்தி தோழர் கஜூராலை வரவேற்றனர்.

- ***தோழர் C.P. கஜூராலை உடனே விடுதலை செய்!***
- ***கொலை வெறி பிடித்த நேபாள மன்னராட்சியிடம் ஒப்படைக்காதே!***
- ***நாடு கடத்தும் முயற்சியைக் கைவிடு!***
- ***C.P. கஜூரால் உயிருக்குப் பாதுகாப்பு கொடு!***

- போன்ற முழக்கங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வரவேற்பளிக்கப்பட்டது.

செஞ்சட்டைகளைக் கண்டு மிரண்ட உளவுத் துறை போலீசு, உடனே மேலதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்து, ஒரு போலீசு பட்டாளமே வந்து குவிந்தது. இது பெரும் பரபரப்பை உண்டாக்கி, திரளான மக்கள் கூடி விட்டனர்.

தோழர் கஜூரால், நமது ஆதரவிற்குப் பாராட்டு தெரிவிக்கும் விதத்தில், கையசைத்து, புன்னகையுடன் நீதிமன்றத்திற்கு சென்றார். கம்யூனிசப் போராளி பற்றிய செய்தி கொஞ்சமும் கசிந்து விடக் கூடாது என்று அஞ்சிய போலீசு - அதிகார வர்க்கத்தின் திட்டத்தைத் தகர்த்து, தோழர் கஜூரால் பற்றிய செய்தி மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டது.

**— பு.ஜ.தொ.மு, சென்னை.**

படிப்பகம்

www.padippakam.com

# ஆட்டைக் கடித்து... மாட்டைக் கடித்து...

**பா**ர்ப்பனியமும் மறுகாலனியாதிக்கமும் விசித்திரமானதொரு கலவையாய் இணைந்திருக்கின்றன. தனது உற்பத்திக்கும் சந்தைக்கும் தேவைப்படாத உழைக்கும் மக்களை, ஒரு இயந்திரத்திற்குரிய இரக்கமின்மையுடன் புறங்கையால் ஒதுக்கித் தள்ளுகிறது மறுகாலனியாதிக்கம். அரசின் கொள்கைகளும் திட்டங்களும் எந்த மக்களை இவ்வாறு ஒதுக்கித் தள்ளுகிறதோ அந்த மக்களை - பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த அதே மக்களை, இந்துத்துவம் எனும் சுழலுக்குள் கருத்தியல் ரீதியாக உள்ளிழுக்க முயலுகிறது பார்ப்பனியம்.

தன்மீது சுமத்தப்பட்டுள்ள சாதிரீதியான இழிவைப் போராடி முறியடிக்க வேண்டிய அநீதியாகக் கருதாமல் தனது தலைவிதியாகக் கருதி ஏற்றுக் கொள்வதற்குப் பக்குவப்படுத்தும் இந்தக் கருத்தியல், மறுகாலனியாக்கத்தின் விளைவாக ஏவப்படும் வர்க்க ஒடுக்குமுறையையும் அவ்வாறே ஏற்கச் செய்கிறது. சமத்துவத்திற்கும் ஒற்றுமைக்குமான உழைக்கும் வர்க்கத்தின் தாகம், கற்பனையான எதிரிகளை - முக்கியமாக மதச் சிறுபான்மையினரை - குறிவைக்கும் வெறியாக வளர்க்கப்படுகிறது. இதைச் சாதிப்பதற்குப் பல பொய்களையும், சில புனிதங்களையும் தனது ஆயுதமாகப் பயன்படுத்துகிறது ஆர்.எஸ்.எஸ். கும்பல்.

இந்த ஆயுதங்களில் மிக முக்கியமானது பசுவதைத் தடை. மாட்டிறைச்சி உண்பதில்லை என்பது குறித்த இந்து மேல்சாதிப் பெருமிதத்தைப் பயன்படுத்தியே பல முசுலீம் எதிர்ப்புக் கலவரங்களையும், தலித் படுகொலைகளையும் நடத்தியிருக்கிறது பார்ப்பன மதவெறிக் கும்பல். ஆனால் பசுவதைத் தடை என்பது அடிப்படையில் மாடு வளர்க்கும் விவசாயிகளின் பிரச்சினை என்று எவ்வளவு பேருக்குத் தெரியும்? பால் தராத 'கோமாதா'வைத் தீவனம் போட்டுப் பராமரிக்கும் பொருளாதாரச் சுமையை விவசாயிகள் மற்றும் பால்மாடு வளர்க்கும் ஏழைகளின் தலையில் சுமத்துகிறது இச்சட்டம். சுமார் 17 மாநிலங்களில் தடைச் சட்டம் ஏற்கெனவே அமலில் இருப்பதால், தடைச்சட்டமில்லாத மாநிலங்களுக்கு மாடுகள் கொண்டு செல்லப்படுகின்றன. விவசாயிக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய விலை, லாரிச் செலவாகவும் லஞ்சமாகவும் அழிகிறது. இதனால் ஏற்படும் விலை உயர்வை மாட்டிறைச்சி உண்போர் சுமக்க வேண்டியிருக்கிறது. மொத்தத்தில் 'கோமாதாவின் புனிதம்' எனும் பித்தலாட்டத்திற்குக் கோடிக்கணக்கில் (மறைமுக) வரி செலுத்துபவர்கள் மாடு வளர்ப்பவர்களும் மாட்டிறைச்சி உண்பவர்களும்தான்.

மாட்டின் மூத்திரத்தையும், சாணத்தையும் புனிதமென்றும் அணுக்கதிர் வீச்சிலிருந்து கூடக் காப்பாற்றும் வல்லமை படைத்த அருமருந்தென்றும் போற்றும் பார்ப்பன மேல்சாதிக் கும்பல், சென்னை மாநகரின் அழகையும் தூய்மையையும் பேணும் பொருட்டு 'கோமாதாக்களை' நகரத்தை விட்டு வெளியேற்றுகிறது. 'புனிதக் கோமியம்' இப்போது நோய்களின் தோற்றுவாயாகத் தூற்றப்படுகிறது. தன்னுடைய வர்க்க நலனுக்கும் தானே உருவாக்கிய புனிதக் கருத்தியலுக்கும் முரண்பாடு தோன்றும் போது, தனது வர்க்க நலனுக்கு ஏற்ப புனிதத்தைச் செதுக்கிப் பொருத்திக் கொள்கிறது பார்ப்பனியம். பால் வற்றிப் போன மாடுகளை வெட்டுக்குக் கொடுக்கக் கூடாதென்று கூறும் ஜெயா - சங்கராச்சாரி கும்பல் பால்தரும் மாடுகளை வெளியேற்றுவதன் மூலம் அவற்றை வெட்டுக்குத் தள்ளுகிறது.

உலகத் தரம் வாய்ந்த அழகு சென்னையை உருவாக்குவதில் ஜெயலலிதா காட்டுகின்ற வெறித்தனமும், அதை ஆதரிக்கின்ற மேல்தட்டு வர்க்கத்தின் 'சுத்தம்' குறித்த ஏக்க உணர்வும், பார்ப்பன மதவுணர்வுக்கு மாறும் போது 'சுத்தம்' என்ற சொல்லே புதிய அர்த்தம் பெறுகிறது. நாட்டார் தெய்வக் கோயில்களைச் சுத்திகரிக்க கிடா வெட்டு தடைசெய்யப்படுகிறது. தனது வாழ்க்கை முறைக்கும், ரசனைக்கும் இடையூறான வர்க்கங்களை நகரத்திலிருந்து வெளியேற்றும் மறுகாலனியாதிக்கத்தைப் போலவே, தான் நுழையத் தடையாயிருக்கும் கிடா வெட்டைக் காட்டுமிராண்டித் தனமாகச் சித்தரித்துக் கோயிலிலிருந்து அகற்றுகிறது பார்ப்பனக் கும்பல். நாட்டார் கோயில்களைக் கைப்பற்றி, பார்ப்பனமயமாக்கி, இந்துமதவெறிக் கொலைகாரர்களின் கூடாரமாக மாற்றுவதற்கான இந்த மாபெரும் சதி, ஜீவகாருண்ய நடவடிக்கையாகச் சித்தரிக்கப்படுகிறது.

அழகு, சுத்தம், ஜீவகாருண்யம் ஆகிய அனைத்திற்குள்ளும் ஒளிந்திருக்கும் பார்ப்பன பாசிச அரசியலையும் அதன் மக்கள் விரோதத் தன்மையையும் உரிய ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துகிறது இந்தச் சிறப்பிதழ். ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்துக் கடைசியில் மனிதனைக் கடிப்பதுதான் பார்ப்பன பாசிசம் எனும் மிருகத்தின் நோக்கம். எனவே மாக்களின் வரலாற்றை அறிந்து கொள்வதன் வாயிலாக நம் மக்களின் எதிர்காலத்தைப் பாதுகாத்துக் கொள்வோம்! ●


கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்
• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: **21**
• குரல்: **5-6**
• அக். நவ. - 2003

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
இவ்விதழ் மட்டும் ரூ. 10/-
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9



சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

தொலைபேசி: 044-23718706

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com




அலுவலக நேரம்:

காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை


படிப்பகம்

www.padippakam.com

# பொடாவிற்குப் போட்டியாக
# பசுவதைத் தடைச் சட்டம்



"பசு விவகாரம் என்பது முசுலீம் அடிப்படைவாதத்தை எதிர்க்கும் உலகளாவிய போராட்டத்தின் ஒரு பகுதிதான்" - ஆர்.எஸ்.எஸ். தலைவர் தேவேந்திர ஸ்வரூப்.

அமெரிக்காவையும் உள்ளிட்டு உலகமே மாட்டுக் கறியை உண்ணும் போது, முசுலீம் எதிர்ப்பில் மாட்டு விவகாரத்தை எப்படி நுழைக்க முடியும்? இந்து மதவெறியர்களின் இந்திய அனுபவம் உலக அளவிலும் மாட்டு விவகாரத்தைக் கொண்டு செல்ல முடியும் என்று அவர்களுக்கு நம்பிக்கை அளித்திருக்கிறது. "இந்துக்கள் புனிதமாக வழிபடும் பசுக்களை முசுலீம்கள் வேண்டுமென்றே கொல்கிறார்கள்" என்ற இமாலயப் பொய் ஒரு நூற்று ஐம்பது ஆண்டுகளுக்குள்தான் புனையப்பட்டிருக்கிறது.

"இந்துக்களில் ஒரு சில பிரிவினர் பசுக்களை வழிபடுவதால் அவற்றை வெட்டக்கூடாது" என்று முகலாய மன்னர்களான பாபரும், அக்பரும் ஆணையிட்டிருக்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டில் ஆர்.எஸ்.எஸ் என்ற கிறுக்குக் கூட்டம் தங்களை அவதூறு செய்யக்கூடும் என்று அஞ்சி அவர்கள் அதைச் செய்யவில்லை. சாதி இந்துக்களின் நம்பிக்கைகளை மதிப்பதன் மூலம் அவர்களது ஆதரவைப் பெறுவதற்காகவே இதைச் செய்திருப்பார்கள்.

காலனிய ஆட்சியில் வெள்ளையர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு உதவும் வகையில் இந்திய தேசியவாதிகள் (காங்கிரசையும், இந்து மதவெறியர்களின் மூதாதையரையும் உள்ளிட்டு) பசுவை வைத்து முசுலீம்களை எதிர்ப்பதும் பார்ப்பன தேசியக் கருத்தியலைப் பரப்புவதும் மெல்ல மெல்ல நடந்தேறியது.

1882-இல் ஆரிய சமாஜத்தின் நிறுவனர் தயானந்த சரஸ்வதியால் பசு காக்கும் சங்கம் முதன்முறையாகத் துவங்கப்பட்டது. வட மாநிலங்களில் மகாராஜாக்கள், காங்கிரசைச்சேர்ந்த பண்ணையார்களின் ஆதரவுடன் பசுப் பாதுகாப்பு சமிதிகள் பரவத் துவங்கின. இதே காலத்தில் கிழக்கு உத்திரப் பிரதேசம் மற்றும் பீகாரில் முதன் முறையாகப் பசுவை வைத்து கலவரங்கள் நடந்தன. 1893-ஜூலை பக்ரீத் பண்டிகையின் போது அசாம்கார் முசுலீம் மக்களை அருகாமை மாவட்டங்களைச் சேர்ந்த இந்து மேல்சாதி வெறியர்கள் தாக்கினர்.

முசுலீம்கள் தமது உயிரையும், உடைமையையும் பாதுகாத்துக் கொள்ள ஒரு ஆவணத்தில் பசுக்களைக் கொல்ல மாட்டோமெனக் கையெழுத்திடுமாறு மிரட்டப்பட்டதாக 1893-இல் கோரக்பூர் ஆணையர் எம்.எல்.பெர்ரார் குறிப்பிட்டார். 1917-இல் 'பசுக் கலவரங்கள் மிக மோசமாய் நடந்தன. பார்ப்பன, ராஜ்புத், பூமிகார் ஆகிய மேல் சாதி இந்து வெறியர்கள் 30,000 பேர் பீகாரின் ஷாபாத் மாவட்ட முசுலீம்களை வேட்டையாடினர். 47 - பிரிவினையின் போது நடந்த கலவரங்களுக்கு பசுப் பிரச்சினை காரணமல்ல என்றாலும் அதன் பின்னும் இன்று வரையிலும் ஏராளமான கலவரங்கள் இப்பிரச்சினையை வைத்து நடந்திருக்கின்றன. பசு என்றொரு விலங்கிற்காக முசுலீம் மக்கள் அஞ்சி வாழ்வது என்ற நிலையைத்தான் இந்து மதவெறியர்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

பசுவதைத் தடைச்சட்டத்தை நாடு முழுவதும் கொண்டு வர வலியுறுத்தி 1966-ல் பாராளுமன்ற முற்றுகையை நிர்வாண சாமியார்கள் நடத்தினார்கள். போலீசு துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் இறக்குமளவு பெரும் கலவரமாய் நடந்தது.

இந்தக் கலவரத்தின் போது காங்கிரசின் அனைத்திந்தியத் தலைவராக இருந்த காமராசரின் டெல்லி வீடும் நிர்வாண சாமியார்களால் தாக்கப்பட்டது. கடந்த ஆண்டு அரியானா மாநில ஜஜ்ஜார் மாவட்டம் துலினா கிராமத்தில் உயிரோடு பசுவின் தோலை உரித்ததாக வதந்தியைப் பரப்பி, 5 தாழ்த்தப்பட்ட இளைஞர்களை அடித்து உரிரோடு கொளுத்தினர். இதை "மனிதனின் உயிரைவிட பசுவின் உயிர் மேலானது" என்று கூறி இந்துவெறி பாசிஸ்டுகள் நியாயப்படுத்தினர்.

இவ்வாண்டு கூட மத்தியப்பிரதேசத்தின் கான்ஞ்பகுடாவில் ஒரு பசு கொல்லப்பட்டதாக வதந்தியைப் பரப்பி முஸ்லீம்களுக்கெதிராக பெரும் கலவரம் நடந்தது. சட்டமன்றத் தேர்தலில் "பசுவின் புனிதம் காப்பது யார்" என்று காங்கிரசுக்கும், பா.ஜ.க.விற்கும் அங்கு போட்டி நடக்கிறது. முதலமைச்சர் திக் விஜய் சிங்கோ இந்தியா முழுவதும் பசுவதைத் தடைச்சட்டம் கொண்டு வர பிரதமர் வாஜ்பாயிக்கு கடிதம் எழுதினார். வாஜ்பாய் அரசும் அதற்கான மசோதாவை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தது. காங்கிரஸ் தவிர ஏனைய எதிர்க்கட்சிகள், கூட்டணிக் கட்சிகள் எதிர்ப்பினால் மசோதாவை தற்போது ஒத்தி வைத்திருக்கிறார்கள்.

ஏற்கெனவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டும் கோட்பாட்டுப் பிரிவு 48-ல் பசுவதையைத் தடை செய்வது குறித்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. 1958-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத் தீர்ப்பொன்றில் பிரிவு 48-ன் படி தடைச்சட்டம் வேண்டுமெனக் கூறப்பட்டது. 1979 ஜனதா அரசாங்கத்தில் கூட ஒரு தனிநபர் தீர்மானம் விவாதித்து நிறைவேற்றப்பட்டது. ஆனாலும் எதிர்ப்பு காரணமாக சட்டமாக வரவில்லை. அதேசமயம் தற்போது 17 மாநிலங்களில் முழுமையாகவோ, பகுதியாகவோ பசுவதைத் தடைச்சட்டம் அமலில் இருக்கிறது. மாடுகளைப் பராமரிக்க முடியாமல் வெட்டியாக வேண்டுமென்ற யதார்த்த நிலை காரணமாக இச்சட்டத்தை அம்மாநிலங்களிலேயே அமல்படுத்த முடியாமலிருக்கிறது.

உதாரணமாக, தடைச்சட்டம் இல்லாத கேரள மாநிலத்திற்கு தென்னிந்திய மாடுகள் அன்றாடம் கொண்டு செல்வது வழக்கமாகி விட்டது. இதனால்தான் கேரளம், மேற்கு வங்கத்தில் தடைச் சட்டம் கொண்டு வர வேண்டுமென வினோபா பாவே வலியுறுத்தினார். 1979-இல் எம்.ஜி.ஆர் அரசு பசுக்களை வெட்டவும், இறைச்சி ஏற்றுமதிக்கும் தடை செய்து உத்தரவு போட்டது. இவ்வுத்தரவைச் சட்டமாக மாற்றுவதற்குள் அவர் அரசு பதவி நீக்கம் செய்யப்பட்டது. இன்றும் மாடுகளைக் கேரளாவுக்குக் கொண்டு செல்லுவதை எதிர்த்துத் தமிழக இந்து மதவெறி அமைப்புக்கள் அரசு உத



படிப்பகம்

www.padippakam.com

வியுடன் அவ்வப்போது தொல்லை செய்கின்றன.

80-களில் ஆர்.எஸ்.எஸ். உடன் இணங்கி வந்த இந்திராகாந்தி, 82-ல் அனைத்து மாநில அரசுகளும் தடைச்சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமெனக் கடிதம் எழுதினார். இவையெல்லாவற்றையும் விட தற்போது பா.ஜ.க. அரசு கொண்டு வர முயலும் சட்டத்தின் விதிகள் பசுவை வைத்து மனிதனை வதைக்கும் பார்ப்பனிய இந்து மதவெறியின் கோர முகத்தைத் தோலுரிக்கிறது.

## பசுவதைச் சட்டம் அமலுக்கு வந்தால்...

**பால்சுரக்க ஊசிபோடும் பால்காரர், ஏழை விவசாயி, மாட்டு வண்டிக்காரர், அடிமாடுகளை விற்போர், வாங்கி விற்கும் வியாபாரிகள், வெட்டும் தொழிலாளிகள், கறிக்கடைக்காரர்கள், தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருப்போர் ஆகிய அனைவருமே கண்காணிக்கப் பட வேண்டிய குற்றவாளி களாகி விடுவார்கள்.**

கடந்த காலத்தில் மாடுகளை மனிதாபிமானமற்ற முறையில் வதைத்து வரும் நிலை இன்றும் தொடருவதாகக் கவலைப்படும் இம்மசோதா, இதனால் மனித - மாடு விகிதத்தில் மாடுகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து விட்டது குறித்தும் கண்ணீர் வடிக்கிறது. குறிப்பாக, பசுக்கொலையைத் தடுத்து நிறுத்தவும், மாட்டிறைச்சி ஏற்றுமதியைத் தடை செய்யவும் மசோதா கோருகிறது. மேலும் மாநில அரசு, ஊராட்சி அமைப்புகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், பாதுகாப்பற்ற, கைவிடப்பட்ட, நோய்வாய்ப்பட்ட பசுக்களைப் பராமரிக்க வேண்டுமெனவும் கோருகிறது.

அடுத்து, இந்தத் தடைச் சட்டம் பசுவுக்கு மட்டுமல்ல, காளைகளுக்கும் பொருந்தும். ஆனால், எருமைகளைக் கொல்லத் தடை இல்லை. எண்ணிக்கையில் பசுவை விடக் குறைவாக இருந்த போதும் இந்தியப் பால் உற்பத்தியில் பெரும் பகுதியை வழங்கும் 'கோமாதா' எருமைதான். எனினும் தோலின் நிறம் கருப்பு என்பதால் சட்டத்தில் ஆரிய நிறவெறி எருமைக்கு இரக்கம் காட்டவில்லை.

நன்றி: அவுட்லுக்



**கோபூஜை செய்யும் வாஜ்பேயி: பசு மாட்டுக் கொம்புகளின் மேல் சுழலும் அவரது அரசியல் உலகம்**

இச்சட்டத்தின்படி மாடுகளைக் கொல்வது மட்டுமல்ல, காயம் ஏற்படுத்துவதும் தண்டனைக்குரிய குற்றமாகும். அதாவது சித்திரவதை செய்வது, கைவிடுவது, தெரிந்தே நோயுடன் வாழ விடுவது ஆகியவையும் குற்றங்களே. இதன்படி மாட்டைக் கம்பு, சவுக்கால் அடிப்பது, மாட்டைக் கவனிக்காமல் அலையவிடுவது ஆகியவையும் குற்றமாகக் கருதப்படும். இச்சட்டத்திற்கு உட்பட்டு மாடுகளை வைத்திருப்போர் பொறுப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சட்டத்தை மீறுவோருக்கான தண்டனை விவரங்கள் இச்சட்டத்தின் முக்கியமான பகுதியாகும். இதன்படி மாடுகளைக் கொல்பவருக்கும், கொலை செய்யத் தூண்டுபவருக்கும் 2 வருடம் முதல் 7 ஆண்டுகள் வரையிலான கடுங்காவல் தண்டனையும், கொல்லப்படும் ஒவ்வொரு மாட்டுக்கும் ரூ.10,000 வரை அபராதமும் விதிக்கப்படலாம். மாட்டுக்குக் காயம் ஏற்படுத்துபவருக்கும் ரூ.5000 அபராதம் விதிக்கப்படும் இச்சட்டத்தின் கீழ் வழக்குப் போடவும், நடவடிக்கை எடுக்கவும் காவல் துறை உதவி ஆய்வாளருக்குக் குறையாத அதிகாரிகளுக்கும், அல்லது அரசு பரிந்துரை செய்யும் எந்த ஒரு நபருக்கும் அதிகாரம் உண்டு. அதாவது அரசு அதிகாரிகள் மட்டுமல்ல; இந்து முன்னணி, ''கோ ரட்சண சமிதி'' போன்றவற்றைச் சேர்ந்த ஆர்.எஸ்.எஸ் காலிகளை அரசு பரிந்துரை செய்தால், இச்சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரம் அவர்களுக்கும் வழங்கப்படும்.

இவர்கள் மாடு தொடர்பாக எங்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் நுழையவும், சோதனை செய்யவும், வண்டிகளைப் பரிசோதிக்கவும், மாடுகள் வெட்டுக்குப் போவதாகச் சந்தேகித்தால் அவற்றைக் கைப்பற்றவும் அதிகாரம் உண்டு. இச்சட்டத்தின்படி இவர்கள் 'நல்லெண்ணத்துடன்' எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்த்து இவர்கள் மீது வழக்கோ, ஏனைய நீதித்துறை நடவடிக்கைகளோ மேற்கொள்ள முடியாது.

ஆக, இச்சட்டம் நிறைவேற்றப்பட்டு அமலுக்கு வரும்போது மத மாற்றத் தடைச் சட்டம் போல பார்ப்பன இந்துமத வெறியர்கள் தங்களை எதிர்ப்பவர்களை ஏதோ ஒரு பொய் அல்லது அற்பக் காரணத்தைச் சொல்லி சிறைவைக்க முடியும். மாடு - விவசாயம், பால், தொழில் என - பல்வேறு தொழில்களோடு சம்பந்தப்பட்டிருப்பதால் போலீசுக்கு மாமூல் வருவாய் பெருகும். காக்கி - காவி கூட்டணி உறுதிப்படும். முக்கியமாக இச்சட்டத்தின்படி முழு இந்தியச் சமூகத்தையும் தண்டிக்க முடியும்.

பால்சுரக்க ஊசிபோடும் பால்காரர், மாட்டுக்கு வைத்தியம் பார்க்க வசதியில்லாத விவசாயி, வண்டி மாடுகளை அடிக்கும் வண்டிக்காரர், அடிமாடுகளை விற்கும் விவசாயிகள், வாங்கி விற்கும் வியாபாரிகள், வெட்டும் தொழிலாளிகள், கறிக்கடைக்காரர்கள், தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருப்போர் ஆகிய அனைவருமே கண்காணிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளாகி விடுவார்கள்.

பசுவதைத் தடைச்சட்டம் என்பது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒத்திருப்பதை எண்ணி வியப்படையத் தேவையில்லை. இரண்டிற்கும் பெயர்தான் வேறு; இலக்கு ஒன்றுதானே!

● பாலன்

நன்றி: ஃபிரண்ட்லைன்



படிப்பகம்

www.padippakam.com



## சென்னை - மாடு வளர்க்கத் தடை:

# முளையில் கட்டப்பட்ட மாடுகள் மாட்டுடன் கட்டுண்ட மனிதர்கள்

அவர்கள் குற்றவாளிகள். கபிலன், வீரமணி ஆகியோரைப் போல அவர்கள் சென்னை நகரின் தாதாக்கள் அல்ல. ஆனாலும் அவர்கள் குற்றவாளிகள். போக்குவரத்திற்கு இடையூறு செய்வது, அழகுச்சென்னையை அசிங்கப்படுத்துவது, சுகாதாரக் கேடு விளைவிப்பது, நோய் பரப்புவது போன்ற சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒரு இலட்சம் 'குற்றவாளிகள்' சென்னையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் பால்மாடு வளர்ப்பவர்கள். வெள்ளையர்கள் சென்னப்ப நாயக்கரிடம் பட்டணத்தை விலைக்கு வாங்கிய காலத்திலிருந்தே இவர்கள் வாழ்கிறார்கள். ''இந்த நகரத்தை நாங்கள்தான் உருவாக்கினோம்'' என்று பெருமை பாராட்டிக் கொள்ளத் தெரியாத இந்த அப்பாவிகளில் கோனார்கள் முதல் தலித்துகள் வரை பல சாதியினரும் அடக்கம்.

சென்னை என்றாலே அடையாளம் காட்டப்படும் ஸ்பென்சர், எல்.ஐ.சி., சென்ட்ரல் போன்ற கட்டிடங்களைக் காட்டிலும் இவர்கள் மிகப் பழமையானவர்கள்.

அவர்கள் இன்று சட்டப்படி குற்றவாளிகள். நகரங்களில் விலங்குகள், பறவைகள் வளர்ப்பதைக் கட்டுப்படுத்தும் சட்டம் 1939-ஆம் ஆண்டிலேயே இயற்றப்பட்டது. நகரம் வளர வளர விதிகளும் வளர்ந்தன. நகரத்திலிருந்து பிடுங்கியெறியப்பட வேண்டியவைகளாக விதிமுறைகள் இவர்களைச் சித்தரித்தன. நகரை அழகுபடுத்த 80-90களில் கடன் கொடுத்தது உலக வங்கி. அதனுடைய 'அழகியல் விதிப்படி' உலகப் பொருளாதாரத்திற்குப் பணத்தின் மூலம் பங்களிக்கும் நபர்களே நகரில் வாழவேண்டும். இந்த ஆணையைச் சிரமேற் கொண்டு 1998-இல் தி.மு.க. அரசு தமிழக நகரங்களில் விலங்குகள், பறவைகளைக் கட்டுப்படுத்தும் சட்டத்தை இயற்றியது.

ஸ்டாலினைப் பதவி நீக்கம் செய்த புரட்சித்தலைவி, ஸ்டாலின் காலத்துச் சட்டத்தை மட்டும் நீக்கவில்லை. மாறாக அந்த ஆணையை, ''நீங்களெல்லாம் சட்டப்படி குற்றவாளிகள்'' என்ற அறிவிப்பை பால்மாடு வளர்ப்போர் வீட்டுக் கதவுகளிலெல்லாம் ஒட்டச் செய்தார். இதற்குப் பின்னரும் அவர்கள் போக மறுத்தார்கள்.

மாடுகள்தான் அவர்களுடைய வாழ்வின் ஆதாரம். அந்த ஆதாரத்தைப் பிடுங்கினால், அவர்களையும் நகரத்திலிருந்து பிடுங்கியெறிந்து விடலாம் என்பது அரசின் திட்டம். உடனே 'ஆநிரை கவர்தலுக்கு' ஆணை பிறப்பித்து விட்டார், கொள்ளைக் கூட்டத் தலைவி.

''எடப்பயலுக ராத்திரி 1 மணிக்கு நல்லாத் தூங்குவானுங்க, மாட்ட ஓட்டிட்டு வந்துரலாம்'' என்று மாநகராட்சி ஊழியர்களைப் போலீசு வழி நடத்தியது. மாடுகள் கூட்டம் கூட்டமாக லாரியில் ஏற்றப்பட்டன; ஏற்றும்போது அடிபட்ட மாடுகள், கீழே விழுந்து இறந்தன; அவை சினைமாடுகள்! கண்ணெதிரே குற்றுயிரும் கொலையுயிருமாய்க் கொண்டு செல்லப்படும் தமது செல்வங்களைக் கண்டு இரத்தக் கண்ணீர் வடித்தார்கள் பால்காரர்கள். அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

சட்டத்தின்படி பால்காரர்கள்தான் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். தாயுள்ளம் கொண்ட புரட்சித்தலைவியோ மாடுகளைச் சிறை வைத்து விட்டுப் பால்காரர்களைச் 'சுதந்திரமாக வாழ' அனுமதித்திருக்கிறார். சென்னை நகரின் 160 வட்டங்களிலிருந்து (வார்டுகள்) நூற்றுக்கணக்கான மாடுகள் பிடிக்கப்பட்டு பெரம்பூர், புதுப்பேட்டை, காஞ்சிபுரம் அருகேயுள்ள குன்னம் கிராமம் ஆகிய இடங்களில் பட்டிகளில் அடைக்கப்பட்டிருக்கின்றன. சும்மாயிருக்கும் கோவில் யானைகளுக்கு ஒரு மாதம் சிறப்பு உணவு, ஓய்வு! உழைப்பாளிகளுக்குச் சொந்தமான மாடுகளுக்கு - கோமாதாக்களுக்கு - சிறை!

உண்மையில் அவை சிறை வைக்கப்படவில்லை; கொலை செய்யப்படுகின்றன. பட்டியில் அடைபட்ட மாடுகள் பாம்புக்கடி, கீரிக்கடியாலும் ஒன்றையொன்று முட்டிக் கொண்டும் இறந்து போகின்றன. சாணி, மூத்திரம் இவற்றைச் சுத்தம் செய்யாத காரணத்தால் சேறு - சகதியில் சிக்கிக் கொண்டு அவதிப்படுகின்றன. பால் கறக்காமல் மடி கனத்துப் போய் துடித்துச் செத்துப் போகின்றன. பராமரிக்க ஆட்கள் இல்லை. கால் வயிற்றுக்கும் பற்றாத தீவனம் எல்லா மாடுகளுக்கும் பொதுவாகக் கொட்டப்படுவதால் திறமையுள்ள மாடுகள் முடிந்ததைச் சாப்பிட, வலிமையற்றவை பசியால் வாடுகின்றன; வழி தவறிய குழந்தைகள் போலப் பரிதவிக்கின்றன.

தினசரி 10 முதல் 15 மாடுகள் வீதம் மொத்தம் 600 மாடுகளுக்கும் மேல் உயிரை விட்டிருக்கின்றன. இறந்த மாடுகளைக் குதறும் வெறி நாய்கள் பட்டியை மொய்க்கின்றன. 10,000 முதல் 15,000 ரூபாய் வரை கொடுத்து விலைக்கு வாங்கிய அந்தச் செல்வங்கள் அனாதைகளைப் போல மரிக்கின்றன. அவர்களுக்கு மாடு

**''பசுவுக்கும் பாப்பானுக்கும் பாவம் பார்க்கக் கூடாதுப்பா'' - இது மாடு வளர்ப்பில் பால்காரர்கள் 'பட்டுத்' தெரிந்து கொண்ட அனுபவம்.**

**செல்லம்மாள்**





படிப்பகம்

www.padippakam.com

களைக் காப்பாற்றும் வழி தெரியவில்லை.

அவர்கள் நீதிமன்றத்திற்குப் போனார்கள். அவர்களுக்காக வாதாடும் வழக்குரைஞர் பேரா. கிருஷ்ணசாமி அ.தி.மு.க.வைச் சேர்ந்தவராக இருந்தபோதும், முடிந்தவரை நீதிமன்றத்தில் போராடுகிறார்.

அவர்கள் தண்ணீருக்காக வீட்டு வாசலில் அசையாமல் நிற்கும் மாடுகளைப் போல, வறண்டு போன நம்பிக்கையுடன் நீதிமன்ற வாயிலில் காத்து நிற்கிறார்கள். விசாரணை தள்ளிப் போக தள்ளிப் போக, நீதிமன்றத்தில் காத்துக் கிடக்கும் பால்காரர்களின் எண்ணிக்கை குறைகிறது; பட்டியில் செத்துக் கிடக்கும் மாடுகளின் எண்ணிக்கை கூடுகிறது.

பால்மாடுகளின் உயிரையும், பால்காரர்களின் வயிறையும் பற்றிக் கவலைப்படாத நீதிபதி, டிகிரி காப்பி குடிப்பவர்களின் நாக்கைப் பற்றிப் பெரிதும் கவலைப்பட்டார்: ''மாடுகளை வெளியேற்றும் மாநகராட்சி, கறந்த பாலைக் குடிப்பவர்களுக்கு என்ன மாற்று செய்யப் போகிறது?'' ஒருவேளை டிகாசன் காப்பி குடிக்கும் வர்க்கத்தின் ஜீவாதார பிரச்சினையாக இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தால், நீதிமன்றம் உடனே 'நீதி' வழங்கியிருக்கக் கூடும்.

காஞ்சி மடத்து நாசி முனையில் குன்னம் கிராமத்தில்தான் பட்டியில் வதைபடும் மாடுகள் செத்து அழுகி நாறிக் கொண்டிருக்கின்றன. மூச்சுக்கு

**''மாடுகள் இருக்குமிடம் அசுத்தமா, நீங்களே பாருங்கள், இங்கே கொசு இருக்கிறதா? ஏன் அண்ணாநகர், அடையாறு பங்களாப் பகுதிகளில் கொசு இல்லையா?''**

**அலமேலு தனது மாமியாருடன்**



முந்நூறு தடவை கோமாதா என்றும் மாட்டை வெட்டுவது தாயை வெட்டுவது போல என்றும் உருகும் சங்கராச்சாரிகள் எவரும் செத்த கோமாதாவை அடக்கம் செய்யவரவில்லை, கோசாலைகள் அமைக்கவுமில்லை. கோமாதாவுக்காக முசுலீம்களைக் கொலை செய்யும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் இந்த ஏழைகளின் கோமாதாக்களுக்காக வாயைக் கூடத் திறக்கவில்லை.

அவர்கள் கதறுகிறார்கள், கண்ணீர் விடுகிறார்கள். ''கருணை காட்டுங்கள்'' என்று மாநகராட்சி ஆணையர் விஜயகுமாரிடம் கோரிக்கை மனுக் கொடுத்துக் கெஞ்சினார், விதவையான பால்காரர் வரலட்சுமி. ''25 வருசமா சம்பாதிச்சது போதும்., தொழிலை மாத்திக்க...'' என்று மிரட்டினாராம் ஆணையர். பரம்பரையாக இந்தத் தொழிலைச் செய்து வரும் சென்னை நகரின் மூத்த குடிகள் என்ன சம்பாதித்திருக்கிறார்கள்? மகாலட்சுமியின் மறு அவதாரம் என்று கொண்டாடப்படும் கோமாதாவின் 'புனிதமான' மூத்திரத்திலும் சாணத்திலும் புரண்டு கொண்டிருக்கும் 'அண்ணாமலை' களில் எத்தனைப் பேர் கோடீசுவரராகியிருக்கிறார்கள்?

எவ்வளவு சம்பாதித்திருப்பீர்கள் என்ற கேள்விக்கு மட்டும் அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. இன்று வரை அப்படியொரு கேள்வியைத் தமக்குத் தாமே அவர்கள் கேட்டுப் பார்த்து விடை தேடியதில்லை. பல்லாண்டுகளாகத் தொழில் செய்பவர்களுக்குக் கூட மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கவில்லை; குறைந்து கொண்டுதான் போகிறது. மாட்டைப் பராமரிக்க, வைத்தியம் பார்க்க, சினை பிடிக்க வைக்கச் செலவு செய்வது, பால் வற்றிய மாடுகளை வாங்கிய விலையில் ஐந்தில் ஒரு பங்குக்கு விற்பது, கந்து வட்டிக்குப் புதிய மாடு வாங்குவது, பால் விற்ற காசை வட்டிக்குக் கொடுப்பது...

மீண்டும் மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேரும் இந்தச் செக்கு மாட்டு வாழ்க்கையிலிருந்து தப்பிக்க எண்ணிப் பலர் பிள்ளையைப் படிக்க வைத்தார்கள். ஆனால் ''நீ மாடு மேய்க்கத்தான் லாயக்கு'' என்று அவர்களுடைய பொருளாதாரநிலை பிள்ளைகளைப் பள்ளியிலிருந்து துரத்தியடித்து விட்டது.

''மாடுகளை முளையில் கட்டியிருக்கிறோம்; நாங்களோ மாட்டோடு கட்டப்பட்டிருக்கிறோம்'' என்று தன் வாழ்க்கை வரலாற்றை இரண்டு வரிகளில் சொன்னார், வரலட்சுமி. கவிதை போல் இருக்கிறதா? இது கவிதையல்ல, வாழ்க்கை. இருப்பினும் இதை வாழ்க்கை என்று அழைக்க முடியுமா என்ன? மாடுகள் வாழ்க்கை நடத்துகின்றன எனக் கூறலாமெனில், இவர்களுடையதையும் வாழ்க்கையென்றே அழைக்கலாம்.

● ● ●

மாநகரில் மாடு வளர்க்கும் துன்பம் சொல்லில் அடங்காதது. கிராமத்திலிருந்து வந்து நகரத்தை உருவாக்கிய மனிதன், தன் படைப்பிற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொண்டான். ஆனால், மாடுகள்? அவற்றுக்கு நகரத்துக்குள்ளே ஒரு கிராமத்தை உருவாக்கித் தர வேண்டியிருக்கிறது. சென்னை ஜாபர்கான் பேட்டையில் வாழும் இவர் பத்து மாடுகளுக்கும் தலையைச் சுற்றிக் கடன்களுக்கும் சொந்தக்காரர். பிள்ளை வளர்ப்பின் துன்பம் குழந்தைப் பருவம் வரைதான். ஆனால் மாடு வளர்ப்பு? அவர்கள் 24 மணி நேரமும் உறக்கமும் விழிப்புமற்ற நிலையிலேயே வாழப் பழகியிருக்கிறார்கள்.

அதிகாலை 4 மணிக்கு எழுந்து, தொழுவத்தின் கூளங்களைப் பெருக்கி, சாணியைக் குழியில் போட்டு, கழுவி விட்டு, மாட்டுக்குத் தண்ணீர், வைக்கோல், புல் வைத்து, 6 மணிக்குள் பால் கறந்து, கறக்கும்போது வாங்கும் உதையை கோபப்படாமல் சகித்துக் கொண்டு, தேநீர்க் கடைகள் - வீடுகள் சொசைட்டிக்குப் பிள்ளைகள் மூலம் கொடுத்தனுப்பி, பெண்கள் அண்டை வீடுகளில் கழனித் தண்ணீர் சேகரித்து, 10 மணிக்கு மாட்டுக்குத் தண்ணீர் காட்டி, அப்புறம் கம்மங்கூழ் காய்ச்சி, புண்ணாக்கு உடைத்துப் போட்டு, மதியம் மாடுகளுக்கு உண்ணி எடுத்து, குளம்புப் புண்ணுக்குச் சீழ் துடைத்து, புழு எடுத்து, அதிகமான நோய் என்றால் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று... முழுக் குடும்பமும் உழைக்க வேண்டும்.

காலை செய்த வேலைகளனைத்தும் மாலையில் இன்னொரு சுற்று. இரவு 11 மணிக்குப் படுத்தால் மீண்டும் 4 மணிக்கு எழவேண்டும். மனிதனுக்கே தண்ணீர் கிடைக்காத சென்னையில் மாட்டுக்காக நல்ல நீரைத் தேடி, மாநகராட்சி டேங்குகள், திருகு குழாய்கள், நல்ல கிணறுகள், அடிகுழாய்கள் என்று அலைந்து திரிய வேண்டும். புல்லுக் கட்டும், வைக்கோலும் கிராமங்கள் போலக் கையருகில் கிடைக்காது.

www.padippakam.com

மாட்டு வண்டிகளுக்கும், மூன்று சக்கர மனித வண்டிகளுக்கும் தடை விதிக்கப் பட்டிருக்கும் சென்னையில், புறநகர்ப் பகுதிச் சந்தைகளுக்குச் சென்று கீரைக் கட்டு விலையில் விற்கும் புல்லுக் கட்டை வாங்கி வரவேண்டும். கண்ணெதிரே பாலைக் கறப்பதற்கு வீடுகளுக்கும், சங்கத்துக்கும் மாடுகளை (மாநகராட்சி ஆணைக்குப் பயந்து கொண்டு) ஓட்டிச் செல்ல வேண்டும்.

அவர்கள் ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் உழைப்பார்கள்? நல்லது - கெட்டதுக்கும் விடுமுறை எடுக்க முடியாத அவர்களுடைய இந்த ஜீவனத்தில் எது விழிப்பு, எது உறக்கம், எது வாழ்க்கை?

இப்போது இந்த 'வாழ்க்கையை'ப் பாதுகாத்துக் கொள்வதற்கே அவர்கள் இரவு முழுவதும் விழித்திருக்கிறார்கள். நள்ளிரவில் மாடு திருடும் மாநகராட்சி அவர்களுடைய உறக்கத்தையும் சேர்த்துத் திருடிவிட்டது. முன்பு நள்ளிரவில் 'அம்மா' என்று சத்தம் கேட்டால் மாட்டைக் கவனிக்க உடனே விழித்துக் கொள்வார்கள். இப்போது சத்தம் கேட்கவில்லையென்றால் பதறி விழிக்கிறார்கள். மாடு இருக்கிறதா என்று இரவு முழுவதும் அவ்வப்போது பார்த்துக் கொள்கிறார்கள். பகலில் பராமரிப்பு, இரவில் காவல்!

அவர்களைப் பொருத்தவரை மாடுகளைப் பறிகொடுப்பதென்பது பணத்தைப் பறிகொடுப்பதும், வாழ்க்கையைப் பறிகொடுப்பதும் மட்டுமல்ல; கூடுதலாக, ஒரு உறவைப் பறிகொடுக்கும் அவலமும் இதில் இழையோடுகிறது.

இது மிருகவதைத் தடுப்பு (Blue Cross) சீமாட்டிகளின் இரக்கவுணர்ச்சியோ, கோமாதா பக்தர்களின் மதவுணர்ச்சியோ அல்ல; சிறுவீத உற்பத்தி தோற்றுவிக்கும் உண்மையான அவலம்.

எங்களைத் துரத்தாதீர்கள் என அவர்கள் மன்றாடுகிறார்கள். எங்கு போவது, எப்படிப் போவது? பழகிய இடம், குழந்தைகள் படிப்பு போன்றவற்றுக்காக மட்டுமல்ல, மாடுகளுக்காகவும்தான். மாடுகள் இடம் மாறினால் கறக்காது; அளவும் குறையும், என்ன செய்வது? வெளியிடங்களில் கறக்கும் பாலை யாரிடம் விற்பது? குழந்தைகளும், வயதானவர்களும் நகரினுள் இருக்க, ஆண்கள் மட்டும் மாடுகளுடன் வெளியேறுவதா? கறந்து 4 மணி நேரத்திற்குள் விற்கவில்லையென்றால் பால் வீணாகிவிடுமே? சென்னைக்கு வந்து போக போக்குவரத்து கட்டுப்படியாகுமா?

அவர்களுடைய கவலைகளுக்குக் காது கொடுக்க யாருமில்லை. ''பாலை அரசாங்கம் கொள்முதல் செய்யுமானால் இடம் மாறலாம்'' என்கிறார் வழக்குரைஞர். விவசாயிகளிடம் கொள்முதல் செய்த பாலுக்கே பலகோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கும் அரசு, கைத்தறித் துணியும் நெல்லும் கொள்முதல் செய்ய மறுத்து, கோடிக் கணக்கான மக்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் அரசு பால்காரர்களுக்கா இரக்கம் காட்டப் போகிறது?

பால் பண்ணைகள் தனியார் முதலாளிகளின் கையில். கோமாதாவும் கோகுலமும் இன்று பாக்கெட் பால் நிறுவனங்களின் பெயர்களில் உலவுவதால், உண்மையான 'கோமாதா'க்கள் வெளியேற்றப்படுகிறார்கள். காலிப் பாலுறைகளைப் போலக் குப்பையில் எறியப்படும் இம்மக்கள் கலங்குகிறார்கள். ''எங்களிடம் யாருக்குமே நன்றியில்லையா?'' என்று முறையிடுகிறார்கள்.

ஆறுதல் கூறவோ, ஆதரிக்கவோ யாருமில்லை. மணக்க மணக்க இளஞ்சூட்டோடு பாலைக் கறந்து வாங்கியவர்கள், கன்று ஈன்றவுடன் சத்து நிறைந்த சீம்பாலைச் சொல்லி வைத்து வாங்கியவர்கள், தங்கள் புது வீடுகளில் கோமாதாவை நுழைத்துப் புனிதப்படுத்திக் கொண்டவர்கள், பசுவுக்குப் பிண்டம் கொடுத்து முன்னோருக்கு நற்கதி தேடியவர்கள், சடங்குகளின் போது தலையில் தெளிக்கக் கோமியம் கேட்டுக் கெஞ்சியவர்கள் - யாரையும் காணோம்!

''நாங்கள் போய்விட்டால் கோமியத்துக்கு என்ன செய்வார்கள்? அதையும் பாக்கெட்டுல வாங்கிக்கு வாங்களோ'' என்று கூறி ஏளனமாய்ச் சிரித்தார், பால்காரர் செல்லம்மாள். நடக்கக் கூடியதுதான். டொயோட்டோ கார் அத்வானியின் ரதமாக அவதரிக்கும் போது பாக்கெட்டுக்குள் கோமியம் நுழையத் தடை என்ன?

''பசுவுக்கும் பாப்பானுக்கும் பாவம் பார்க்கக் கூடாதுப்பா'' என்றார் செல்லம்மாள். இது மாடு வளர்ப்பில் பால்காரர்கள் 'பட்டு'த் தெரிந்து கொண்ட அனுபவம். எருமை எமனின் வாகனம்; அது கறுப்பானது. எனவே அமங்கலமானது. பசுவோ கோமாதா - தாய். அம்மாவிடம் பட்ட அடி இந்தப் பழமொழியின் முழுப் பொருளையும் அவர்களுக்கு உணர்த்திவிட்டது.

எனினும் தங்களைத் துரத்துவது யார் என்று அவர்களால் புரிந்து கொள்ள இயலவில்லை. ஜெயலலிதாவா, மாநகராட்சியா, ஸ்டாலின் போட்ட சட்டமா, பண்ணை முதலாளிகளின் பாக்கெட் பாலா? அவர்களுக்குப் புரியவில்லை. ''மாடுகள் இருக்குமிடம் அசுத்தமா, நீங்களே பாருங்கள், இங்கே கொசு இருக்கிறதா? ஏன் அண்ணா நகர், அடையாறு பங்களாப் பகுதிகளில் கொசு இல்லையா?'' என்று கோபமாகக் கேட்கிறார் பால்காரர் அலமேலு. ''சாக்கடை அடைப்பிற்குக் காரணம் சாணக் கழிவுகளல்ல; கூவமும் கழிவுநீர் பராமரிப்பின்மையும், கட்டிடக் கழிவுகளும் தான்'' என்று பால்காரர்கள் வாதிடுகிறார்கள்.

''கால்நடைகள் காலாற நடப்ப

**கொடுங்கையூர் நீலச் சிலுவையின் (Blue Cross) மாட்டுப் பட்டி. இங்கே 3000 மாடுகளுக்கும் மேல் அடைக்கப்பட்டு, 300 மாடுகளுக்கும் மேல் கொல்லப்பட்டன.**





படிப்பகம்

www.padippakam.com

தற்கும், சினையுறாத மாடுகளின் தீவனச் செலவைக் குறைப்பதற்கும்தான் வெளியே விடுகிறோம்; இனி கட்டியே வைக்கிறோம்'' என்று கெஞ்சுகிறார்கள். ''அபராதமா - கட்டுகிறோம்; இலஞ்சம் வேண்டுமா - தருகின்றோம்; தயவு செய்து துரத்தாதீர்கள்'' என்று மன்றாடுகிறார்கள்.

மனித நாகரிகத்தின் மழலைப் பருவம் நகர நாகரிகத்திடம் மன்றாடுகிறது; உழுது பயிரிடவும் உற்பத்தி செய்யவும் கற்பதற்கு முன்னால் மனித குலம் அறிந்திருந்த தொன்மையான ஆநிரை மேய்க்கும் தொழிலைச் செய்யும் மக்கள், நரைத்துக் கிழடு தட்டிய முதலாளித்துவத்திடம் உயிர்ப் பிச்சை கேட்கிறார்கள்.

● ● ●

அவர்களிடமிருந்து விடை பெறுகிறோம். நீர் பிடிக்கும் பெரிய பிளாஸ்டிக் டிரம்கள் கொடியிலிருக்கும் அழுக்குத் துணிகள், இறைந்து கிடக்கும் பொருட்கள், ஏதுமறியாமல் அசை போடும் மாடுகள், உழைப்பின் உரமேறிய உடல், அழுக்குப் புடவை, கரடு முரடான கைகள், உறங்காத கண்கள், உறைந்து போன கருப்பு முகம், வெகுளித்தனமான பேச்சு - இவை அனைத்திலும் பிரிக்கவொண்ணாமல் ஊடுருவும் துயரம் நம்மையும் விட்டு வைக்கவில்லை. ஆறுதல் கூடச் சொல்லவியலாத கையறு நிலையில் விடை பெறுகிறோம். வெளியே வருகிறோம்.

தெருவில் மாடுகள் இல்லை. மாருதி கார்கள் நிற்கின்றன. இது இடையூறில்லை. 100 பேர் செல்லும் ஒரு நகரப் பேருந்தின் இடத்தை ஆக்கிரமிக்கும் 2 கார்கள், 4 மனிதர்கள். இது ஆக்கிரமிப்பில்லை. சாலைகளில் கம்பளிப் பூச்சியுாய் நெளியும் கார்களின் புகையை மக்களின் நுரையீரல் சுத்தம் செய்கிறது. மூக்கு கரியாய்ச் சிந்துகிறது. இது சுகாதாரக் கேடு இல்லை. சில ஆண்டுகளில் பல இலட்சமாகப் பெருகிவிட்ட கார்களுக்குத் தடையில்லை. என்ன இருந்தாலும் மாட்டையும் காரையும் ஒப்பிட முடியாதுதான். ஏனெனில் கார் நிறுவன உரிமையாளர்கள்: மாருதி, டாடா, ஹூண்டாய், ஃபோர்டு, மகேந்திரா... மாட்டின் உரிமையாளர்களோ: அலமேலு, வரலட்சுமி, செல்லம்மாள்.

தெருவில் மாடுகள் இல்லை. அவை போக்குவரத்தை மறிக்கவுமில்லை. நகரின் திசைகளை பிரும்மாண்டமான விளம்பரப் பலகைகள்தான் மறைக்கின்றன. எனினும் மாடு உற்பத்தி செய்யும் பாலின் மதிப்பை விட, விளம்பரப் பலகைகள் உற்பத்தி செய்யும் வர்த்தகத்தின் மதிப்பு மிகவும் அதிகமாயிற்றே!

தெருவில் மாடுகள் இல்லை. அவை வெளியேற்றப்பட்டு விட்டன. ஆனால் சட்ட விரோதமாக ஆக்கிரமித்திருக்கும் கட்டிடங்களை வெளியேற்ற முடியாது. பட்டியிலும் அடைக்க முடியாது. எனவே, லஞ்சத்தால் அவை சட்டபூர்வமாக்கப்படுகின்றன.

தெருவில் மாடுகள் இல்லை. ஆனால், உயர்ஜாதி நாய்கள் தம் எஜமானை இழுத்துக் கொண்டு உலாப் போகின்றன. இருப்பினும் அவற்றை வெளியேற்ற முடியாது. நாகரீக உலகின் திருட்டுச் சொத்தைப் பாதுகாக்க நாய்கள் அவசியம்.

நகரில் மீண்டும் கோட்டை எழுப்பப்படுகின்றது. அகழியும் தோண்டப்படுகிறது. மாடுகள், மாடாய் உழைக்கும் மனிதர்கள், ரிக்ஷாக்கள், கைவண்டிகள், மாட்டு வண்டிகள், நடைபாதை வியாபாரிகள், குடிசைப்பகுதிகள் அனைவரும் - நகரின் அழகைக் கெடுக்கும் அனைத்தும் கோட்டையை விட்டு வெளியேற வேண்டும். கோட்டையில் இருக்கும் மேல் வருணம்-வர்க்கத்திற்கு சேவை செய்ய மட்டும் கீழ் வருணம்-வர்க்கம் உள்ளே வரலாம்; வர வேண்டும். வந்தால்தான் சோறு. ஆனால், அவர்களின் குடும்பம், குடிசை, மகிழ்ச்சி, பண்பாடு அனைத்தும் கோட்டைக்கு வெளியே வெகு தூரத்தில்தான் இருக்க வேண்டும். இது கற்கோட்டையல்ல; மறுகாலனியத்தைப் பாதுகாக்கும் சட்டங்களே இக்கோட்டையின் கற்கள். அகழியோ நம் சிந்தனையில் தோண்டப்படுகிறது. வருண-வர்க்க ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ளும் சிந்தனை அகழியாய் இருந்து கோட்டையைப் பாதுகாக்கிறது.

தெருவில் மாடுகள் இல்லை; நகரம் சுத்தம் செய்யப்படுகிறது. மெரினா கடற்கரையின் குப்பைகளைச் சலித்தெடுக்கும் இயந்திரம் ஒரு குறியீடு. அந்த எந்திரத்தின் இரும்புக் கரங்கள் ஏழைகளை மட்டும் சலித்தெடுத்து வாரி வெளியே எறிகின்றன. குப்பைகளில் பால் மாடுகளும் பால்காரர்களும் அடக்கம்.

எனினும் இது பசுக்கொலை அல்ல; வேள்வி. வேதநெறிப்படி ஒவ்வொரு வேள்விக்கும் ஒரு எஜமான் உண்டு. இந்த வேள்வியின் எஜமான் உலக வங்கி; தீயில் விழும் மாட்டைத் தின்னக் காத்திருக்கும் தேவர்கள் பன்னாட்டு நிறுவனங்கள். இந்த வேள்வியின் பெயர் ''எழில்மிகு சென்னை''. செத்துப் போன சங்கராச்சாரியின் கூற்றுப்படி தேவர்களின் அருளைப் பெற பசுக்களைக் கொல்வது பாவமில்லை, அது தருமம்.

சென்னையைச் சுத்தமாக்கிப் புனிதப்படுத்துவதற்காக ஜெயா - ஆர்.எஸ்.எஸ். கும்பல் புரோகிதர்களாக இருந்து நடத்தும் இந்த வேள்வியில் பலியிடப்படும் பசுக்களுக்காக அழுவதற்கு யாருமில்லை - பால்காரர்களைத் தவிர.

— *செய்தியாளர்கள்:*
**வீராச்சாமி, சத்யா, பிரியா**

*நன்றி:*


**பால் உற்பத்தியாளர் சங்கம், சென்னை, வழக்கறிஞர் பேரா. கிருஷ்ணசாமி, *பால்காரர்கள்:* ஏழுமலை, அலமேலு, பச்சையப்பன், மாணிக்கம், துரை செல்லம்மாள் *மற்றும்* வரலட்சுமி.**

## சென்னை மாடுகளைக் கொல்லும் நீலச் சிலுவை சங்கம்

விலங்குகளை நேசிக்கும் நீலச்சிலுவை சங்கம் செஞ்சிலுவை சங்கம் போல உலகெங்கும் செயல்படுகிறது. இந்தியாவிலும் மத்திய - மாநில அரசுகளின் நிதி உதவியோடு விலங்குகள் மீதான நேசத்தை விளம்பரங்களின் உதவியால் காட்டி வருகிறது. மேனகா காந்தி இத்துறை அமைச்சராக இருந்தபோது போட்ட ஆட்டம் கொஞ்சநஞ்சமல்ல. இவரது கணவர் இறந்துபோன சஞ்சய்காந்தி நெருக்கடி நிலையின் போது, ஏராளமான ஆண்களை காயடித்துப் புகழ்பெற்றார்.

இந்த மனித நேயரின் மனைவி, விலங்குகளுக்காக ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபாயை தன் பினாமி பெயரில் ஏப்பம் விட்டது சமீபத்தில் அம்பலத்திற்கு வந்திருக்கிறது. மொத்தத்தில் பணக்காரச் சீமாட்டிகளின் பொழுது போக்கிற்காக நடத்தப்படும் இச்சங்கம், சென்னையில் பிடிக்கப்படும் மாடுகளைப் பராமரிக்க பொறுப்பேற்றிருக்கிறது. அந்தப் பட்டிகளில் தண்ணீர் கூட காட்டாமல் நூற்றுக்கணக்கான மாடுகளைக் கொன்ற நீலச் சிலுவைச் சங்கம் தனது பொறுப்பையும் பொழுதுபோக்கையும் செம்மையாக செய்து வருகிறது.

www.padippakam.com



# தகஜ ஞு தகதிமி... தாளமில்லை...

# மாடு வெட்டாமல் மிருதங்கமில்லை

*"**தா**னாக மரித்த 'கோ'வின் சருமத்தைத்தான் "ஸங்கீத வாத்யங்களுக்கு எடுத்துக் கொள்ளலாம். ஏனென்றால் ஸங்கீதம் தெய்வபரமானதாக இருக்கிறதனால். ஸ்வாமி கோவிலிலேயே வாத்யங்கள் வாசிக்க வேண்டித் தானே இருக்கிறது? ஆனால், அதற்காக உயிருள்ள கோவை உபயோகமாயில்லை என்பதற்காக வதைத்துத் தோலை உரிப்பது என்றால் அந்த ஸ்வாமி க்ஷமிக்கவே மாட்டார்"*

- செத்துப் போன சீனியர் சங்கராச்சாரி.

ஆனாலும் அந்த ஸ்வாமி பார்ப்பனர்களை மட்டும் க்ஷமித்துக் (மன்னித்துக்) கொண்டுதான் இருக்கிறார். இன்று சங்கர மடத்தில் மிருதங்கங்களும், தவில்களும் பரப்பும் அந்த தெய்வீக சங்கீதம் வெட்டுப்பட்ட கோமாதாவின் தோலிலிருந்துதான் சுரக்கிறது.

தானாக செத்துப்போன மாட்டின் தோலை உரித்துத்தான் 'ஸங்கீத வாத்யம்' செய்ய வேண்டுமென்றால், அப்பேர்ப்பட்ட ஜீவகாருண்ய வாத்தியமாக நம்மிடையே இருப்பது பறை மட்டும்தான். இதைக் கேட்டு ரசிப்பதற்கு பகவான் ஒப்புக் கொண்டாலும் பார்ப்பனர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

"ஸொக சுகா ம்ருதங்க தாளமு" - "சுரசுத்தமான மிருதங்க தாளத்துடன் இசைபாடி உன்ன மயங்கச் செய்யும் தீரன் எவனோ" என்ற தியாகய்யர் கீர்த்தனையும், பாலக்காடு மணி அய்யர், உமையாள்புரம் சிவராமய்யர் போன்ற மிருதங்க வித்வான்களும், டிசம்பர் சங்கீத சீசனும், சுப்புடு விமரிசனமும், மியூசிக் அகாடமி சொத்துத் தகராறும், கர்நாடக சங்கீதமும் - மிருதங்கம் இல்லாமல் இல்லை. வெட்டிக் கொல்லப்பட்ட பசுமாட்டின் தோல் இல்லாமல் மிருதங்கம் இல்லை.

இதெல்லாம் பெரியவாளுக்குத் தெரியாமலும் இல்லை. கச்சேரி தொடங்குவதற்கு முன்னால் "ஏம்பா இந்த மிருதங்கம் செத்த மாட்டின் தோலில் செய்யப்பட்டது தானா?" என்று மிருதங்க வித்வானிடம் யாரும் 'டெத் சர்டிபிகேட்' கேட்பதுமில்லை.

"இனி செத்த மாட்டின் தோலில் மட்டும்தான் மிருதங்கம் செய்ய வேண்டும்" என்று சட்டம் போட்டால் 'தகதிமி தகஜ ஞு' என்ற ஜதியை 'டண்டணகா டண்டணகா' என்று மாற்ற வேண்டியிருக்கும். இந்த உண்மை இசைக் கலைஞர்களுக்கும் இசைக் கருவி தயாரிக்கும் கைவினைஞர்களுக்கும் தெரியும்.

மிருதங்கத்தின் இருபக்கங்களும் வலந்தரை, தொப்பி என்று அழைக்கப்படுகின்றன. இரண்டு பக்கங்களிலும் மூன்று அடுக்குத் தோல் உண்டு. நடு அடுக்கு ஆட்டுத் தோலாலும், வெளி - உள்ளடுக்குகள் மாட்டுத் தோலாலும் செய்யப்படுகின்றன. இரு பக்கங்களையும் இணைத்து குறுக்காக கட்டப்படும் வாருக்கு எருமைத் தோல் வேண்டும். அடுத்து இரண்டு பக்கங்களின் நடுவிலும் ஒரு மையை ஒட்டுகிறார்கள். இந்த மை செம்மண் பகுதியில் கிடைக்கும் கருப்பாக உள்ள கிட்டாங்கல்லைப் பொடியாக்கிச் சலித்து அத்துடன் வடித்த சோற்றைக் கலந்து பிசைந்து தயாரிக்கப்படுகிறது. இந்த மையின் கனத்தைப் பொறுத்து சுருதி அளவு கூடியோ, குறைந்தோ இருக்கும்.

உலகிலுள்ள தாளக் கருவிகளிலேயே "அதிர்வலை அதிகம் தரும் நுண்ணயமிக்க தாளக்கருவி" என்று சர்.சி.வி.ராமனாலே'யே' பாராட்டப்பட்ட மிருதங்கத்தின் சிறப்பிற்கு



**பார்ப்பனியக் கொடுமை தாளாமல் தியாகய்யர் காலத்திலேயே கிறித்தவ மதத்திற்கு மாறிய தஞ்சை தலித்துகளின் காலில் மிதிபட்ட தோலைத்தான் தியாகய்யர் முதல் உமையாள்புரம் சிவராமய்யர் வரையிலான 'மேதைகளின்' கைவிரல்கள் தடவுகின்றன.**



படிப்பகம்

www.padippakam.com



*"நாங்கள் செய்யும் பொருள், பூஜை அறைவரை போகலாம். கோவில் களிலும் வைக்கப்படலாம். நல்ல காரியங்கள் அனைத்திற்கும் பயன் படலாம். மிருதங்கத்திலிருந்து எழும் இனிய நாதம் இறைவனுக்கும், மனித னுக்கும் பிடிக்கும். ஆனால் செய்பவர்கள் மட்டும் தீண்டத்தகாதவர்கள். நாங்கள் மாட்டுத் தோலை கையால் தொட்டு, காலால் மிதித்து (வேலையின் தன்மையால்) செய்து தரும் இசைக்கருவி வேண்டும். ஆனால் எங்களை மட்டும் கையை நீட்டி வெளியே நிறுத்துகிறார்கள். ஏன்?"*

**-திரு. ஏ.தாஸ், தஞ்சையைச் சேர்ந்தவர். 30 வருடமாக சென்னையில் தொழில் செய்யும் தலித் கிறித்தவர்.**

இந்தக் கட்டுமானமே, (குறிப்பாக மாட்டுத் தோல்தான்) காரணமாக இருக் கிறது. தானாக இறந்து போகும் மாட்டின் தோல் விறைத்துப் போவதால் பயன்படாது. அதிலிருந்து இனிய நாதம் கிடைக்காது என்பதால்தான் மிருதங்கம் செய்பவர்கள் கொழுப்புக் குறைவாக உள்ள, வெட்டுப்பட்ட மாட்டுத் தோலை மட்டுமே பயன் படுத்துகின்றனர்.

மாட்டுத் தோலினால் செய்யப்படும் ஏனைய தாளக் கருவிகள் தவில், தப்பு, செண்டை. ஆட்டுத் தோலிலிருந்து தபேலா, கிடிகிட்டி, உறுமி. கிடிகிட்டி கன்றுக்குட்டியின் தோலிலிருந்தும் செய்யப்படுகிறது. எருமைத் தோலி லிருந்து டமாரமும், உடும்புத் தோலி லிருந்து கஞ்சிராவும் எனப் பல விலங்குகளும் இசைக் கருவிகளாக அவதரித்திருக்கின்றன.

தானாக அவதரிக்கவில்லை. தலித் கைவினைஞர்கள் அவ்விலங்குகளை இசைக் கருவிகளாக மறுபிறப்பெடுக்க வைத்திருக்கிறார்கள். சுருதி சுத்தமாக மிருதங்கத்தை வடிவமைப்பதற்குத் தொழில் திறனுடன் நுண்ணிய இசை யறிவும் ஒரு கைவினைஞனுக்குத் தேவை என்பதை விளக்கத் தேவையில்லை.

தமிழிசை எனும் நுண்கலையைத் திருடி கருநாடக இசை என்று பெயர் மாற்றியதைப் போலவே, தண்ணுமை எனும் தாளக் கருவியை 'மிருதங்க மாக்கி' அபகரித்துக் கொண்டனர். இசை தந்த மொழியான தமிழைத் தீட்டாக்கி யது போலவே, இசைக் கருவி தந்த மக்களையும் தீண்டத்தகாதோராக்கித் தெருவில் நிறுத்தினர்.

தமிழும் தப்பும் பம்பையும் தாழ்த்தப்பட்ட மக்களும் தெருவில் நிற்க, அவாள் மட்டும் கருவறை யையும் கச்சேரி மேடையையும் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆவுரித்த பாவம் புலையனுக்கும், அதில் தாளம் போட்டு ஆராதனை நடத்தும் புண்ணியம் பார்ப்பானுக்குமாகப் பங்கி டப்பட்டது. இது இசைக் கருவியில் வருணாசிரமம் வகுத்த வேலைப் பிரிவினை.

மிருதங்கத்தை முதலில் கண்டு பிடித்த விஞ்ஞானி பரதமுனிவ ரென்றும், வாசித்த முதல் கலைஞன் நந்தி தேவனென்றும் 'வரலாற்று ஆதாரங்களை' அவாள் தயார் செய்து வைத்திருந்தாலும், 'ஆ'வின் தோலுக்கு மயிர் நீக்கிச் சுத்தம் செய்யும் அந்த ணர்கள் யாரும் அன்றுமில்லை; இன்றுமில்லை.

இன்றும் மிருதங்கம் தயாரிக்கும் கலைஞர்கள் தலித்துகள்தான். அவர் களும் 'ஹரிஜன ஸஹோதரர்கள்' இல்லை. தலித் கிறித்தவர்கள். பார்ப்பனியக் கொடுமை தாளாமல் தியாகய்யர் காலத்திலேயே மதம் மாறிய தஞ்சாவூர் தலித்துகள். இவர்கள் காலில் மிதிபட்ட தோலைத்தான் தியாகய்யர் முதல் உமையாள்புரம் சிவராமய்யர் வரையிலான 'மேதை களின்' கைவிரல்கள் தடவின, தடவு கின்றன. எனினும் தங்கள் அப்பன், பாட்டனின் உண்மை வரலாறு இந்த தலித் கைவினைஞர்களுக்குத் தெரிய வில்லை.

பண்ருட்டி பலாமரக் கட்டையை வாங்கிவந்து தவிலுக்குத் தோல் மூட்டும் கலைஞர்கள் தஞ்சை கீழ வாசலில் வசித்தனர். சுடுகாடு,



*"சட்டம் எங்களை அதிகம் பாதிக்காது. ஏனெனில் கறிக்காக எப்படியும் மாடுகள் வெட்டப்படும். தடை செய்யப்பட்ட 'காந்தி ஜெயந்தி' அன்று கூட அரசுத் தொட்டிகளில் வெட்டப்படுவதில்லையே ஒழிய வெளியில் வெட்டப்படுகிறது."*

**-திரு. முருகானந்தம், திருவாரூரைச் சேர்ந்த இசைவேளாளர், சென்னையில் 20 வருடங்களாக வசிக்கிறார்.**

www.padippakam.com

**மாடு, எருமை, உடும்பு... எனப் பல விலங்குகளும் இசைக்கருவிகளாக அவதரித்திருக்கின்றன.**

**தானாக அவதரிக்கவில்லை. தலித் கைவினைஞர்கள் அவ்விலங்குகளை இசைக் கருவிகளாக மறுபிறப்பெடுக்க வைத்திருக்கிறார்கள்.**



பள்ளிகள், மல வாடை ஆகியவற்றால் சூழப்பட்ட தஞ்சை வடக்குவாசலின் துப்புரவுத் தொழிலாளர் குடியிருப்பில்தான் 'உலகின் தலைசிறந்த தாள வாத்தியமான' மிருதங்கம் உருவாக்கப்பட்டது. இன்றும் மிருதங்கம், தபலா தயாரிக்கும் கலைஞர்களின் வாழ்விடம் வடக்கு வாசல்தான்.

பார்ப்பனர்களும், கருநாடக இசையும் தமது தலைநகரை சென்னைக்கு மாற்றிக் கொண்ட பின் தஞ்சையிலிருக்கும் இக்குடும்பங்களும் சென்னைக்கு இடம்பெயர்ந்தன. இருக்கும் ஒரு சில கலைஞர்களும் மெல்லிசைக் குழுக்களில் சேர்ந்து விட்டனர். ஒரு சிலர் விவசாயக் கூலி வேலை செய்து கொண்டு, பகுதி நேரமாக இசைக் கருவிகளைச் செய்து வருகின்றனர்.

சென்னையில் மிருதங்கம் வடிவமைக்கும் 50 கலைஞர்களில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தலித் கிறித்தவர்களே அதிகம். இன்றும் இவர்களுக்கு குடியிருக்க வீடு கூட (மாட்டுத் தோல் அசுத்தம் என்பதால்) சுலபமாகக் கிடைத்துவிடுவதில்லை. காகிதங்களையும், கழிவுகளையும் உண்டு வாழும் சென்னை மாடுகளைத் தவிர்த்து விட்டு, பச்சைப் புல் உண்ணும் மாடுகளின் தோல்களைத் தேடிச் சலித்து எடுத்து வாங்குகிறார்கள். இக்கலைஞர்கள். 100 தோல்களில் ஒரு தோல் மட்டுமே தேறும். 25 சதுர அடி கொண்ட ஒரு தோல் ஒரு கைவினைஞரின் ஒரு வருடத் தேவைக்குப் போதுமானது. ஆடு, எருமைத் தோல்களை சென்னையிலேயே வாங்குகிறார்கள். வருடத்தில் 4 மாதங்களுக்கு வேலையிருக்காது.

ஒரு மிருதங்கம் 3000 முதல் 6000 ரூபாய் வரை விற்கிறது. கச்சேரி முடிந்த பின் வித்வான்கள் தரும் மிருதங்கத்தை பராமரிப்பு செய்வதற்கு 500 முதல் 1500 ரூபாய் வரை கிடைக்கும். பசு வதைத் தடைச்சட்டத்தை இவர்கள் எதிர்க்கிறார்கள். சட்டம் வந்தாலும் தங்களுக்கு எப்படியும் தோல் கிடைக்கும் என்ற உண்மையை, ''மாடுகளை வெட்டாமல் மனிதன் வாழ முடியாது'' என்ற எதார்த்தத்திலிருந்து விளக்கிக் கூறுகிறார்கள். பசுவதைத் தடைச்சட்டத்தை ஆதரிக்கும் வித்வான்களோ ''வெளிநாட்டு மாடு, செயற்கைத் தோல் வைத்துச் சமாளிக்கலாம்'' என்று பசப்புகிறார்கள். வெளிநாட்டுப் பசு கோமாதா கணக்கில் வராது போலும்! செயற்கைத் தோலிலிருந்து ஓசைதான் வருமே ஒழிய இசை வராது என்பது இவர்கள் அறியாததல்ல. இருப்பினும் இசையா, பார்ப்பனியமா என்ற கேள்வி எழுந்ததும் இவர்களுடைய 'தீர்மானம்' பார்ப்பனியத்தின் மேல்தான் விழுகிறது.

என்ன செய்யலாம்? இந்தியாவின் சில பகுதிகளை ஏற்றுமதிப் - பொருளாதார மண்டலமென்று பிரித்து அங்கே வழக்கமான பொருளாதார - தொழிற் சங்க சட்டங்கள் செல்லாது என வைத்திருக்கிறார்களே, அதுபோல மிருதங்கத்துக்காக மட்டும் மாடு வெட்டலாம் என்று மேற்படித் தடைச் சட்டத்தில் ஒரு விலக்கு அளிக்கலாம். மனுநீதியில் பார்ப்பனர்க்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை ஒப்பிடும்போது இது ஒரு விசயமா என்ன?

● **மருத்துவன்**

செய்தி : **காளியப்பன், தஞ்சை**
**சத்யா, பிரியா, சென்னை**

***''26 வருடமாக மிருதங்கம், தபேலா, டோலக், கஞ்சிரா செய்து வருகிறேன். எனக்கு மிருதங்கம் வாசிக்கத் தெரியாததன் காரணம், மிருதங்கம் செய்வதால் கை கடினத் தன்மையுடன் மாறிவிடுகிறது. அதனால் விரல்களை மடக்கி வாசிக்க முடியாது. மேலும், மிருதங்கம் பயிற்சி செய்ய மிகுந்த நேரம் பிடிக்கும். இந்தத் தொழில் செய்வதால் அது முடியாமல் போய்விட்டது.***

**-திரு. ரவிக்குமார், ஆந்திராவைச் சேர்ந்த நாயுடு, சென்னை.**





படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் மக்களின் உணவு புலால்

முன்னாள் குடியரசுத் தலைவரும், சங்கர மடத்தின் தலைமைச் செயலருமான ஆர்.வி, தமது இளமையின் ரகசியம் மரக்கறி உணவு தானென்றும், புலால் உணவையே தடை செய்ய வேண்டுமென்றும் சமீபத்தில் பேசியிருக்கிறார். ஆர்.வி போன்ற ஜந்துக்கள் அழியாமலிருக்கக் காரணம் மரக்கறி உணவுதான் என்பது உண்மையாயின் முதலில் அதைத் தடை செய்ய வேண்டும் என்பது நம் கருத்து. அது ஒருபுறமிருக்க, கிடா வெட்டுத் தடைச் சட்டம் வந்ததிலிருந்து சைவம், ஜீவ காருண்யம் என்ற பிரச்சாரம் தீவிரமாகியிருக்கிறது. நமது நாட்டில் புலால் உணவு சாப்பிடாதவர்கள் அதிகம் போனால் பத்து சதவீதம் பேர். இவர்கள் பெரும்பான்மை மக்களை நாகரிகப்படுத்த முயற்சிப்பதும், இதைப் புலால் உண்ணும் பெரும்பான்மையினர் சகித்துக் கொள்வதும்தான் மிகப் பெரிய அவமானம்.

உண்மையைச் சொன்னால் குரங்கு மனிதனாக மாறியதற்கான காரணங்களில் மிக முக்கியமானது புலால் உணவு. இறைச்சி உணவுதான் குரங்கின் மூளை மனிதமூளையாக வளர்ச்சி பெறுவதற்குத் தேவையான வேதியியல் அடித்தளத்தை உடலுக்கு அளித்தது என்கிறார் எங்கெல்ஸ்.

மனிதனை மனிதக் குரங்காகப் பின்னுக்கு இழுப்பதுதான் பாசிசம் என்பது தோழர் ஜூலியஸ் பூசிக்கின் மதிப்பீடு. இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத்தான் பார்ப்பனப் பாசிஸ்டுகள் நம்மை மரக்கறிக்கு இழுக்கிறார்கள் போலும்! பஜ்ரங் தள் என்பது குரங்குப் படைதானே!

எனினும் தமிழ் மக்களை அவ்வளவு சுலபமாகக் குரங்காக்க முடியாது. காரணம் நாகரிகம். இசை, கலை, மொழி ஆகியவற்றைப் போல உணவுப் பழக்கமும், சுவையறிவும் ஒரு பண்பாட்டின் வளர்ச்சியை மதிப்பிடும் அளவுகோல். அவ்வகையில் தமிழ் மக்களின் உணவுப் பழக்கம் குறித்து சில அரிய செய்திகளை நாம் தெரிந்து கொள்வதன் மூலம் குறைந்த பட்சம் குரங்காக மாற்றப்படும் அபாயத்திலிருந்து தப்பிக்கலாம்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த பழந்தமிழ் மக்கள் புலால் உணவை, அதாவது ஊன் உணவை உணவுப் பழக்கமாகக் கைக்கொண்டிருந்தனர் என்பது சங்கப் பாடல்களிலும் கல்வெட்டுக்களிலும் வரலாற்று ஆதாரங்களாக இருக்கின்றன. ''அரி செத்து உணங்கிய பெருஞ்செந்நெல்'' என்று பெரும்பாணாற்றுபடை அரிசிச் சோற்றுடன் வெள்ளாட்டு இறைச்சியைக் கலந்து உண்ட செய்தியைச் சொல்கிறது. மதுரைக் காஞ்சியும் ''ஆடுற்ற ஊன்சோறு நெறியறிந்த கடிவாலுவன்'' தமிழர்கள் ஊன் சோறு உண்டதை உவப்பக்கூறுகிறது. அதாவது, அந்தக் காலத்தில் பிரியாணிக்கு அழகிய தமிழ்ச் சொல் ஊன்சோறு. ஏதோ நெய்தல் நிலத்திலும், மலை சார்ந்த குறிஞ்சி வாழ் மக்கள் மட்டுந்தான் தாவர உணவு மட்டுமின்றி, புலால் உணவுக்குப் போயினர் என்று யாரும் பொய் சொல்ல முடியாது. உழுதும், பயிரிட்டும் வாழ்ந்த மருத நிலத்து மக்களும் ஆமைக்கறியின் ருசி தெரியுமா உனக்கு, வேண்டுமானால் மருத நிலத்தில் வந்து தங்கிப்பாரு என்பது போல அழைக்கின்றனர்.

அறுசுவை என்றாலே சைவம்தான் என்று சரடு விடுபவர்களின் முகத்தில் புலால் உணவிலேயே விதவிதமாகச் சமைத்து உண்ட சங்கதிகளை உப்புக் கண்டம்போல் இலக்கியத்தில் காத்து வைத்திருக்கின்றனர் பழந்தமிழ் மக்கள். கடல் இறாலையும், வயல் ஆமையையும் கலந்து தின்ற சுவை வேண்டுமா? ''கடல் இறவின் சூடு தின்றும் வயல் ஆமைப் புழுக்கு உண்டும்'' என்ற 'பட்டினப்பாலை'க்கு வாருங்கள். மீன் இறைச்சியும் விலங்கு இறைச்சியும் சேர்த்துப் பொரிக்கும் பக்குவம் வேண்டுமா? ''மீன் தடிந்து விடக்கு அறுத்து ஊன் பொரிக்கும் ஒலி முன்றில்'' -இந்தப் பட்டினப்பாலை வரிகளை சங்கராச்சாரிக்குப் படிக்கக் கொடுங்கள். அவரும் தண்டத்தைப் போட்டுவிட்டுக் கண்டத்தைக் கேட்டுக் கத்த ஆரம்பித்து விடுவார்.

குறிஞ்சி நிலக் கடவுளான முருகனுக்குக் குறமகள் ''வலி பொருந்திய ஆட்டுக்கிடாயின் குருதியோடு கலந்த தூய வெள்ளரிசியைப் பலியாகச் சிதறுகிறாள்'' என்று திருமுருகாற்றுப் படை பழந்தமிழ் மக்களின் வழிபாட்டு உரிமையைச் சொல்கிறது. மலைகளில் ஏறித் தேன் சேகரித்து, முயல் வேட்டையாடி உழைப்பில் ஈடுபட்டிருந்த உண்மையான முருகனுக்கு ஊன் உணவே பிடித்தமானது.

முருகன், ஸ்கந்தனான பிறகு உண்டைக் கட்டியே அவனுக்கும் உணவாகிவிட்டது; இப்போது, சுடலை மாடன், ஸுடலை மாடஸ்வாமியாக மாற்றப்படுகிறார். இனி கிடாவெட்டும் கிடையாது. வெறும் பொங்கல்தான். அவாள் ''சுத்தம்' செய்ய விரும்புவது சுடலை மாடனை அல்ல - சூத்திரர், பஞ்சமரைத்தான்!

● சுடர்விழி

இந்தக் கட்டுரைக்கு ஆதாரமாகப் பயன்பட்ட நூல், வாசகர்கள் படிக்க வேண்டிய நூல், 'தமிழர் உணவு'.

*நூலாசிரியர்:* சே. நமசிவாயம்.

*வெளியீடு:* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

www.padippakam.com

# கிடா வெட்டத் தடை: மதுரை பாண்டிமுனி கோயில் மக்கள் கருத்து

**இந்தம்மா ஐயர் வூட்டுப் பொம்பளை; கறி, மீனு சாப்பிடாம இருக்கலாம். நாங்க கஷ்டப்படுற சனங்க. நாங்க இப்படித்தான் சாப்புடுறோம். இங்க வந்தா சட்டம் போட்டுத் தடுப்பீங்க. எங்க ஊருப் பக்கம் வாங்க. அங்க எந்தச் சட்டத்துக்கும் நாங்க கட்டுப்பட மாட்டோம்.''**

கிடாவெட்டிப் பொங்கல் வைக்கும் நாட்டார் தெய்வக் கோயில்களில் மிகவும் பிரபலமானது மதுரையை அடுத்துள்ள பாண்டி முனி கோயில். 'பாண்டி கோயில்' என்று பரவலாக அறியப்பட்டாலும், இங்கே மூன்று கோயில்கள் உள்ளன. அவை, பாண்டி கோயில், ஆண்டி கோயில், சமயக் கருப்பு கோயில் ஆகியன. இவற்றுள் பாண்டி முனீஸ்வரர் அசைவ உணவுப் பழக்கமுள்ளவர். ஒரு வாரத்திற்குச் சராசரியாக 500 ஆடுகள் நேர்த்திக் கடன் செலுத்தப்படுவதாக மக்கள் குறிப்பிடுகின்றனர். தினந்தோறும் நேர்த்திக்கடன். மொட்டையடித்தல், காது குத்துதல் போன்ற நிகழ்வுகளுக்குக் கறிச் சாப்பாட்டுடன் அன்னதானம் நடைபெற்று வந்தது. சாப்பாடு சமைக்கக் கோயிலருகில் மண்டபங்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. மண்டபக்காரர்கள், பூசாரிகள், பூக்கடைக்காரர்கள், பழம் விற்பவர்கள், கோயிலுக்குள் பிளாஸ்டிக் பொருட்கள் விற்பவர்கள், தேநீர்க் கடைக்காரர்கள், ஆடு உரிப்பவர்கள் என இக்கோயிலின் நிகழ்வுகளைச் சார்ந்து சுமார் 1000 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

சட்டம் வந்த மறுநாளே பாண்டி கோயிலுக்குச் சென்று 'புலனாய்வு' நடத்திய 'இந்து' நாளேடு, ''சட்டம் போட்ட பின்னரும் கிடா வெட்டுத் தொடர்கிறது'' என்று முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டது. உடனே கிடா வெட்டுபவர்களும் கோழி அறுப்பவர்களும் கைது செய்யப்பட்டனர். சட்டம் - ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு விட்டது. தமிழகம் முழுவதும் உள்ள பூசாரிகளையும் மக்களையும் இந்த நடவடிக்கை மிரட்டிப் பணியவைத்திருக்கிறது.

ஜெயலலிதாவின் மூட நம்பிக்கை புதிய தலைமைச் செயலக வளாகம் கட்ட சில ஆயிரம் கோடிகளைக் காவு கேட்கிறது. ஏழுமலையானோ சேட்டுகளின் கறுப்புப்பண சாம்ராச்சியத்தைப் பாதுகாக்கக் கோடிக்கணக்கில் லஞ்சம் கேட்கிறார். பாண்டி முனி கிடாவுக்கு மேல் எதையும் கோரவில்லை. தங்களுடைய தெய்வத்தின் எளிய கோரிக்கையும், தங்கள் நேர்த்திக் கடனும் திடீரென்று கிரிமினல் குற்றமாக மாற்றப்பட்டு விட்டது குறித்து பாண்டி கோயில் மக்கள் என்ன நினைக்கிறார்கள்? கேளுங்கள்:

பார்ப்பனீய நுழைவுக்கு அதிகாரபூர்வ அறிவிப்பா, அங்கீகாரமா?



**அப்பாவிப் பூக்கடைத் தொழிலாளி:**

''சார், நான் முசுலீம்தான். ஆனா இங்க பாண்டிக் கோயில்ல பூக்கட்டுறது தாங்க என் தொழிலு. சனங்களோட நம்பிக்கையில கை வைக்கிறதுக்கு யாருக்கும் உரிமையில்லங்க. இனிமே நாங்க என்ன செய்யுறதுன்னு புரியல. விவசாயம் வெளங்காமப் போயித்தான் இதுக்கு வந்தோம். இனி இதுவும் போச்சுன்னா என்ன செய்யுறது?''

**பெரியசாமி,**
**பாண்டி கோயில் பூசாரி.**

''நான் அ.தி.மு.க-காரன். இந்தச் சட்டம் வந்ததில இருந்து மக்கள் அம்மாவத் திட்றத காது குடுத்துக் கேட்க முடியல. அதுவும் பொம்பளைங்க அம்மாவுக்கு சாபம் கொடுக்கிறாங்க. எனக்கே ரொம்ப சங்கடமாக இருக்கிறது. நான் மிகவும் மனம் நொந்து போயிருக்கிறேன். இனிமே அ.தி.மு.கவே வேண்டாமுன்னு நெனக்குறேன்''



பெரியசாமி, கோயில் பூசாரி

**நேர்த்திக் கடன் செலுத்தவியலாது வருத்தத்தில் அமர்ந்திருந்த பெண்கள் கூட்டம்:**

''சனங்க ஒண்ணாச் சேர்றது இந்த கோயில்லதாங்க. இப்பப் பாருங்க கோயிலே தூங்கிக் கெடக்குற மாதிரியிருக்கு, பார்க்கவே சகிக்கலை. இந்தம்மா ஐயர் வூட்டுப் பொம்பளை. கறி,மீனு சாப்பிடாம இருக்கலாம். நாங்க கஷ்டப்படுற சனங்க. நாங்க இப்படித்தான் சாப்புடுறோம். இங்க வந்தா சட்டம் போட்டுத் தடுப்பீங்க. எங்க ஊருப் பக்கம் வாங்க. அங்க எந்தச் சட்டத்துக்கும் நாங்க கட்டுப்பட மாட்டோம்.''

**கூடியிருந்த இளைஞர்கள்:**

''இந்தம்மா ஐயர்னா ஆடு,மாடு வெட்டக் கூடாதுங்கறாங்களே, இந்தம்மா மட்டும் புலித்தோல்ல உக்காந்து யாகம் செய்யலாமா? நாங்க நேர்த்திக் கடன் செய்யுறதுக்காகவே



படிப்பகம்

www.padippakam.com

ஆடு வளர்க்குறோம், காட்டுல இருக்குற புலி என்ன பாவம் செஞ்சுச்சு? எல்லாம் இந்த சங்கராச்சாரி பய சொல்லித்தான் சார் நடக்குது. இனிமே நம்மக் கோயிலுகள்ள ஐயரை கொண்டாந்து பூசை நடத்த விட்டுருவானுங்க. இனிமே என்ன ஆனாலுஞ்சரி, இந்தம்மாவுக்கு ஒட்டு கெடையாது.''

**பாண்டியம்மாள், வயது 40, சமயக் கருப்பு கோயில் பூசாரி.**

''இங்க வாற சனங்க எல்லாம் ரொம்ப வேதனைப்படுது, நேர்த்தியைச் செய்ய முடியலேன்னு வருத்தப்படறாங்க. அம்மா பெரிய பணக்கார வூட்டு ஆளு - அதுனால அதுக்குப் பெரிய கோயில்கள் மட்டுந்தான் அக்கறையாப்படுது. இருக்கிற நெலமையப் பாத்தா, சாமிக்கு ஒண்ணும் பவரில்லேன்னு தான் நெனக்குறேன். இல்லைன்னா இப்படியா இழுத்துக்கிட்டு கெடக்கும்?''




பாண்டியம்மாள், கோயில் பூசாரி

**நேருபாண்டியன், ஆடு உரிப்போர் சங்கத் தலைவர்:**

''சார், இங்க எத்தனையோ வருசக் கணக்கா ஆடு வெட்டிக்கிட்டிருக்கோம். இப்ப திடுதிப்புன்னு சட்டம் போட்டு இரண்டு பேரைப் புடிச்சுட்டுப் போயிட்டாங்க. இந்தச் சட்டம் எங்கள மாதிரி ஏழைங்கள நசுக்குறதுக்குத்தான். இந்தம்மா ஏதோ அன்னதானம் பண்றதா சொல்லிக்குது. ஆனா, இங்க எத்தனயோ வருசங்களா அன்னாடம் அன்னதானம் நடந்து வந்தது. அதை நிப்பாட்டறது என்ன நெயாயமுங்க? இதுக்கெல்லாம் தூண்டுதலா இருக்கிறது பி.ஜே.பி. காரனுங்கதான்.''

**வசந்தி, பூக்கடைக்காரர்:**

''இந்தக் கோயில நம்பி எத்தனயோ குடும்பம் நடக்குதுங்க. சுத்துப்பட்டுக் கிராமத்துல உள்ள நிராதரவான குடும்



வெறிச்சோடிக் கிடக்கும் மதுரை பாண்டி முனி கோயில்

பத்துப் புள்ளங்கல்லாம் இங்க நடக்குற அன்னதானத்துலதான் சாப்பிடுவாங்க. இனி நாங்க என்ன செய்யுறது? இதெல்லாம் ரொம்ப காலத்துக்கு நெலக்காது. இம்புட்டு அக்கிரமத்துக்கும் பாருங்க, பாண்டிச்சாமி செயலலிதா கழுத்த மிதிச்சு இரத்தத்தக் குடிப்பாரு''

**கூட்டமாகத் திரண்ட பூக்கடைக்காரர்கள்:**

''சார், நம்ம கலாச்சாரம் குலசாமியக் கும்பிடறதுதான். பத்து வருசமா நாயும் பூனையுமா சண்டை போடுற மாமன் மச்சானுகளெல்லாம் இங்கதான் பகைய மறந்து ஒண்ணு கூடுவாங்க. வெளிநாட்டுக்குப் போயி எத்தனயோ வருசங் கழிச்சுக் கூட இங்க வந்து கும்புட்டுப் போவாங்க. பொண்ணு பாக்குறதுக்குக் கூட இங்க வந்து கூடுவாங்க. கிடா வெட்டறது நின்னு போச்சுன்னா, இது எல்லாம்தான் நின்னு போகும். இந்தம் மாவ ஓட்டுப் போட்டுச் செயிக்க வச்ச ஆண்டிப்பட்டி அ.தி.மு.க.காரங்களே வந்து புலம்பிட்டுப் போறாங்க.

சார், இம்புட்டு இதா சட்டம் போடுதே இந்த அம்மா, உயிருக்குக் கேடுன்னா முதல்ல மது பானத்தத் தான் தடை செய்யணும்! பெரிசா உயிர் வதைங்குதே, குருவாயூர் கோயிலுக்கு யானையை தானம் கொடுத்ததே, அதுவும் உயிர்தானே? காட்டுல திரியறதக் கோயில்ல கட்டிப் போடலாமா? உயிர் வதைன்னு சொல்லிட்டா, கறிக்கடையெல்லாம் இழுத்து மூடு, பசும்பாலையும் தடை செய்! பசுவோட இரத்தத்த மட்டும் குடிக்கலாமா? இந்தம்மா மகாமகத்துல குளிக்கப் போனப்போ மனுச உயிரே செத்துப் போச்சு, இதுல என்னவோ உயிர் வதையாம், அதத் தடுக்கச் சட்டமாம்!''

நேர்த்திக் கடன் செலுத்தமுடியாமல் வருத்தத்துடன் அமர்ந்திருக்கும் பெண்கள்



www.padippakam.com



பாண்டி முனி கோயில் வாயிலில் நிற்கும் அதிரடிப் போலீசு

**காவலுக்கு நிற்கும் போலீசார்** (புகைப்படம் தர மறுத்து விட்டனர்):

''சார், எங்கள விட்டுருங்க சார். நாங்க ஏதோ பொழப்புக்கு வந்து கெடக்குறோம். நாங்க ஏதாவது ஒண்ணு கெடக்க ஒண்ணு சொல்ல, எங்க பொழப்புல மண்ணு வுழுந்துரும்.

நாம் மறுபடியும் கேள்விகளைக் கேட்க, குமுறிக் கொண்டிருந்த ஒரு போலீசுக்காரர், 'சார், போலீசுக்காரன் ஆம்புளயுமில்ல, பொம்பளையுமில்ல'' என்று வெடித்தார்.

உடனடியாகச் சுதாரித்துக் கொண்டு, ''சார், இத எழுதிராதீங்க. அன்னய்க்கு டூட்டியில யாரு இருந்தாங்கன்னு தேடிக் கண்டுபிடிச்சு காலி பண்ணிருவாணுங்க'' எனக் கெஞ்சத் துவங்கினார்.

**கோயில் அதிகாரி**

''அறிவிப்புக்குப் பிறகு மக்கள் வரத்து இல்லை. கோட்டைவாசல்லியே போலீசு மறிச்சு அனுப்பிர்றாங்க. யாரும் மீறி முயற்சி பண்றதில்ல. அது மட்டுமில்லாம, அது நல்லதுதான. பொது இடத்த டர்ட்டி (அசிங்கம்) பண்ணுவாங்க. நிப்பாட்டுனது நல்லதுதான். இதுக்கு மேல நாங்க பேசக் கூடாது. இப்பத்தான் நாங்க போராட்டம் பண்ணிட்டு வந்து உக்காந்துருக்கோம். நாங்க ஏதாவது சொல்லப் போயி, மறுபடி ஏதாவது பிரச்சினை ஆயிரப் போவுது.''

**ராமானுஜம், வயது 52, பெருமாள் கோயில் ஐயர்:**

''உயிர்ப் பலி கூடாதுங்கறது அம்மா கருத்து. நல்லதுதான். ஆனா கருப்பு, முனி, இராசு மாதிரியான துர்த்தெய்வங்கள், இல்ல இல்ல, கிராம தேவதைகள் பலி கேட்கும். இந்த 18 சுவாமிக்கு ரொம்ப காலமா மக்கள் காது குத்து, மொட்டையடிக்கிறது, இடம் வாங்கறது, வீடு கட்டறதுன்னு பலி கொடுக்கறாங்க. அதுக்கும் இடம் ஒதுக்கலாம். இப்ப வீட்டுக்குன்னு பூசணி, திருஷ்டி பொம்மை வைக்கிறதில்லயா? அது போலத்தான் கிராம தேவதைகளும். அவா காவல்ல இருக்குறதுனால சுவாமிக்கு (பெருமாள்) திருஷ்டி பயம் இருக்கும். மத்தவா சொல்றாப்போல இதுக்கும், காஞ்சிப் பெரியவாளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்ல. பலி கொடுக்குறத நிப்பாட்டிட்டாலும், நாங்க அங்கல்லாம் போயி பூசை செய்ய மாட்டோம்.''

**இருளாயி, பூக்கடைக்காரர்:**

''ஐயோ, நாங்க இனி என்னதாங்க செய்யுறது? எங்க கஞ்சிக்கு என்னதான் வழி? நான் எனக்காகக் கூட அழலீங்க. இந்த நாயி, பரதேசியெல்லாம் இனி எங்கன்னு போகும்? எத்தன வருசங்களா செக சோதியா இருந்த கோயிலு, இப்ப சொலிப்பில்லாம கிடக்குதே... (அருகில் நின்று கொண்டிருக்கிற போலீஸ்காரர்களை நோக்கி) ஏய்யா, இங்க ஏன் வந்து கிடக்குறீக? பளபளான்னு பிராந்தி சாப்பு தொறந்து கிடக்கு. அங்கபோயி மல்லுக்கு நில்லுங்களேன், இங்க எங்க பொழப்புல மண்ண அள்ளிப் போடறதுக்கா வந்து கிடக்குறீக? என் கண்ணீர் வீணாப் போகாது. நாங்க எழுதி வெச்சுட்டு சாகப் போறோம். ஒண்ணு, இவ (ஜெயா) காருல அடிப்பட்டுச் சாவா, இல்லன்னா பாண்டிச் சாமி கோட்டைக்கே போயி அவளச் சுட்டுக் கொல்லும்.''

— செய்தி, புகைப்படங்கள்: அரசு, மதுரை.

கிடா வெட்டுவதற்கெல்லாம் ஒரு போராட்டமா என்று கேட்கலாம். சாமி கும்பிடுவதற்கும், செருப்புப் போட்டு நடப்பதற்கும், தேநீர் குடிப்பதற்கும் கூட தலித் மக்கள் போராட வேண்டியிருக்கிற இந்தத் திருநாட்டில் இக்கேள்விதான் அபத்தமானது. பேச்சுரிமை மறுக்கப்பட்ட இடத்தில் வெறும் பேச்சு கூடத்தான் போராட்டமாகிவிடுகிறது.

செப்டம்பர் - 8, காலை போராட்ட அறிவிப்புச் சுவரொட்டிகள் நகரெங்கும் ஒட்டப்பட்டவுடனே போலீசின் ''தேடுதல் வேட்டை'' துவங்கியது. திருச்சி, உறையூர் குழுமாயி அம்மன் கோயிலுக்குக் கிடாவெட்டும் மந்தையில் லாரி லாரியாகப் போலீசு குவிக்கப்பட்டிருந்தது. முன்னால் பெண் தோழர்கள் பறை முழங்கி வர ஆட்டுக் கிடாவும் அரிவாளுமாக தோழர்களின் ஊர்வலத்தைக் கண்டவுடன் 3 லாரி போலீசும் அவர்கள் மீது பாய்ந்தது.

தோழர் செல்வராசின் கையிலிருந்த ஆட்டைப் பிடுங்குவதற்கு இன்ஸ்பெக்டர் மல்லுக்கட்டினார். போலீசார் நடத்திய இந்த ஜீவமரணப் போராட்டத்தின் நோக்கம் பன்முகத் தன்மை வாய்ந்தது. ஆட்டைக் கைப்பற்றுவதன் மூலம் சட்டத்தைக் காப்பாற்ற போலீசார் முயல்வதாக சிலர் கருதியிருக்கலாம். ஆட்டின் வடிவத்தில் செல்வராசு கையில் சிக்கியிருந்த தன் பதவியைக் காப்பாற்றத்தான் இன்ஸ்பெக்டர் போராடுகிறார் என்ற உண்மை போலீசாருக்கு மட்டுமே தெரிந்திருந்தது. ஆனால் யாருடைய இன்னுயிரைக் காப்பாற்ற புரட்சித் தலைவியின் ஆணையின் பேரில் 100 போலீசார் குவிக்கப்பட்டிருக்கின்றனரோ, அந்த ஆட்டின் மூளைக்கு தனது உயிருக்குத்தான் இசட் பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டிரக்கிறது என்ற உண்மை உறைத்திருக்காது என்பதுதான் பெரிய துரதிருஷ்டம்!

ஒரு மாபெரும் குற்றத்தைத் தடுத்து விட்ட மகிழ்ச்சியில் போலீசார் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த நேரத்தில், இன்னொரு கோயிலின் வாசலில் ஒரு ஆட்டுக் கிடாவின் உயிர் பிரிந்தது. கிடா வெட்டும் 'குற்றத்தை' இழைத்து அதற்குரிய நடவடிக்கையை எதிர்கொள்வதன் மூலம் நாட்டார் கோயில்களைப் பார்ப்பனமயமாக்கும் இந்தச் சட்டத்தை அம்பலப்படுத்துவது என்று நாம் முடிவு செய்திருந்ததால் இன்னொரு குழுவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


படிப்பகம்

www.padippakam.com

## திருச்சியில் ம.க.இ.க.வின்...

# கிடா வெட்டும் போராட்டம்

மலைக் கோட்டைக் கோயிலிலிருந்து சுமார் 1/2 கி.மீ தொலைவில், பெரிய கடைவீதியில் இருக்கும் சுடலை மாடன் - சப்பாணி கோயில் வாசலில் கிடாவை வெட்டி எடுத்துக் கொண்டு கிளம்பிய ஊர்வலம் மலைக் கோட்டைக் கோயிலை அடைந்தது. ஒரு கையில் வீச்சரிவாள், இன்னொரு கையில் ஆட்டுத்தலையுடன், முழக்கங்களால் போர்க்குணமூட்டப்பட்ட கொடிகளுடன் கம்பீரமாகச் சென்ற ஊர்வலத்தை கடைவீதியே கூடி நின்று ரசித்தது. மலைக்கோட்டை வாயிலில் ஊர்வலத்தை வழிமறித்த போலீசார், பிரேதத்தையும் அரிவாளையும் 'குற்றவாளிகளிடமிருந்து' கைப்பற்றினர்.

குற்றமிழைக்கப்பட்டு விட்டது. போலீசாருக்கு இது கிரிமினல் குற்றம். கோயில் நிர்வாகிகளைப் பொருத்தவரை தெய்வக் குத்தம்.

நேற்று கும்பாபிஷேகம் நடந்த கோயிலில் இன்று கிடா வெட்டித் தீட்டாக்கி விட்டார்களே என்று அவர்கள் பதறினார்கள். உண்மைதான். சப்பாணி - சுடலை மாடன் கோயிலை ''சுடலை மாடஸ்வாமி சப்பாணி ஸ்வாமி'' திருக்கோயிலாக்கி, உள்ளே ஒரு விநாயகரையும் 'பிரதிஷ்டை' செய்து, யாக குண்டங்கள் அமைத்து, நாள் முழுதும் வேள்வி நடத்தி, ஒரு பார்ப்பன அர்ச்சகரையும் கோயிலுக்கு நியமித்திருந்தார்கள். கோனார் சாதியினர்க்குச் சொந்தமான அந்தக் கோயில் முழுமையாகப் பார்ப்பனமயமாக்கப் பட்டிருந்தது. எனவே, 8-ம் தேதி மாலை கோயில் வாசலில் உறைந்திருந்த ரத்தத்தைக் கழுவிவிட்டு, தீட்டுக் கழிப்பு சடங்கும் நடத்தி நிம்மதியடைந்தனர்.

இவ்வளவு வேலை செய்த இந்தப் புத்திசாலிகளுக்குக் கோயில் வாசலில் தாங்கள் அமைத்திருந்த அலங்கார வளைவில் கொட்டை எழுத்தில் எழுதியிருந்த இரண்டு சொற்களுக்கு பொருள் புரியவில்லை போலும். **''மகா சம்ப்ரோட்சணம்''** என்பதே அந்த வாசகம். அதாவது **''மாபெரும் தீட்டுக் கழிப்பு''**. வேறு யாருக்கு? சுடலை மாடனுக்கும் சப்பாணிக்கும் தான்.

போலீசுக்கும் தீட்டுப்பட்டுவிட்டது. கோயில் வாசலிலேயே புறக்காவல் நிலையம் இருந்தும், ஊர்வலப் பாதையில் நகரக் காவல் நிலையம் இருந்தும், மலைக்கோட்டை வாயிலில் இன்னொரு புறக்காவல் நிலையம் இருந்தும் அனைத்தையும் மீறிக் 'குற்றம்' நடந்து விட்டதால் அரை டஜன் குற்றப்பிரிவுகளில் வழக்கு போட்டனர். ஆனால், எந்தச் சட்டத்தை மீறி இந்தக் குற்றம் இழைக்கப்பட்டதோ அந்தக் குற்றப் பிரிவு மட்டும் போடப்படவில்லை. ஏனென்றால் அந்தச் சட்ட நகலே போலீசிடம் இல்லை. மாறாக கிடாவெட்டைத் தடுக்க வந்த கோயில் நிர்வாகி ஒருவரைக் கொலை செய்ய முயன்றதாக வழக்குப் பதிவு செய்தனர்.

பச்சையான பொய்வழக்கு என்று தெரிந்தும் பிணை மறுத்தது நீதிமன்றம். 15 நாட்களுக்குப்பின் காவல் நீட்டிப்பை நாம் ஆட்சேபித்தோம், ''கொலை செய்யப்பட்ட ஆட்டின் சவப் பரிசோதனை அறிக்கை தயாராகாததால் குற்றவாளிகளை விடுவிக்கக் கூடாது'' என்று வாதாடியது, அரசுத் தரப்பு. கேலிக்குரிய இந்த வாதத்தை ஏற்று தோழர்களை மீண்டும் சிறைக்கு அனுப்பியது நீதிமன்றம்.

''என்னைக் கொலை செய்ய முயன்றதாக நான் புகாரே கொடுக்கவில்லை'' என்று கோயில் நிர்வாகியே நீதிமன்றக் கூண்டில் ஏறி வாக்குமூலம் கொடுத்தபின், வேறு வழியின்றி பிணை வழங்கப்பட்டது. அதுவும் ''அன்றாடம் காலையும் மாலையும் நீதிமன்றத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும்'' என்ற நிபந்தனையுடன்!

போராட்டம் என்றால் போலீசு அடக்குமுறை உண்டு என்பது நாமறிந்ததுதான். எனினும் இப்போராட்டம்

**பாசிச ஜெயாவின் இரண்டாண்டு ஆட்சிக்காலத்தில் தமது சொந்த உரிமைகளைப் போராடிக் காப்பாற்றிக் கொள்ளவியலாத மக்களால், தங்கள் தெய்வத்தின் உரிமையையும் காப்பாற்ற முடியவில்லை. அரசு அன்றே கொல்லும் என்பதை அனுபவத்தில் உணர்ந்திருக்கும் மக்கள், தெய்வம் நின்று கொல்லும் என்று நம்புகிறார்கள். ஆனால், ''என்று கொல்லும்?'' என்று அவர்களுக்கே தெரியவில்லை.**



www.padippakam.com

குறித்து இவ்வாறு விவரித்து எழுதக் காரணம் இருக்கிறது. இந்தத் தடைச் சட்டத்தை எதிர்க்காத மக்களில்லை. எதிர்க்காத பூசாரிகளில்லை. எனினும் களத்தில் நின்று எதிர்ப்பைக் காட்டத் தயங்குகிறார்கள்.

பாசிச ஜெயாவின் இரண்டாண்டு ஆட்சிக்காலத்தில் தமது சொந்த உரிமைகளைப் போராடிக் காப்பாற்றிக் கொள்ள வியலாத மக்களால், தங்கள் தெய்வத்தின் உரிமையையும் காப்பாற்ற முடியவில்லை. அரசு அன்றே கொல்லும் என்பதை அனுபவத்தில் உணர்ந்திருக்கும் மக்கள், தெய்வம் நின்று கொல்லும் என்று நம்புகிறார்கள். ஆனால், ''என்று கொல்லும்?'' என்று அவர்களுக்கே தெரியவில்லை.

மூட நம்பிக்கையை ஒழிப்பதாகச் சொல்லிப் பார்ப்பனக் கும்பல் திணித்துள்ள இந்தச் சட்டம், அவர்கள் முற்றிலும் எதிர்பாராதவொரு கோணத்தில் மக்களிடம் பகுத்தறிவுச் சிந்தனைக்கு விதை போடவிருக்கிறது. தங்கள் தெய்வத்தின் 'உரிமை'யைக் கூட தாங்கள் தான் போராடிப் பெற்றுத் தரவேண்டும் என்ற அனுபவம் அவர்களைத் தெய்வ நம்பிக்கையிலிருந்து விடுவிக்கும் ஒரு படிக்கல்லாக அமையும்.

போராட்டம் குறித்த செய்தி தமிழகம் முழுவதுமுள்ள பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டபோதும் போராட்டத்தின் நோக்கத்தை மட்டும் அவை கவனமாக இருட்டிப்புச் செய்தன.

''நாட்டார் தெய்வங்களைப் பார்ப்பனமயமாக்குவது, கோயில்களை ஆர்.எஸ்.எஸ். முகாமாக்குவது'' என்ற இந்தச் சட்டத்தின் நோக்கத்தை வெளியிடாமல் பரபரப்புச் செய்தியாக மட்டுமே பல பத்திரிக்கைகள் வெளியிட்டன. தொலைக்காட்சிகளோ தோழர்கள் எழுப்பிய முழக்கங்களின் ஒலியை மிகக் கவனமாகத் தணிக்கை செய்தன. எங்கே இருக்கிறது பார்ப்பன ஆதிக்கம் என்று கேட்போருக்கு இதைவிட வேறு விளக்கம் தேவையில்லை.

போராட்டம் முடிந்த மறுநாளே 'விசுவ இந்து பரிசத்' தலைவர் வேதாந்தம் ஒரு அறிக்கைவிட்டார். சட்டத்தை வரவேற்பதாகவும், அதே நேரத்தில் சில 'இந்து விரோத சக்திகள்' இதைப் பயன்படுத்திக் கொள்கின்ற காரணத்தால் கிடா வெட்டும் பக்தர்களைக் கைது செய்ய வேண்டாமென்றும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இறுதியாக, அந்த அறிக்கை நீங்கள் முற்றிலும் எதிர்பார்க்க முடியாத இன்னொரு கேள்வியையும் எழுப்பியிருந்தது. ''கிடா வெட்டும் இந்துக்களைக் கைது செய்யும் அரசு பக்ரீத்துக்கு ஆடு அறுக்கும் முசுலீம்களைக் கைது செய்யுமா?'' என்பதே அந்தக் கேள்வி. சட்டத்தின் நோக்கம் இப்போது புரிகிறதா?

திருச்சியில் நாம் கிடா வெட்டிய கோயில் அமைந்துள்ள இடம் சரஸ்மீரான் தெரு. அங்கே 100 முசுலீம் குடும்பங்களும் 4 மாட்டிறைச்சிக் கடைகளும் உள்ளன. சுடலை மாடன் ஏன் ''ஸ்ரீ ஸுடலை மாடஸ்வாமி''யானார் என்று இன்னுமா புரியவில்லை?

● **சூரியன்**

கிடா வெட்டைத் தடை செய்ய சட்டம்!
பார்ப்பனரல்லாத பூசாரியைத் துரத்திப்
பார்ப்பானை நுழைக்கும் சதித் திட்டம்!

◆

மதுரை வீரன், மாரியாத்தா,
ஒண்டிக்கருப்பன் போன்ற
நாட்டார் தெய்வங்களைப்
பார்ப்பனமயமாக்கி
சங்கராச்சாரியிடம் ஒப்படைக்கும்
சதித் திட்டத்தின் முதல் கட்டம்தான்
கிடா வெட்டத் தடைச் சட்டம்!

◆

கிடா வெட்டி, கோழி அறுத்துச்
சாமி கும்பிடுவது அசுத்தம்;
பார்ப்பானை வைத்துச்
சாமி கும்பிடுவதுதான் சுத்தம் என்றால்,
கிடா வெட்டிச் சாமி கும்பிடும்
90 சதவீத 'இந்துக்கள்'
அசுத்தமானவர்களா?

◆

கோயிலில் கிடா வெட்டியவர்களைக்
கிரிமினல் குற்றவாளிகள் என்று
கைது செய்யும் அரசே,
வெட்டியவன் கிரிமினல் என்றால்
கறி தின்பவர்கள் எல்லோரும்
கிரிமினல்களா?
கறி கேட்கும் கடவுளும் கிரிமினலா?

◆

பார்ப்பன முனிவர்களும் அவதாரங்களும்
மாட்டுக்கறி தின்றதற்கு ஆதாரம்
வேத புராணங்களில் இருக்கிறது.
மாட்டுக் கறியைத்
தடை செய்யக் கோரும்
இந்து முன்னணியே,
வேதங்களையும் தடை செய்யலாமா?

◆

பிணத்தின் சாம்பலை உடலில் பூசி
மண்டையோட்டைக் கையிலேந்தி
சுடுகாட்டில் ஆடும்
பரமசிவன் தெய்வம்!
மண்டையோட்டு மாலையணிந்து
மனித ரத்தம் குடிக்கும்
பத்ரகாளியும் தெய்வம்!
கிடா வெட்டுபவன்
கிரிமினல் குற்றவாளியா?

◆

பட்டுச்சேலை, வேட்டி,
தானியங்களை
வேள்வித் தீயில் போட்டு
டன் டன்னாய் நெய்யை ஊற்றி
எரிப்பது காட்டுமிராண்டித்தனமா?
கிடா வெட்டிப் பொங்கல் வைத்துச்
சாப்பிடுவது காட்டுமிராண்டித்தனமா?

◆

தாழ்த்தப்பட்டவன் நுழைந்தால்
கோவிலுக்குத் தீட்டு!
சூத்திரன் நுழைந்தால் கருவறை தீட்டு!
தமிழ் மொழியா, சாமிக்கே தீட்டு!
இந்தப் பார்ப்பன ஆதிக்க
மனுதர்மத்தின் மறுபதிப்பு தான்
கிடா வெட்டத் தடைச் சட்டம்!

◆

கிடா வெட்டுவது குற்றம் என்றால்
ஏழைக்குழந்தைகள்
பாலின்றித் தவிக்கையில்
சாமிக்குப் பாலாபிஷேகம் செய்வது
காட்டுமிராண்டித் தனமில்லையா?

◆

மிருதங்கத்தில் கட்டி இருப்பது
பசுமாட்டுத் தோல்!
மிருதங்கம் வாசிக்கும்
பார்ப்பன வித்வான்களே,
மாடு வெட்டத் தடை என்றால்
மிருதங்கத்திற்கு
யார் தோலை உரித்துக் கட்டுவது?

◆

மகாமகம், கும்பமேளாவில்
நூற்றுக்கணக்கான மக்கள்
மிதிபட்டுச் சாவது
நாகரிகமான வழிபாட்டு முறை!
கிடா வெட்டுவது
காட்டுமிராண்டித்தனமா?

◆

ஆயிரக்கணக்கில்
அரசு ஊழியர் வேலை நீக்கம்,
பத்தாயிரம் சாலைப் பணியாளர்,
மக்கள் நலப் பணியாளர்கள் நீக்கம்!
விவசாயிகள், நெசவாளர்கள்
பட்டினிச் சாவு!
உலகவங்கிக்கு நரபலியிடும்
ஜெயலலிதாவிற்கு
ஆட்டுக் கிடா மீது ஜீவகாருண்யமாம்!

**- ம.க.இ.க, பு.மா.இ.மு.**

***திருச்சி கிடா வெட்டும் போராட்டத்தின் போது ஆயிரக்கணக்கில் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம்.***


படிப்பகம்

www.padippakam.com

# ஆ உரித்துத் தின்ற பார்ப்பனர்கள் அசைக்க முடியாத ஆதாரங்கள்

**''முழுமாட்டை விழுங்கினாலும் அவாள் மேல்சாதி. முட்டையைக் கூடத் தொடமாட்டேன் என்று சத்தியம் செய்தாலும் நீ கீழ்ச்சாதி. இது மனுதர்மத்தின் அடிப்படையிலான மெனு தர்மம்.''**

ரத யாத்திரை, பிள்ளையார், இராமன் இப்படி ஒவ்வொன்றாய் நம் மத்தியில் ஓட்டிவந்த பார்ப்பன மதவெறியர்கள் இப்பொழுது பசுமாட்டை ஓட்டி வருகின்றனர். தன்னைப் பார்ப்பனர்கள் உரித்துத் தின்ற உண்மை வரலாறு தெரிந்த பசுக்களோ உண்டு கொழுத்த பார்ப்பனர்களின் தொந்தியைக் கிழிக்கும் குலப்பகையுடன் கொம்புகளை ஆட்டுகின்றன...

அந்தக் காலத்தில் இந்துக்கள் பசுமாட்டை தெய்வமாகப் போற்றி வணங்கினார்கள் என்றெல்லாம் இன்று பார்ப்பனர்கள் சொல்லுவது பச்சைப் புளுகு என்பதை ஆதாரத்துடன் அம்பலப் படுத்தும் விதமாகச் சமீபத்தில் தமிழில் ஒரு நூல் வெளிவந்துள்ளது. ''பசுவின் புனிதம்: மறுக்கும் ஆதாரங்கள்'' - டி.என்.ஜா எனும் வரலாற்றாசிரியர் ஆய்வு செய்து எழுதியிருக்கும் இந்நூல் மாடுகளை மட்டுமல்லாது விலங்குகளெல்லாம் கண்டு நடுங்கும்படியாக பார்ப்பனர்கள் அவைகளை விரட்டி விரட்டிப் புலால் உண்டதை ஆதாரங்களுடன் தொகுத்தளிக்கிறது.

ஆரியர்களின் முதல் வேதத்தை 'ரிக்' வேதம் என்பதைவிட அசைவ உணவின் 'மெனுகார்டு' என்றே அழைக்கலாம். வேதகாலச் சொல்லான யக்ஞம், அதாவது வேள்விகளில் பசுக்கள், கன்றுகள், குதிரைகள், ஆடுகள் என்பன நூற்றுக்கணக்கில் பலி கொடுக்கப்பட்டன. குறிப்பாக இந்திரன், அக்னி, சோமன் ஆகிய மூவருமே மாட்டிறைச்சி மீது பேரார்வம் காட்டிய தெய்வங்களாகும்.

''அவர்கள் எனக்காகப் பதினைந்து இருபது எருதுகளைச் சமைத்தார்கள்'' என்று ரிக் வேதத்தில் இந்திரன் ஓரிடத்தில் குறிப்பிடுகிறான். அக்னியால் சுடப்பட்ட முந்நூறு அல்லது ஆயிரம் எருமைகளை உண்டதாகவும் ரிக் வேதத்தில் இந்திரன் குறிப்பிடுகிறான். அத்தனையையும் இந்திரனா தின்றிருப்பான்? தலைக்கு ஒரு மாடு என்று வைத்துக் கொண்டால் முந்நூறு பார்ப்பனர்கள் சேர்ந்து தந்தூரி சாப்பிட்டிருப்பது நமக்கு அதிர்ச்சி அளிக்கிறது.

இதுமட்டுமல்லாமல், எப்படிச் சாப்பிட்டால் எதுக்கு நல்லது என்ற மருத்துவக் குறிப்போடு பார்ப்பனர்கள் பசுமாட்டை மேய்ந்த சங்கதி ரிக் வேதத்தில் இருக்கிறது: ''அக்னிக்குரிய பங்கான ஆட்டை எரிக்க வேண்டும்; தீயிலிருந்து உடம்பைப் பாதுகாத்துக் கொள்ள பசுவின் இறைச்சியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று மிகத் தெளிவாகவே ரிக் வேதம் ஏதோ சுக்குமல்லிக் காபி தரத்துக்குப் பசுக் கொலையைப் பரிந்துரைக்கிறது.



**மேலதிகமாக விவரம் தெரிந்து கொள்ள வாசகர்கள் அவசியம் படிக்க வேண்டிய நூல்:**
**'பசுவின் புனிதம்: மறுக்கும் ஆதாரங்கள்'**
**ஆசிரியர்: டி.என். ஜா.**
**வெளியீடு:**
**புத்தா வெளியீட்டகம், கோயம்புத்தூர் - 15.**

இப்படி ரிக் வேதம் மட்டுமல்ல பிற்கால வேத நூல்களான கோபத பிராமணம், தைத்திரீய சம்கிதை, தைத்திரீய பிராம்மணம், அய்த்ரேய பிராமணம், சதபத பிராமணம், இப்படி அதற்கடுத்த பல உபநிடத நூல்களிலும் பசுக்களை வகைப்படுத்திச் சாப்பிடும் மதுபர்கம் என்ற சிறப்பான சடங்கை விவரிக்கின்றன.

மனுதருமமும் பசுவதையைத் தெளிவாக நியாயப்படுத்துகிறது. முழுமாட்டை விழுங்கினாலும் அவாள் மேல்சாதி. முட்டையைக் கூடத் தொடமாட்டேன் என்று சத்தியம் செய்தாலும் நீ கீழ்ச்சாதி. இது மனுதர்மத்தின் அடிப்படையிலான மெனு தர்மம்.

வளைகாப்பு, பூணூல் சடங்கு போன்ற அற்பக் காரணங்களுக்காகக் கூட இவர்கள் பசுவைப் பலி கொடுத்திருக்கிறார்கள். மேலும் உபநிடதத்தில் ஒருவர் தனக்குப் பிறக்கும் மகன் நீண்ட ஆயுளும், நல்ல அறிவும் கொண்டவனாக இருக்க பசுங்கன்றின் இறைச்சியுடன் அரிசிச் சோறும் நெய்யும் கலந்து உண்ண வேண்டும் என்று ஒரு கட்டளையாக வழிகாட்டப்படுகிறது.

யாக்ஞவல்கியர் எனும் உபநிடத காலத்தின் புகழ்பெற்ற முனிவர் விருந்துக்கு வந்தால் 'ஒரு கன்றுக்குட்டி காலி' என்ற உண்மையை சக முனிவர்கள் வயிற்றெரிச்சலோடு பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். பார்ப்பனர்களுக்குத் தானம் கொடுப்பதற்காக ரந்திதேவர் என்ற மன்னன் தினமும் இரண்டாயிரம் பசுக்கள் கொல்லப்பட்டதாகவும் அந்தப் பசுக்களின் இரத்தத்திலிருந்து கர்மாவதி என்ற ஆறு ஓடியதாகவும் வனபர்வம் என்ற நூல் குறிப்பிடுகிறது. உபநிடதங்கள் மட்டுமின்றி, வால்மீகி இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றிலும் பார்ப்பனர்கள் பசுமாமிசம் உண்டது ஆதாரமாக உள்ளது. மேலும் சங்க இலக்கியத்திலும் கபிலர் என்ற பார்ப்பனப் புலவர் ''ஊன் துவை... கறிசோறு உண்டு வருந்து தொழில்'' (பாடல்: 14: வரிகள் 12-16) எனப் புலால் உண்டதைப் புறநானூறு வெட்டவெளிச்சமாக்குகிறது.

***கொசுறு:*** பார்ப்பனர்கள் மாடுகள் மட்டுமின்றி காண்டாமிருகம், ஒட்டகம், நாய், பன்றி, இப்படிப் பலவற்றையும் தின்ற வரலாறு டி.என்.ஜா.வின் நூலில் ஆதாரமாகப் பரவிக் கிடக்கிறது. அட என்னங்க குஜராத்தில் நர மாமிசம் சாப்டாங்க என்கிறீர்களா... அதுவும் சரிதான்.

● **துரை. சண்முகம்**



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவில் மாடுகள் : புனிதமா... பொருளாதாரமா?

இந்திய விவசாயிகளின் மாட்டுப் பிரச்சினை என்பது இந்து மதவாதிகள் கூறுவதைப் போல கோமாதா என்ற புனிதப் பிரச்சினையல்ல, மாட்டைத் தெய்வமென்பதற்காக கோடிக்கணக்கான மக்கள் வளர்க்கவில்லை. விவசாய வேலைகளுக்காகவும், பால் பொருள் சந்தைக்காகவும் வளர்க்கப்படும் மாடுகள் கால்நடைப் பொருளாதாரத்தின் முக்கிய அங்கமாகும்.

உலகிலேயே இந்தியாவில்தான் கால்நடைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகம். மாடு, ஆடு, குதிரை, கழுதை, ஒட்டகம் போன்ற கால்நடைகளின் எண்ணிக்கை 50 கோடியைத் தாண்டுகிறது. அதில் அனைத்து வகை மாடுகள் மட்டும் 28.5 கோடிக்கும் அதிகமாகும். இதில் 8.3 கோடி உழவு மாடுகள் 40 கோடி ஏக்கர் நிலங்களை உழுவதற்கும் விவசாயப் பொருட்களின் போக்குவரத்திற்கும் பயன்படுகின்றன. இவற்றில் பெரும்பங்கு காளைகள், சிறுபங்கு எருமைக் கடாக்கள்.

10.2 கோடி கன்றுகள் போக மீதமிருக்கும் கறவை மாடுகள் 10 கோடி. எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால் எருமைகள் குறைவாக இருந்தாலும் மொத்தப் பால் உற்பத்தியில் எருமைப்பால்தான் அதிகம். இந்தியாவின் தற்போதைய விவசாய, பால் தேவைக்கு மிக அதிகமாகவே மாடுகள் இருக்கின்றன. முக்கியமாக அறுபது சதவீத மாடுகளுக்குத்தான் தீவனம் அளிக்க முடியும் என்ற நிலையும் இருக்கின்றது.

30 ஆண்டுகளாக விவசாய வேலைகளுக்குப் பயன்படும் டிராக்டர்கள், பம்புசெட்டுக்கள், டெம்போ - லாரிகளின் எண்ணிக்கை பிரம்மாண்டமாக அதிகரித்து விட்ட நிலையில், இவ்வேலையைச் செய்து வந்த எருது, காளைகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது. அதேசமயம் நகர்ப்புறப் பால் சந்தையின் பெருக்கம், கலப்பின மாடுகளின் உருவாக்கம், பாலைப் பதப்படுத்தி விற்கும் முன்னேறிய தொழில்நுட்பம் ஆகிய காரணங்களால் கறவை மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது. இருப்பினும் இந்தியாவின் மாடு வளர்ப்பு என்பது பெரும்பான்மையாக சிறு உற்பத்தியாளர்களின் தொழிலாக இருக்கிறதேயொழிய பண்ணை சார்ந்த பெரு உற்பத்தியாக இல்லை. அதிகமும் சிறு விவசாயிகளால் வளர்க்கப்படும் மாடுகள் விவசாயத்தின் அழிவையொட்டிப் பராமரிக்க இயலாத நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

ஒரு விவசாயி தன் பொருளாதார வாழ்க்கைக்காக மாடு வளர்க்கிறாரேயன்றி 'சொர்க்கம் கிடைக்கும், புண்ணியம் வரும்' என்பதற்காக அல்ல. பொதுத்துறைகளைத் தனியார்மயமாக்கி ஆட்குறைப்பு செய்து வரும் உலகமயமாக்கம், விவசாயத்தையும் தனது இலாப வேட்கைக்கேற்ப அழித்தும் மாற்றியும் வருகிறது. இறால் பண்ணைகளினால் கூலி விவசாயிகள் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான காளைகளும் வேலையிழந்திருக்கின்றன.

எனவே, சினை பிடிக்காத பசு மாட்டையும், வயதான, வேலையிழந்த காளைகளையும் ஒரு விவசாயியினால் பராமரிக்கவே முடியாது. வருமானமற்ற நிலையில், வருமானம் தராத மாடுகளுக்குச் செலவு செய்து தீனி போடுவது என்பது

**உலக மாட்டு இருப்பில் முதலிடம் பெற்றிருக்கின்ற இந்தியாதான் உதவாக்கரை மாடுகளை வைத்திருப்பதிலும் முதலிடம் வகிக்கின்றது. எனவே, வெட்டப்படும் மாடுகள் அளிக்கும் வருவாய்தான் எஞ்சியிருக்கும் கால்நடைச் செல்வத்தைக் காப்பாற்றுவதற்கே ஒரு மறைமுகக் காரணமாக இருக்கிறது.**

ராணிப்பேட்டை ஷூ தொழிற்சாலை :
10 ஆயிரம் கோடி இந்தியத் தோல்பொருள் ஏற்றுமதியில் ஓர் அங்கம்.






படிப்பகம்

www.padippakam.com

**இந்தியாவில் மொத்தம் 38 ஆயிரம் மாடு வெட்டும் கூடங்கள் இருக்கின்றன.**

**மனிதனுக்கு அளப்பரிய பயனைக் கொடுக்கும் மாட்டை வெட்டுவது என்பது கிரிமினல் நடவடிக்கையாக மாற்றப்பட்டிருப்பது எத்தகைய அநீதி!**



நன்றி: ஃப்ரண்ட்லைன்

தமிழகத்திலிருந்து கேரளாவிற்குச் செல்லும் மாடுகள்: தடைச் சட்டம் வந்தால் பொருளாதாரப் பிரச்சினைகள் அதிகரிக்கும்.

அவரால் முடியவே முடியாத காரியம்: அதனால்தான் உதவாத மாடுகளை வெட்டுக்கு விற்று, உதவுகின்ற மாடுகளையும், தன் குடும்பத்தையும் காப்பாற்றப் போராடுகின்றார் விவசாயி.

உலக மாட்டு இருப்பில் முதலிடம் பெற்றிருக்கின்ற இந்தியாதான் உதவாக்கரை மாடுகளை வைத்திருப்பதிலும் முதலிடம் வகிக்கின்றது. எனவே, இறைச்சிக்காகவும் தோலுக்காகவும் வெட்டப்படும் மாடுகள் அளிக்கும் வருவாய்தான் எஞ்சியிருக்கும் கால்நடைச் செல்வத்தைக் காப்பாற்றுவதற்கே ஒரு மறைமுகக் காரணமாக இருக்கிறது.

இந்தி பேசும் மாநிலங்களை உள்ளிட்ட பல மாநிலங்களில் ஏற்கெனவே பசுவதைத் தடைச் சட்டம் அமலில் இருப்பதால் வெட்டுக்குச் செல்லும் மாடுகள் பல்வேறு இடையூறுகளைச் சந்திக்கின்றன. எப்படியும் விற்றாக வேண்டும் என்ற விவசாயியின் நிர்ப்பந்தம் இந்த இடையூறுகளைக் கடந்து வியாபாரத்தையும், சந்தையையும் உருவாகியிருக்கின்றது.

மேலை நாடுகளின் கால்நடைப் பொருளாதாரத்தில் இறைச்சிக்காக வளர்க்கப்படும் மாட்டுப் பண்ணைகள் ஒரு முக்கியப் பங்கை வகிக்கின்றன. இது இறைச்சி, மக்களின் ஆரோக்கியம், மருந்துகள், தோல் பொருட்கள் என்று பன்முகப் பயன்பாடு கொண்டதாகவும், பொருளாதார ரீதியில் பெரும் வருவாயீட்டும் முக்கியத் தொழிலாகவும் இருக்கின்றது. இந்தியாவில் இப்படி ஒரு பெரும் தொழில் உருவாகாமல் தடுத்த 'புண்ணியம்' காங்கிரசு மற்றும் இந்து மதவெறிக் கும்பலுக்கே சேரும். அதனால்தான் உதவாத மாடுகளைக் கூட வெட்டுவதற்கு உள்ள இடர்கள் விவசாயிகளையும், வியாபாரிகளையும் சினமடைய வைக்கிறது. விற்பனை செய்ய முடியாததால் பசுமாடுகள் கைவிடப்படுகின்றன. லக்னோ நகரில் மட்டும் நாளொன்றுக்கு 100 மாடுகள் பாலிதீன் பைகளைத் தின்று சாகின்றன.

இந்தி பேசும் மாநில மாடுகள் இராஜஸ்தான் வழியாக பாகிஸ்தானுக்கும், பீகார் வழியாக மேற்கு வங்கத்திற்கும் - வங்கதேசத்திற்கும், தென்னிந்திய மாடுகள் இறைச்சிக்காகக் கேரளத்திற்கும், தோலுக்காகத் தமிழகத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன. இதில் அரசு ஏற்படுத்தியிருக்கும் தடைகள், தேவையற்ற போக்குவரத்துச் செலவு, உழைப்பு விரயம் மிக அதிகம். இந்தியா பாகிஸ்தான் எல்லையிலே 'தீவிரவாதிகளை' ஊடுருவாமல் கண்காணிக்கும் மத்திய அரசு, இந்த மாட்டு வர்த்தகத்தை மட்டும் அனுமதிக்கின்றது. ஒருவேளை தடுக்க நினைத்தால் 'இந்துக்களின்' மாட்டுப்படை இராணுவத்தையே மோதி அழித்து விடும். இது கற்பனையல்ல.


உள்நாட்டில் பசுவின் புனிதம் பேசி மதவெறி அரசியல் நடத்த வேண்டும்; உதவாத மாடுகளை விற்பதற்கும் பல சுற்று வழிகளை ஏற்படுத்த வேண்டும். இந்த அவலமான - அயோக்கியத்தனமான சூழ்நிலையே இந்தியக் கால்நடைச் செல்வத்திற்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய தீங்காகும். சற்றுக் கற்பனை செய்து பாருங்கள்: இந்தியாவில் ஆங்காங்கே மாடுவெட்டும் தொழிற்சாலைகளும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் இருந்தால் விவசாயிகளுக்கு நன்கு பயன்படும் என்பதோடு, இறைச்சி மற்றும் தோலின் தரத்தை உயர்த்தி பல கோடி மக்களை ஒரு முறையான உற்பத்தியில் ஈடுபடச் செய்யவும் முடியும்.

தற்போது அந்த நிலைமை இல்லை. ஆனால் வெட்டுவதற்கான மாடுகள் அதிகம் இருந்தும் இங்கு வெட்டப்படும் மாடுகள் மிகவும் குறைவு. 1980-ஆம் ஆண்டு 1.56 கோடி மாடுகளும், 2000-ஆம் ஆண்டு 2.43 கோடி மாடுகளும் இறைச்சிக்காக வெட்டப்பட்டிருக்கின்றன. 20 ஆண்டுகளில் ஆண்டுக்கு 5 சதவீதம்தான் வளர்ந்திருக்கிறது. இதனால் பாலுக்கும், விவசாய வேலைக்கும் பயன்படுகிற மாடுகளைப் பராமரிக்கும் திறன் விவசாயிகளிடம் கடுமையாகக் குறைந்திருக்கிறது. முக்கியமாக, இறைச்சிக்காக மாடு வளர்க்க வேண்டும் என்ற அவசியம் இருந்தும் இந்தத் திசையில் நாம் இன்னும் ஒரு அடி கூட எடுத்து வைக்கவில்லை!

இந்தியாவில் சட்டப்பூர்வமாக 3,600 மாடு வெட்டும் கூடங்களும், சட்டத்திற்குத் தெரியாமல் 32,000 கூடங்களும் இருக்கின்றன. மனித



படிப்பகம்



நன்றி: ஃப்ரண்ட்லைன்

தோல் தொழிற்சாலை: தடைச் சட்டம் வந்தால் நாடு முழுதும் 25 லட்சம் பேர் வேலை இழப்பார்கள்.

னுக்கு அளப்பரிய பயனைக் கொடுக்கும் மாட்டை வெட்டுவது என்பது கிரிமினல் நடவடிக்கையாக மாற்றப்பட்டிருப்பது எத்தகைய அநீதி!

பசுவதைத் தடைச் சட்டம் காரணமாக கேரளத்துக்கும் வங்காளத்துக்கும் மாடுகளைக் குறைந்த செலவில் கொண்டு போக வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கிவிட்டு, வியாபாரிகள் மாடுகளை இரக்கமற்ற முறையில் கொண்டு போவதாக மிருகவதைத் தடுப்பு மனிதர்கள் ஊளையிடுகின்றனர். மாடுகளை வளர்க்கவும், வெட்டவும் தடையாயிருக்கின்ற இந்நிலைமை உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லை எனலாம். இப்படிப் பல்வேறு தடைகளைத் தாண்டி வெட்டப்படும் மாடுகளை மட்டும் நம்பி தோல் பதனிடும் தொழிற்சாலைகள் 1,400-ம், தோல் பொருட்களைதயாரிக்கும் சிறு நிறுவனங்கள் இலட்சக்கணக்கிலும் இங்கு இருக்கின்றன. இதில் தமிழ்நாட்டின் பங்கு கணிசமானது. தோல்துறையை நம்பி மட்டும் 25 இலட்சம் இந்திய மக்கள் - அதில் மூன்றிலொரு பங்கினர் பெண்கள் - பிழைக்கின்றனர்.

கச்சாத் தோல் அளிப்பில் இறைச்சிக் கூடங்களிலிருந்து 60 சதவீதமும், இறந்து போகும் கால்நடைகளிலிருந்து 30 சதவீதமும், வெளிநாட்டு இறக்குமதியில் 10 சதவீதமும் பங்கு வகிக்கின்றன. பசுவதைத் தடைச்சட்டம் இந்தியா முழுவதற்கும் கடுமையாக அமலுக்கு வரும் பட்சத்தில், இலட்சக்கணக்கான குடும்பங்கள் வேலையிழக்கும். வெளிநாட்டிலிருந்து தோல் இறக்குமதி கணிசமாக அதிகரிக்கும். அதன் விளைவாக அத்தியாவசியத் தோல் பொருட்களின் விலை மிகவும் உயரும். ஒரு மாட்டுத் தோல் 25 சதுர அடியும், ஒரு ஆட்டுத் தோல் 4 சதுர அடி பரப்பளவையும் கொண்டிருப்பதால், தோல்பொருள் தயாரிப்பில் மாட்டுத்தோலின் பங்கே முக்கியமானது.

77.6 கோடி செருப்பு ஜோடிகளும், 1.8 கோடி ஆயத்த ஆடைகளும், 6 கோடி கைப்பொருட்களும் (பை, பர்ஸ், பெல்ட், முதலியனவும்) 5 கோடி தொழிற்சாலைக் கையுறைகளும் - இந்தியத் தோல்பொருள் ஏற்றுமதியில் அடக்கம். இதன் மதிப்பு 10,000 கோடி இந்திய ரூபாய்களாகும். இதில் 60 சதவீத பங்கு சிறு - குடிசைத் தொழில்கள் செய்யும் மக்களிடமிருந்து வருகிறது. எனவே பசுவதைத் தடைச் சட்டம் வர வேண்டும் என்ற இந்து மதவெறியர்களின் விருப்பம் கோடிக்கணக்கான மக்களைச் கொன்றுவிட்டுத்தான் அமலுக்கு வரமுடியும். ஆக பார்ப்பனியத்தின் கோமாதா என்ற புனிதத்தின் உண்மைப்பொருள் மனித வதை என்பதே.

● இளநம்பி

நன்றி: ஃப்ரண்ட்லைன்

அண்மைக் காலம்வரை கிராமப் புறங்களில் வசதி படைத்தவர்கள் 50, 100 மாடுகளை வைத்திருப்பதைப் பெருமையாகக் கருதினர். சாணிக்காகவும் குடும்பப் பால் தேவைக்காகவுமே அந்த மாடுகள் பயன்பட்டன. வறட்சியாலும் மேய்ச்சல் நிலமின்மையாலும் மேற்கண்ட கண்ணோட்டம் மாறியது. பாலின் தேவை அதிகரிக்க, அதிகரிக்க பழைய நாட்டு ரகங்கள் மறைந்து புதிய கலப்பினப் பசுக்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. பசுக்களில் சிந்து, ஜெர்சி, ஹோல்ஸ்டன் போன்ற ரகங்களும் எருமையில் முர்ரா, ஓங்கோல் போன்ற ரகங்களும் பிரசித்தி பெற்றன.

பசுமைப் புரட்சிபோல வெண்மைப் புரட்சி என்ற பெயரால் இந்த புதிய ரகங்களுக்கு பெரிய அளவில் பிரச்சாரம் செய்யப்பட்டது. மானியத்துடன் கூடிய கடன் வசதிகளும் செய்து தரப்பட்டன. பால் உற்பத்தியைத் துணை தொழிலாகவும் பிரதானத் தொழிலாகவும் கொண்ட கோடிக்கணக்கான குடும்பங்கள் உருவாயின. பால் உற்பத்தி பெருகினாலும் ஓரளவு வருவாயுள்ள தொழிலாயிருந்த இத்தொழிலும் நசியத் தொடங்கியது. வாங்கும் சக்தியின்மையால் 20 சதவீதம் மக்கள் மட்டுமே பாலை வாங்குவதால் உற்பத்தியாகும் பால் உபரியாகவும் தேக்கமாகவும் தொழிலில் நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நெருக்கடியைக் காட்டியே கடந்த 4 ஆண்டு காலமாக பால் உற்பத்தியாளருக்குக் கொடுக்கப்படும் விலை உயர்த்தப்படவில்லை. ஆனால் மழையின்மையாலும் விளைச்சலின்மையாலும் பச்சைத் தீவனம் கிடைப்பதில்லை. வைக்கோல், பிண்ணாக்கு, தவிடு ஆகியவற்றின் தீவன விலை 2-லிருந்து 4 மடங்கு ஏறி விட்டன. கன்று ஈன்ற பசுவிடம் 4 மாதங்கள் வரை பால் அதிகம் கிடைப்பதால் கொஞ்சம் கட்டுப்படியாகும். அதன் பிறகு பால் குறையத் தொடங்கும். தீவனச் செலவுக்குப் பற்றாது. போகப்போகக் கடன் வாங்கி தீவனம் போட வேண்டியிருக்கும். கன்று போட்ட 3 மாதத்திலேயே பசுவிற்குச் சினை பிடித்து விட்டால் பாலில்லாத 2 அல்லது 3 மாதம் இடைவெளியை கடன் வாங்கிச் சமாளிக்கலாம். சினை பிடிக்கவில்லையானால் அது எப்போது சினை பிடிக்கிறதோ அதன் பிறகு 10 மாதம் வரை வருவாய் இல்லாமல் தீவனச் செலவு செய்ய வேண்டும். ஒரு மாட்டுக்குக் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு 15 முதல் 30 ரூபாய் வரை செலவாவதால் சினை பிடிக்காத வெற்று மாட்டை


படிப்பகம்

www.padippakam.com

# தமிழகக் கிராமப்புறங்களில் மாடுவளர்ப்பு

வெட்டுக்குக் கொடுப்பதும் உண்டு.

மாடுகளின் ஆயுள் 25 ஆண்டுகள் என்று சொல்லப்பட்டாலும் 10 அல்லது 12 ஆண்டுகளே ஒரு விவசாயியால் பராமரிக்கப்படுகிறது. 5 அல்லது 6 கன்றுகள் போட்டதுமே பசு தனது திறனை இழந்து விடுகிறது. பத்து வயதுக்கும்மேல் கடவாய் பற்கள் தேய ஆரம்பிக்கிறது. வைக்கோல், புல்லை மெல்ல முடிவதில்லை. ஆரோக்கியமும் கெட ஆரம்பிக்கிறது. அதனைப் பராமரிக்க முடியாமல் விவசாயி வெட்டுக்குக் கொடுக்கிறான்.



கால்நடை மருத்துவம் என்பது தமிழ்நாட்டில் மிகவும் மோசமாகவே உள்ளது. காய்ச்சல் போன்ற சாதாரண நோய்களைத் தவிர மற்ற எந்தக் கடுமையான நோயையும் குணப்படுத்தும் ஆற்றல் கால்நடை மருத்துவத் துறைக்கு இல்லை. அதுவும் ஒரு மாடு படுத்துவிட்டால் அதனை எழுப்பி நிற்க வைப்பது அபூர்வம். தொண்டை அடைப்பான், சப்பை கட்டி, மடிவீக்கம் போன்ற பல்வேறு வகையான நோய்களுக்கு மக்கள் கால்நடைத்துறை மருத்துவர்களை எப்போதும் தேடி அலைகிறார்கள். அவ்வப்போது 100, 200, 500, 1000 என்று மருந்துக்காகவும் மருத்துவருக்காகவும் செலவு செய்கிறார்கள். அவர்களும் ஏதோ அனுபவத்தைக் கொண்டு செய்கிறார்கள். சில நேரங்களில் சரியாகிறது. பல நேரங்களில் காப்பாற்ற முடிவதில்லை.

நோயைச் சரியாகக் கண்டுபிடிக்கவோ, நவீன முறை சிகிச்சைக்கோ வழியுமில்லை. மருத்துவர்களுக்கும் நவீன முறைக் கல்வி கொடுப்பதுமில்லை. அறுவைச் சிகிச்சை என்பது அறவே இல்லை.

ஓரிரண்டு கன்றுகள் ஈன்ற பிறகு சினை பிடிக்காத பிரச்சினை, மாடு வளர்ப்போருக்குப் பெரும் பிரச்சினை. பெரும்பாலான பசுக்கள் சினைபிடிப்பதற்கு நம்பியிருப்பது செயற்கை முறை கருவூட்டல்தான். இது அரசு கால்நடை மருத்துவ மனைகளில் கட்டணத்துடன் செய்யப்படுகிறது. இதற்குப் பயன்படுத்தப்படும் விந்து சரியாக பராமரிக்கப்படாத அரசுப் பண்ணையிலுள்ள காளைகளிலிருந்து எடுக்கப்படுகிறது. இந்த விந்துவில் உயிரணுக்கள் மிகக்குறைவாக இருப்பதால் சினை பிடிப்பதில்லை. பலமுறை கட்டணம் செலுத்தி ஒவ்வொரு மாட்டுக்கும் சினை பிடிக்க விவசாயிகள் அலைவதுதான் மிச்சம். பிறகு எங்காவது காளை கிடைக்குமிடத்தில் முயற்சிக்கிறார்கள். நீண்ட காலம் சினை பிடிக்காமல் இருந்தாலும் கருப்பையில் ஏதேனும் பிரச்சினையிருந்தாலும் சினை பிடிக்காமலே மாடு மலடாகிப் போவதுண்டு. சினை பிடிக்காத வெற்றுமாடு விவசாயிக்கு ஒரு பெரும் சுமையாகி விடுகிறது. அதற்குத் தீவனச் செலவு செய்யவோ, பராமரிக்கவோ முடிவதில்லை. ஆகவே, அதை வெட்டுக்குக் கொடுப்பதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை.

ஒரு பசு தனது மூன்றாம் வயதில் சினை பிடிக்க ஆரம்பித்து சுமார் 10 வயது வரை கன்று ஈனும் திறனுடையது. சராசரியாக 5 அல்லது 6 கன்றுகள் ஈனும். கன்றுகளை நன்கு வளர்த்து, பராமரித்து, சினையாக்கி விற்பதில் மட்டுமே ஒரு விவசாயிக்கு சிறிது வருவாய் கிடைக்கிறது. அந்தக் கன்றுகளும் நோய்வாய்ப்பட்டு இறந்தாலோ, பராமரிப்பு சரியின்றி பலவீனமாயிருந்தாலோ அந்த வருவாயும் அவனுக்குக் கிடைப்பதில்லை.

ஒரு மாடு கன்றை ஈனும் போது கிடாரிக்கன்றா, காளைக்கன்றா என்று பார்ப்பதில் விவசாயி பெரும் ஆர்வம் கொள்வான். கிடாரிக் கன்றாயிருந்தால் மிகுந்த மகிழ்ச்சியும் காளைக்கன்று என்றால் சலிப்பும் கொள்வான். காரணம், காளைகளின் விற்பனை மதிப்பு குறைவானது. அந்த கன்றைப் போலவே வயது, உருவம் ஆகியவை ஒத்துப்போகும் இன்னொரு கன்றை ஜோடி சேர்த்து, ஊட்டமாக வளர்த்து, காயடித்து வேலைக்குப் பழக்கினால்தான் நல்ல விலை கிடைக்கும். அதுவும் மழையின்றி, விவசாயமின்றி, டிராக்டர்களின் பயன்பாடும் அதிகமாகிவிட்டதால் காளைகளின் பயன் என்பது கிராமப்புறங்களில் குறைந்துவிட்டது. இந்தக் காரணங்களால் காளைக் கன்றுகளை வளர்ப்பதில் விவசாயி ஆர்வம் காட்டுவதில்லை.

நிலைமைகள் இவ்வாறிருந்தாலும் மாட்டின் விலை மட்டும் குறைவதில்லை. பசு மாடாயிருந்தாலும் காளையாயிருந்தாலும் சந்தைகளில் விலை அதிகமாகவே காணப்படுகிறது. விவசாயம் பொய்த்துப் போனதாலும் வேலையற்றோர், வாழ வழியற்றோர் ஏதாவது தொழில் செய்து பிழைக்க வேண்டுமென்னும் எண்ணம் தோன்றினாலும் பால் உற்பத்திதான் முதலில் அவர்கள் மூளையில் உதிக்கிறது. ஆகவே, இருப்பதை விற்றோ, கடன் வாங்கியோ மாடு பிடிப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். இதன் விளைவாக மாட்டின் விலை என்பது அதிகமாகவே உள்ளது. (கிடைக்கும் பயனைக் கணக்கிடும்போது விலை இரண்டு மடங்கு அதிகமாயுள்ளது.)

**விவசாயம் பொய்த்துப் போனதாலும் வேலையற்றோர், வாழ வழியற்றோர் ஏதாவது தொழில் செய்து பிழைக்க வேண்டுமென்னும் எண்ணம் தோன்றினாலும் பால் உற்பத்திதான் முதலில் அவர்கள் மூளையில் உதிக்கிறது.**

இந்த விலை நேரடியாக உற்பத்தியாளனுக்குப் போய்ச் சேருவதில்லை. வியாபாரிகள், தரகர்களே அதிக லாபம் பெறுகிறார்கள்! மாட்டுச் சந்தையென்பது பல ஊர்களில் கிராமப்புறங்களில் கூடும் வாரச் சந்தையின் ஒரு பகுதியே. விவசாயத்தைப் போலவே பால் உற்பத்தியும் இன்று நசிந்துபோன ஒரு தொழிலாகவே மாறிவருகிறது. மக்களின் வாங்கும் சக்தியின்மையால் குறைவான உற்பத்தியே கூட தேக்கத்திற்குள்ளாகியிருக்கிறது. அதேநேரத்தில் பெரிய நிறுவனங்கள் பாலைப் பண்டமாக மாற்றிக் கொள்ளை லாபமடிக்கின்றன.


– பெ. கதிர்வேலன், வி.வி.மு,
சங்கை வட்டம்.


படிப்பகம்

www.padippakam.com

# “யாகத்திற்குப் பசுவை வெட்டலாம்”

## —மகா பெரியவாள் வாக்குமூலம்



“வேதகாலத்தில் பசுக்கொலை நடந்ததே இல்லையென்றும், முகலாயர் ஆட்சிக் காலத்தில்தான் மாட்டுக்கறியே இந்தியாவுக்கு அறிமுகமானது” என்றும் சாதிக்கிறார் ஆர்.எஸ்.எஸ் தலைவர் கோல்வால்கர்.

“கிராமக் கோயில்களில் மாமிசம் படைப்பதை பூசாரிகள் தவிர்க்க வேண்டும். கோயில் புனிதமான இடம்.” என்கிறார் ஜெயேந்திரர்.

எத்தனை ஆதாரங்களைக் காட்டி வாதாடினாலும் இவர்கள் நம்முடைய பேச்சைக் கேட்கமாட்டார்கள், ஏழை சொல் அம்பலமேறாது. ஆனால், மறைந்த காஞ்சி மாமுனிவரும், மகாப் பெரியவாளுமான ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் அருள் வாக்கை இவாள் மட்டுமல்ல, எவாளாலும் மறுத்துப் பேச முடியாது என்பதால் பெரியவாளையே பேசவிடுகிறோம்.

ஆங்காங்கே வாய்க்கொழுப்பெடுத்து நாமும் சில வார்த்தைகள் பேசியிருக்கிறோம், பெரியவாளுடையது அருள்வாக்கு. நம்முடையது சும்மா மருள் வாக்கு. அவ்வளவுதான்.

*“பல யாகங்களில் ஆஹுதி யாகப் பிராணிகளின் வகையைக் கொடுக்கச் சொல்லியிருக்கிறது....*

*“மத்வாசாரியார், ‘பசுவைக் கொன்று யாகம் பண்ணக்கூடாது; மாவால் பசுவின் வகையைப் போலப் பண்ணி ஆஹுதி பண்ண வேண்டும்’ என்று கருணையால் ஏற்பாடு பண்ணினார்...*

*“மாவினால் பசு பண்ணினாலும், அதில் மந்திர பூர்வமாகப் பிராணப் பிரதிஷ்டை பண்ணி விட்டால், அதுவும் உயிருள்ள பிராணிக்கு ஸமம்தானே? எனவே, அப்பொழுதும் அதற்கு ஹிம்ஸை உண்டாகிறது என்றுதானே ஆகும்?....*

*“தர்மத்துக்காகச் செய்ய வேண்டியது, எப்படியிருந்தாலும் பண்ண வேண்டும்; ஹிம்ஸையென்றும் பார்க்கக் கூடாது. யுத்தத்தில் சத்ரு வதம் பண்ணுவதை ஸகல ராஜ நீதிப் புஸ்தகங்களும் ஒப்புக் கொள்ளவில்லையா? கொலைகாரனுக்குத் தூக்குத் தண்டனையை சட்டப் புஸ்தகமே விதிக்கிறதல்லவா? அப்படி, லோகத்தில் பல பேருக்குப் பெரிய க்ஷேமத்தைத் தேவர்கள் செய்ய வேண்டுமென்ற உசந்த நோக்கத்தில் அவர்களுக்குப் பசு ஹோமம் பண்ணுவதிலும் தப்பேயில்லை....*

*“சாந்தோக்யோபநிஷத்தின் முடிவில், அஹிம்ஸையைச் சிறப்பிக்கும்போதுகூட, அன்யத்ர தீர்த்தேப்ய என்று விதி விலக்குச் சொல்லியிருக்கிறது. அதாவது, வேதத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களைத் தவிர, மற்ற இடங்களில் அஹிம்ஸையை அனுஷ்டிக்க வேண்டும் என்று அர்த்தம்.*

*“யக்ஞம், யுத்தம், நீதிப்படித் தண்டனை தருவது முதலிய இடங்களில் ஹிம்ஸை என்று நினைக்கக் கூடாது....*

*“ஒருத்தன் செய்ய வேண்டியதாக 21 யக்ஞங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன...*

*“‘நிரூட பசுபந்தம்’ என்ற ஆறாவது யக்ஞத்திலிருந்துதான் பசுபலி ஆரம்பிக்கிறது...*

**பாருப்பா... அய்யிரு வவுத்துக்குள்ள பூற மாடு நேரா சொர்க்கத்துக்குப் பூடுமாம். அப்ப நம்ம வவுத்துக்குள்ள பூற ஆடு மாடெல்லாம் நரகத்துக் குத்தான் பூடுமா? ஆர் வவுத்துக் குள்ள எது போனாலும் கடை சில கக்கூசுக்குத்தான் போவும்னு நாம நெனச்சிக் கிறோம். இதுல இவ்ளோ பெரிய மேட்டர் கீதா? அதான் கிடா வெட்டாதீங்கடான்னு அம்மா சட்டம் போட்டிருக்கு!**

*“கூட்டம் கூட்டமாகப் பசுக்களைப் பலிகொடுத்து, பிராம்மணர்கள் ஏகமாக மாம்ஸம் சாப்பிட்டார்கள். புத்தர்கூட இப்படி யாகத்துக்காக ஓட்டிக்கொண்டு போகப்பட்ட மந்தைகளை ரக்ஷித்தார். என்றெல்லாம் இப்போது புஸ்தகங்களில் எழுதி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இம் மாதிரி ஏகப்பட்ட பசுக்களைப் பலி கொடுப்பதாக, வாஸ்தவத்தில் எந்த யாகமும் இல்லை. பிராமணர்கள் செய்வதில் மிகவும் உயர்ந்ததான வாஜபேயத்துக்கும் 23 பசுக்களே கொல்லப்படுகின்றன. சக்ரவர்த்திகளே செய்கிற மிகப் பெரிய அச்வமேதத்துக்குக் கூட 100 பசுக்கள்தான் சொல்லியிருக்கிறது....”*

(வாஜபேயின்னா இன்னா அர்த்தம் தெர்தா? ஒரு தாட்டி சாமி கும்ப்டா 23 மாடு அம்பேல்னு அர்த்தம். பெரியவரு சொல்லாங்காட்டி நம்க்கே இந்த விசியம் தெரியாது. நம்மூரு மாடெல்லாம் இவன் பின்னால போதே, அதுங்கள நெனச்சாதான் பாவமாகீது.)

*“ஒரு பசுவின் இன்னின்ன அங்கத்திலிருந்து மட்டுமே இத்தனை அளவுதான் மாம்ஸம் எடுக்கலாம். அதில் இடாவதரணம் என்பதாக ரித்விக்குகள் இவ்வளவுதான் புஜிக்க வேண்டும் என்பதற்கெல்லாம் சட்டம் உண்டு. அது துவரம் பருப்பளவுக்குக் கொஞ்சம் அதிகம் தானிருக்கும். இதிலும் உப்போ, புளிப்போ, காரமோ, தித்திப்போ சேர்க்காமல், ருசி பார்க்காமல் அப்படியே முழுங்கத்தான் வேண்டும். ஆகையால், வேறு என்ன காரணம் சொல்லி யக்ஞத்தைக் கண்டித்தாலும் சரி, ‘பிராமணர்கள் இஷ்டப்படி மாம்ஸம் தின்னுவதற்கு யக்ஞம் என்று பெரிய பெயர் கொடுத்து ஏமாற்றினார்கள்’ என்றால் கொஞ்சங்கூடச் சரியில்லை!”*

(நூறு மாட்டை வெட்னாங்களாம். துக்கினியோண்டு கறியத்தான் அய்யிருங்க துண்ணாங்களாம், நம்புறா மாரியா கீது? ஆமா... மீதிக் கறிய இன்னா பண்ணாங்க, கடை போட்டு


படிப்பகம்

www.padippakam.com

**நூறு மாட்டை வெட்னாங்களாம். துக்கிணியோண்டு கறியத்தான் அய்யிருங்க துண்ணாங்களாம், நம்புறாமாரியா கீது? ஆமா... மீதிக் கறிய இன்னா பண்ணாங்க, கடை போட்டு வுத்துட்டாங்களா?**



வுத்துட்டாங்களா?)

''இப்போது ஒரு மருந்தைப் பரீக்ஷிப்பது என்பதற்காக லாபரட்டரிகளில் எத்தனை ஜீவன்களைக் கொல்கிறார்கள்? இப்படியே ஒரு பெரிய க்ஷேமத்துக்காகச் சின்ன ஹானியையும் உண்டாக்கலாம் என்றே யக்ஞங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வாஸ்தவத்தில் ஹானியும் இல்லை; அந்தப் பசு ஸத்கதி பெறுகிறது என்பதே நம்பிக்கை.''

**(சங்கராச்சாரி அருள் உரை, விகடன் வெளியீடு, எண் - 23, பக்கம் 11.12,13,14)**

(பாருப்பா... அய்யிரு வவுத்துக்குள்ள பூற மாடு நேரா சொர்க்கத்துக்குப் பூடுமாம். அப்ப நம்ம வவுத்துக்குள்ள பூற ஆடு மாடெல்லாம் நரகத்துக் குத்தான் பூடுமா? ஆர் வவுத்துக்குள்ள எது போனாலும் கடைசில கக்கூசுக் குத்தான் போவும்னு நாம நெனச்சிக்கிறோம். இதுல இவ்ளோ பெரிய மேட்டர் கீதா? அதான் கிடா வெட்டா தீங்கடான்னு அம்மா சட்டம் போட்டி ருக்கு!)

''சம்பந்த மூர்த்தி ஸ்வாமிகள் ஓமாம்புலியூர்த் தேவாரத்தில், யக்ஞங்களைப் பற்றி நிறையச் சொல்கிறார். அதில் ஓரிடத்தில்,

''பரப்பைப் படுத்(து) எங்கும் பசு வெட்(டு) எரி ஓம்பும்'' என்று வருகிறது.

'பரப்பு' என்றால் யாகவேதியை முறைப்படி அமைப்பது. சயனம் என்பது அதுதான். 'பசு வெட்டு' என்றதால் யக்ஞத்திலே ஜீவ ஹிம்ஸை தப்பில்லை என்கிற அபிப்பிராயத்துக்குத் தேவாரத்தின் ஆதரவு தெரிகிறது.''

**(சங்கராச்சாரி அருள் உரை, விகடன் வெளியீடு, 25, ஜுலை 1993. பக் 41.)**

(சம்பந்தர் காலத்துல கறி துண்றவன்லாம் சைவம்; துண்ணாதவன்தான் அசைவமாம். இப்போ அப்படியே தல கீழா மாத்திட்டானுங்கோ! கில்லாடிங் கப்பா.)

''ஸோம யாகங்களைப் பற்றிச் சிறிது சொல்கிறேன்:

பிராமணன் சொத்தெல்லாம் ஸோமயாகத்துக்காகத்தான் என்று முன்பு சொல்வார்கள்.

''தேவர்களுக்கு ரொம்பவும் பிரீதியான ஸோமரஸம் செய்யப்படுவதால்தான் இவற்றுக்கு ஸோம யாகம் என்று பெயர். ஸோம ரஸம் மட்டுமின்றி பசுவும் இவற்றில் உண்டு.

''ஸோமயாகம் ஒருவிதத்தில் ஸாம யாகம்தான்! இந்த ஸாம கானம் ரொம்பவும் பரவசமூட்டுவதாக இருக்கும். ஒரு வித்வான் ஆலாபனை பண்ணிக் கொண்டே போய் தாரஸ்தாயி பஞ்சமத்தைப் பிடித்தவுடன் ரஸிகர்களுக்கு உத்ஸாஹம் உச்சிக்குப் போய் விடுகிற மாதிரி, ஸாம கானமான ஸ்தோத்ரங்களின் முடிவான ஸம்ஸ்தை வருகிறபோது யஜ்ஞபூமியில் கூடியிருப்பவர்களுக்கு, அப்படியே தேவலோகமே வந்து இறங்கிவிட்டாற் போல் ஆனந்தம் கரைபுரண்டு போகும்.''

(டைட்டா சரக்கு வுட்டு, பீஃப் வறுவலை ஒரு கட்டுக் கட்டிட்டு, அப்படியே டாப்ல ஒரு பாட்டு எடுத்து வுட்டா... சும்மா சூப்பரா கீதுன்றாறு. இன்னா புர்தா?)

''சில க்ஷுத்ர சக்திகளுக்கு (சில்லுண்டித் தேவதைகளுக்கு) அதில் பிரீதியிருப்பதால் அவற்றிடமிருந்து லோக க்ஷேமத்தைப் பெற ஸுரை ஹோமம் செய்யப்படுகிறது. நம் ராஜாங்கம் ரொம்ப Strict-ஆக Prohibition (மதுவிலக்கு)-ஐப் பின்பற்றினாலும், அன்னிய தேசப் பிரமுகர்கள் வருகிறபோது, அவர்களால் நமக்கு ஏற்படக் கூடிய நன்மைக்காக, 'பரவாயில்லை' என்று அவர்களுக்குமட்டும் மது விலக்குக்கு விலக்குத் தந்து ஒயின் கொடுப்பது சரியென்றால், ஸௌத்ரா மணியில் ஸுரா ஹோமமும் சரிதான்.

''மந்திரப் பூர்வமாகச் சுத்தியாக்கப்பட்ட ஸுரை கெடுதல் பண்ணாதென்று, மிஞ்சியதை யாகம் செய்கிறவர்கள் பானம் பண்ண வேண்டும். இதன் அளவு கால் அவுன்ஸுக்கும் குறைவானது. ஆகையால் யஜ்ஞம் என்று சொல்லி ஸோமபானம், ஸுராபானம் என்று இஷ்டப்படி குடித்தார்கள் என்று குற்றம் சாட்டுவது மஹா அக்ரமம்.''

**(சங்கராச்சாரி அருள் உரை, விகடன் வெளியீடு, 37, செப்.93, பக்கம் 27-28.)**

(பாருப்பா... அவாளுக்கு (தேவர்களுக்கு) பிராந்தியாம். நம்மாளுக்கு (சில்லுண்டித் தேவதைகள்) கள்ளு தானாம். ஆனா, அய்யிருங்கோ அத்தயும் வுட மாட்டானுங்களாம். லிமிட்டா கால் அவுன்ஸ் ஏத்திக்குவாங்களாம். இன்னாடா நாயம்?)

● **சாட்டை**

*பொருள் விளக்கம்:*

ஆஹுதி செய்தல் - வேள்வித் தீயிலிடுதல்

யக்ஞங்கள் - வேள்விகள்

ரித்விக்குகள் - வேள்வியை நடத்தும் பார்ப்பனர்கள்

ஸத்கதி - நற்கதி

ஸோமரஸம் - கஞ்சாச் செடியிலிருந்து வடிக்கும் சாராயம்

ஸுரா பானம் - கள்



படிப்பகம்

www.padippakam.com

**மூளை:** உணவு, ரீஏஜெண்ட் (Reagent), கால்நடை மருந்துகள், அழகுப் பொருட்கள்

**காது:** உணவு

**கண்கள்:** சோதனைச் சாலை (Lab), ரீஏஜெண்ட்

**கொம்புகள்:** ஜெலட்டின், தீயணைப்புப் பொருட்கள், சட்டை, அங்கிப் பொத்தான் (Button), கால்நடை உணவு, சீப்பு, ஈறு உருவி, உரம்

**உதடு:** உணவு

**பிட்யூட்டரிச் சுரப்பி:** உடல் வளர்ச்சிக்கான மருந்து

**அடிநாக்கு:** நாய், பூனைகளுக்கான உணவு

**மூச்சுக்குழல்:** செல்லப் பிராணிகளின் உணவு, மூட்டு வாத மருந்து (கான்டேராடின் சல்பேட்)

**நாக்கு:** உணவு, பாலாடைக்கட்டி விலங்குகளுக்கான உணவு

**கொழுப்பு:** உணவு, பற்பசை, களிம்பு, மருந்து, அழகுப் பொருட்கள், கேக், பிஸ்கட், பப்பிள்கம், கிரீஸ், பசை, விலங்கு உணவு, வாகன எண்ணெய், சோப்பு, மெழுகுவர்த்தி, கிளிசரின், கார், வானூர்தி வெளிப்பூச்சு, மீன் வலை, பருக்கள் மருந்து, வெடிமருந்து அரிப்புகள் தடுப்பு, இருமல், கரகரப்பு, கண், காது மருந்துகள் தயாரிக்க

**அமிலம்:** ப்ளாஸ்டிக், டயர், க்ரேயான், பி.வி.சி. ஒப்பனைப் பொருள், தார், ரப்பர், செயற்கைத் தரை, ஜெட் எண்ணெய், பூச்சிக் கொல்லி மூலப் பொருள் கரைப்பான்

**வால்:** சூப்

**தசை நார்கள்:** மருந்துப் பொருட்கள், சோதனைச் சாலை

**வயிறு:** உணவு, செல்லப் பிராணிகளின் உணவு, பால், புரதம், பாலாடைக் கட்டி

**அட்ரீனல் சுரப்பி:** ஸ்டிராய்டு மருந்து, ரீஏஜெண்ட்

**பித்தநீர்:** மருந்து, தோல் பதனிடுதல், சாயப் பொருட்கள், நீர் உறிஞ்சு தாள்

**பித்தப்பை கற்கள்:** மருந்து

**மூத்திரப்பை:** மருந்து

**குடல்நாளம்:** உரம்

**இருதயம்:** உணவு, செயற்கை இருதயக் குழாய்கள், செயற்கைத் தசைகள், குடலிறக்க குறைபோக்க

**பெருங்குடல்:** விலங்கு உணவு, ரீஏஜெண்ட்

**சிறுகுடல்:** உணவு, மருந்து, காயம் மற்றும் அறுவைச் சிகிச்சை தைக்க, ரீஏஜெண்ட், டென்னிஸ் மட்டை நார், இசைக் கருவிகளின் தந்திகள், ஆணுறை, மூட்டு அறுவைச் சிகிச்சை

**சிறுநீரகம்:** உணவு, செல்லப்பிராணிகளின் உணவு

**கல்லீரல்:** உணவு, செல்லப்பிராணிகளின் உணவு, இதய நோய், கான்டாக்ட் லென்சில் பாதுகாப்புப் பொருள்

**நுரையீரல்:** உணவு, இரத்தம் உறைதலைத் தடுக்க, குளியல் மற்றும் சலவை சோப்பு, செல்லப்பிராணிகளின் உணவு

**வெள்ளை அணுக்கள் உற்பத்தி செய்யும் சுரப்பிகள் (Lymph Nodes):** உணவு, செல்லப் பிராணி உணவு

## உரமாக எலும்பு!

**இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து ஆடு மற்றும் மாட்டு எலும்புகள் கொண்டு வரப்படுகின்றது. இதில் மாட்டு எலும்பே பெரும் பங்கு வகிக்கிறது. எலும்பை அரைத்துத் தூளாக்கி கேரளா போன்ற மாநிலங்களுக்கு அனுப்புவதோடு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்படுகிறது.**

**தேயிலை, காப்பி, ரப்பர் தோட்டங்களில் எலும்பிலிருந்து தயாரிக்கப்படும் உரங்களே அதிகம் பயன்படுகிறது. கொம்பு மற்றும் குளம்புகள் விலையுயர்ந்த அங்கிகளின் பொத்தான்களாகப் பயன்படுகிறது.**

**செய்தி: ஜோதி, ஜான்**

# ஆவின்றி அ

## நாம் அறிந்திராத ம

*மாட்டிறைச்சியை ே
விதமாகவோ நுகராமல்*

*சங்கராச்சாரியே...
மாட்டிலிருந்து தயாரிக்
புறக்கணித்து தற்கெ
தயாரா?*

**சென்னை - கோயம்பேட்டிற்கு அ
குவிந்துக் கிடக்கும் எ
அக்கிரகார அம்பிகளும் ம
சத்தான ஃபில்டர் காப்**





படிப்பகம்

www.padippakam.com

# யாது உலகு

## டின் பயன்பாடுகள்

*டியாகவோ வேறு ாரும் இருக்க முடியாது. இராமகோபாலனே... ப்படும் பொருட்களைப் ல செய்துகொள்ளத்*

**உணவுக் குழாய்:** உணவு, செல்லப்பிராணிகளின் உணவு

**கணையம்:** உணவு, இன்சுலின் (சர்க்கரை வியாதி), க்ளுகோகான் (கல்லீரல் நோய்), க்ரோமாடிரிப்சின் (புண்கள் சுத்தம் செய்ய)

**நச்சுக் கொடி (ப்ளசன்டா):** கருவுக்கு ஊட்டச் சத்து கொடுப்பது, எய்ட்ஸ், புற்றுநோய் ஆய்வு, அழகுப் பொருட்கள்

**விரைகள்:** மூட்டுவலி மருந்து, செல்லப் பிராணிகளின் மருந்து

**உதரவிதானம்:** உணவு

**மண்ணீரல்:** உணவு, செல்லப்பிராணிகளின் உணவு, அழகுப் பொருட்கள்

**தைமஸ் சுரப்பி:** உணவு, அழகுப் பொருட்கள்,

**பால்மடி:** உணவு, செல்லப்பிராணிகளின் உணவு, மருந்துப் பொருள்

**தொப்புள் கொடி:** தோல் வியாதி மருந்து

**கர்ப்பப் பை:** மருந்து

**தைராய்டு சுரப்பி:** உடல் மற்றும் மன வளர்ச்சிக்கான மருந்து

**பாரா தைராய்டு சுரப்பிகள்:** தசைகளை இறுகச் செய்யும் டெட்டனஸ் நோய் போக்க

**கருமுட்டை:** மருந்து, (பெண்கள் கருப்பை வளர்ச்சிக்கு)

**எலும்பு:** கடினக் கொழுப்பு, ஜெலட்டின் கொழுப்பு, மெழுகுவர்த்தி, பசை, பொத்தான், கைப்பிடிகள், உரம், விலங்கு உணவு, எண்ணெய், சோப்பு, கிளிசரின், கால்சியம் மற்றும் பாஸ்பரஸ், ஊட்டச் சத்து, செயற்கைப் பல் - எலும்பு பொருத்த, இரும்பை இறுக்க, சர்க்கரை சுத்திகரிக்க, பீங்கான் சுத்தம் மற்றும் பளபளப்புக்கான ரசாயனப் பொருட்கள்

**முதுகுத்தண்டு:** கொலஸ்டிரால், நரம்புக் கூழ், வைட்டமின் 'டி' உற்பத்தி செய்ய

**இரத்தம்:** உணவு, தடுப்பூசி, எய்ட்ஸ் மற்றும் புற்றுநோய் ஆய்வு, செயற்கை அறுவைச் சிகிச்சை, கோந்து, செல்லப் பிராணிகளின் உணவு, தோல் பதனிடுதல், உரம், புரதங்கள், தீயணைப்புப் பொருட்கள், சாயம்

**வெள்ளை அணுக்கள்:** வளர்ச்சிக்கான மருந்து

**சிவப்பணுக்கள்:** மருந்து,

**இரத்த அணுக்களை ஏற்றிச் செல்லும் திரவம்:** தீயணைப்புப் பொருட்கள், மருந்து

**தோல்:** ஜெலட்டின், மருந்து, உரம், தோல் பொருட்கள் (பை, காலணி, கையுறை, உடை), காகிதப் பெட்டி, உப்புத்தாள், பிளைவுட், கோந்து

**முடி:** பேனா முனைகள், தூரிகை, சொகுசு இருக்கை உறை

**குளம்புகள்:** ஜெலட்டின், உணவு, செல்லப்பிராணிகளின் உணவு, கோந்து, பொத்தான்கள், கைப்பிடிகள், தொழிற்சாலை மற்றும் வாகன எண்ணெய், ஜெல்லி, உரம், தீயணைப்புப் பொருட்கள், தோல் பதனிடுதல்

**பித்தம்:** சலவை சோப், ஈரல் செயல்பாட்டிற்குச் சோதனை செய்ய உதவி.

**மூக்குத்தண்டு:** மருந்துப் பொருட்கள் (மூட்டு வாதம்)

**மூக்குத்திரவம்:** மருந்து, ஒவ்வாமை மருந்து, கீல்வாத நோய், மூட்டு வீக்கம், வாத நோய்க் காய்ச்சல், மூச்சு வியாதி.

**சொற்பொருள் விளக்கம்:**

**ரீஏஜெண்டு (Reagent):** எதிர்வினை மூலம் சேர்மத்தின் பொருள் கூறு கண்டுணர உதவும் பொருள்

**கிளிசரின் (Glycerine):** கறிநீர்ப்பாகு கொழுப்பிலிருந்து காரம் சேர்ப்பதால் விளைவிக்கப்பட்டு மருந்து, பூச்சி எண்ணெய் களிம்பு, வெடிமருந்துகளுக்குப் பயன்படுத்தப்படும் நீர்மப் பொருள்

**ஜெலட்டின் (Gelatine):** ஊன் பசை எலும்பு, தோல்களிலிருந்து எடுத்து, உணவுப் பொருள்துறை, நிழற்படத் தகடு, பசைகள் முதலியவற்றில் பயன்படும் கூழ் போன்ற பொருள்.

**அட்ரினல் கிளான்ட்ஸ் (Adrenal glands):** குண்டிக்காய் அடுத்த சுரப்பி


**கிரீஸ் (Grease):** எண்ணெய் மசகு

**க்ரேயான் (Crayan):** சாயச் சுண்ணாம்புக் காம்பு, வண்ணம் தீட்டும் கோல்

**லூப்ரிகண்ட் (Lubricant):** உராய்வு காப்புப் பொருள்கள்

**ஜெல் (Gell):** அரை திண்மக் கரைசல்

ல் எலும்புகளும் கொம்புகளும் புத் தொழிற்சாலை. ளும் விரும்பி அருந்தும் ்த இதுவே அடியுரம்.





படிப்பகம்

www.padippakam.com

# ஆவின்றி அமையாது உலகு

## நாம் அறிந்திராத மாட்டின் பயன்பாடுகள்

"**மா**டு ஒரு வாழைமரம்" என்று பொருத்தமாக வருணித்தார், ஒரு கால்நடை மருத்துவர். மாட்டிடம் கிடைக்கும் நாமறிந்த பாலும், இறைச்சியும் அதன் பங்களிப்பில் ஒரு பகுதி மட்டுமே. முந்தைய பக்கத்தின் அட்டவணையில் இடம்பெற்றுள்ள பொருட்கள் அனைத்திலும் மாட்டின் கொம்பு முதல் குளம்பு வரை எல்லாப் பாகங்களும் முதன்மையாகவும், துணையாகவும் பயன்படுகின்றன. உணவு, பற்பசை, அழகு சாதனங்கள், மருத்துவம், தொழிற்சாலை, ஊர்திகள், விமானம் என மனித வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் மாடின்றி வாழ்க்கையில்லை.

மாட்டை சாணி போடும் ஒரு புனித மிருகமாகச் சித்தரிக்கும் இந்து மதவெறியர்களே அதைக் கேவலப்படுத்துகிறார்கள். வரலாற்றில் ஆநிரை மேய்த்தலுடன்தான் மனித வாழ்க்கை துவங்கியது. மனிதன் விலங்குகளிலிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டு, ஆறறிவு உயிரினமாக வடிவமைத்துக் கொண்டதில் கால்நடை இறைச்சி ஒரு முக்கியக் காரணமாகும். அதன்பின் பரிணமித்த நாடோடி வாழ்க்கையிலும் சரி, நிலையான விவசாயத்திலும் சரி, கால்நடைகள், குறிப்பாக மாடுகள் மனிதகுலத்திற்கு அளப்பரிய சேவையைச் செய்தன.

மனிதனது அறிவு, அனுபவம், வாழ்க்கை அனைத்திலும் மாடுகள் கொண்டிருக்கும் உறவென்பது இன்று நேற்றல்ல, பல்லாயிரமாண்டுப் பழமை வாய்ந்தது. ஏடறியாத வரலாற்றின் தொன்மைக் காலத்தில் இயற்கைச் சீற்றங்களுக்கு அஞ்சியும், புதிய மேய்ச்சல் நிலங்களைத் தேடியும் கண்டம் விட்டுக் கண்டம் நடந்த மனிதனோடு மாடுகளும் நடந்தன. இன்றும் ஜெட் விமானங்களின் இயந்திர உராய்வைத் தடுக்கும், மசகு எண்ணெயில் கலந்திருக்கும் கொழுப்பின் மூலமாக மாடுகளும் மனிதனை ஏந்திப் பறக்கின்றன.

அறிவியலின் துணை கொண்டு உலக மனித குலம் வரலாற்றில் எடுத்து வைத்த ஒவ்வொரு படியிலும் பயனடைந்து முன்னேறியது. ஆனால் பார்ப்பனியம் மட்டும் இந்தப் பரிணாம வளர்ச்சியில் இந்திய உழைக்கும் மக்களைப் பிரித்து வைத்து வதைத்தது. கல்வி, கலை, அறிவியல் அனைத்தையும் உழைப்பாளிகளுக்கு மறுத்து வந்த பார்ப்பனியம் மாடுகளையும் விட்டு வைக்கவில்லை.

நிலையான விவசாயம் தோன்றிய பண்டைய இந்தியாவில் வேள்வியின் பெயரால் ஆயிரக்கணக்கான மாடுகள் பலியிடப்பட்டதால் விவசாயம் சீர்குலைந்தது. இன்றோ, ஏழைகளுக்கு மலிவு விலையில் கிடைக்கும் மாட்டிறைச்சியை பசுவதை என்று பார்ப்பனியம் மறுக்கிறது. முக்கியமாக மாட்டின் பல நூறு பயன்பாடுகளையும் இந்திய மக்களுக்கு மறுக்கிறது. உழைக்கும் மக்களின் வாழ்வுரிமையை மறுக்கும் இச்செயல்தான் அநாகரிகமானது; காட்டுமிராண்டித்தனமானது. ஆம். பசுவதைத் தடைச்சட்டத்தின் பொருள் என்னவென்றால் இயற்கை வளத்தில், அறிவியல் பயன்பாட்டில், முன்னேறிய வாழ்க்கையில் ஏழைகளுக்கு இடமில்லை என்பதுதான்.

ஆகவே, பார்ப்பனியத்திற்கு எதிராகப் போராடுவதும், பசுவதைத் தடைச் சட்டத்தை எதிர்த்துப் போராடுவதும், நமது வாழ்வுரிமைக்காகப் போராடுவதும் வேறு வேறல்ல. அத்தகைய போராட்டத்திற்கு மாடுகளின் பன்முகப் பயன்பாடுகள் குறித்து நீங்கள் அறிந்து கொள்வதும், அறியாதவர்களிடம் பிரச்சாரம் செய்வதும் அவசியம். அதற்கு இந்தக் கட்டுரையும், முன்பக்க விவரங்களும் உதவிடும் என்று நம்புகிறோம்.

நவீன எந்திர உற்பத்தியைக் கொண்டுள்ள மேலை நாடுகளில் 70 சதவீத மாடுகள் இறைச்சி மற்றும் ஏனைய பயன்பாட்டிற்கே வளர்க்கப்படுகின்றன. எனவே, அங்கே இறைச்சி தரமாக இருப்பதோடு இதர பயன்பாடும் அதிக அளவில் இருக்கிறது. இந்நாடுகளின் மக்கள் மாட்டிறைச்சியை அன்றாடம் உண்ணுகின்றனர். பொதுவில் அவர்களது வளமையான உடலுக்கும், ஆரோக்கியத்திற்கும் இதுவே காரணம்.

### மாட்டிறைச்சியின் மகத்துவம்

பாலூட்டி இனத்தைச் சேர்ந்த மாடும், மனிதனும் உடலியல் ரீதியில் பல விசயங்களில் ஒத்திசைவைக் கொண்டிருக்கின்றனர். அதேசமயம் ஒரு பாரிய வேறுபாடும் இருக்கிறது. அது மாட்டின் வயிறு நான்கு அடுக்குகளாய்ப் பிரிந்து உணவுப் பொருளைக் கட்டம் கட்டமாகச் செரிக்கின்றது. மனிதன் எளிதில் உட்கொள்ள முடியாத, ஆனால் மனித உடலுக்குத் தேவையான பல்வேறு தாவரங்களை மாடு உட்கொள்கிறது. மாட்டிறைச்சியை உண்ணும்போது நாமும் அந்தச் சக்தியைப் பெறுகிறோம். மேலும் ஏனைய இறைச்சிகள், தாவரங்களைக் காட்டிலும் மாட்டிறைச்சியில்தான் அதிகமான இரும்பு மற்றும் துத்தநாகச் சத்தியும் (Iron and Zinc) இருக்கின்றன. பசலைக் கீரையின் சாறு ஒரு லிட்டரில் இருக்கும் இரும்புச் சத்தைப் பெற மாட்டிறைச்சியின் 90 கிராமே போதுமானது.

மேலும் இச்சத்துக்கள் மனிதனது வளர்ச்சிக்கும், நோய் எதிர்ப்புச் சக்திக்கும், உடற்சக்திக்கும், சோர்வின்மைக்கும், நினைவுத் திறனுக்கும் அவசியமானவை. அடுத்து, இச்சத்துக்களை தாவரங்களிலிருந்தே பெறலாமென சைவ உணவு வெறியர்கள் வாதிடுகின்றனர். உண்மை என்னவென்றால் தாவரங்கள் மற்றும் அதன் மருந்து வகைகளிலிருந்து மனித உடல் 3 சதவீதத்தை மட்டுமே உறிஞ்சிக் கொள்கிறது. ஆனால், மாட்டிறைச்சியிலிருந்து 23 சதவீத சத்தை நமது உடம்பு ஏற்கிறது. மேலும், அன்றாடம் மாட்டிறைச்சியை உண்ணும்போது நமது உடல் தாவரங்கள் மற்றும் அதன் மருந்துகளிலிருந்து மேலதிக சக்தியை உறிஞ்சும் ஆற்றலையும் பெறுகிறது.

நையாசின், வைட்டமின் டி போன்ற சத்துக்களும், இரத்தத்தின் சிவப்பணுக்களை விருத்தி செய்து நரம்பு மண்டலங்களைப் பாதுகாக்கும் 'வைட்டமின் பி 12' (இந்த வைட்டமின் ஏனைய தாவர-விலங்குகளிடம் அதிகம் கிடைக்காத ஒன்று) மாட்டிறைச்சியில் அபரிமிதமாகக் கிடைக்கின்றன. மேலும் இன்றியமையாத புரதச்சத்தை அதிகமாகவும், மலிவாகவும் உழைக்கும் மக்களுக்கு அள்ளிக் கொடுப்பது மாட்டு இறைச்சி தான்.

தற்போது இந்தியாவில் ஏழைகள் மட்டும், அதுவும் நலிவுற்ற, நோயுற்ற - மாடுகளின் இறைச்சியை உண்கின்றனர். வாழ்க்கை முழுவதும் அரைப்பட்டினி நிலையிலேயே வாழும் தலித் மக்களின் ஆரோக்கியத்தை ஓரளவேனும் பராமரிப்பது மாட்டிறைச்சியே என்றால் மிகையல்ல. உண்மையில் தர


படிப்பகம்

www.padippakam.com

மான மாட்டிறைச்சியைக் குழந்தைப் பருவம் முதல் சாப்பிட்டு வந்தால் இந்திய மக்களின் சராசரி உடல் எடை, உயரம் அதிகரிப்பதோடு, நோயற்ற ஆயுள் சராசரியும் வெகுவாக நீளும். பசுவின் புனிதமென்ற பெயரில் பார்ப்பனியம் நமது உடல் நலனுக்கு எவ்வளவு பெரிய தீங்கிழைத்திருக்கிறது என்பதை அறிக.

அடுத்து, மாட்டிறைச்சியை அசைவப் பழக்கமுள்ளவர்கள்தான் சாப்பிடுகிறார்கள் என்பது தவறு. நாம் இதுவரை சைவமென்று நினைத்துக் கொண்டிருக்கும் பல்வேறு உணவுப் பொருட்களில் மாடு உள்ளது. மாட்டெலும்பிலிருந்து தயாரிக்கப்படும் ஜெலட்டின் என்ற கூழைச் சேர்த்தே ஐஸ்கிரீம், இனிப்புத் தயிர்க்கட்டி (யோகர்ட்) தயாராகிறது. மேலும் சாக்லேட், சூயிங்கம், பழச்சாறு, ஒயின், பீர், பிஸ்கட் வகைகளிலும் மாடு கலந்திருக்கிறது. மனிதனால் செரிக்க முடியாத மாட்டின் பாகங்கள் கால்நடை, செல்ல விலங்கு, கோழி, மீன் ஆகியவற்றின் தீவனமாக நுகரப்படுகின்றது.

### மாட்டின் மருந்துப் பொருள்கள்

மருத்துவ உலகம் தான் கண்டுபிடித்திருக்கும் பல அரிய உயிர்காக்கும் மருந்துகளுக்காக மாட்டிற்குப் பெரிதும் நன்றிக் கடன்பட்டிருக்கிறது. மாட்டின் வேதியல் கூறுகள் மனித உடலுக்குப் பொருந்திப் போவதால் மாட்டின் மூலமாகத் தயாரிக்கப்படும் மருந்து வகைகள் நம் உடலில் தீவிரமாகச் செயல்பட்டு நோயைக் குணப்படுத்துகின்றன. இம்மருந்துகளில் சிலவற்றை செயற்கை முறையில் தயாரிக்க முடியுமென்றாலும் அவற்றின் விலை அதிகமாகும்.

உலகின் சர்க்கரை நோயாளிகளில் அதிகம் பேர் இந்தியாவில்தான் வாழ்கிறார்கள். சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்தும் இன்சுலின் மருந்து மாட்டின் கணையத்திலிருந்தே தயாரிக்கப்படுகிறது. ஒவ்வாமை, மூட்டு-முடக்கு வாதம் மற்றும் நுரையீரல் நோய்களுக்கான 'ஹெபரின்' மருந்து, தைராய்டு சுரப்பிகளை இயங்கவைக்கும் 'தைராபிடின்', டெட்டனஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் 'பாராதைராய்டு ஹார்மோன்கள்', அறுவை சிகிச்சையின் போது இரத்தப் பெருக்கை உறைய வைக்கும் 'க்ளுககோன்', காயங்களைச் சுத்தம் செய்யும் 'ட்டிரிப்ஸின் மற்றும் குரோமோட்டிப்சின்,' புண்களின் சீழை வடிய வைக்கும் 'டி அக்ஸி ரைபோ நியூக்கிலியேஸ், இருதயத்தின் இரத்த அடைப்பை நீக்கும் 'பிப்ரிநோலெஸிக்'



ஏ-ஒன் மாட்டிறைச்சிக் கடை, சென்னை.

போன்ற அரிய மருந்துகளையும் மாடு அளிக்கின்றது.

மேலும் எய்ட்ஸ் நோய்க்குப் பயன்படும் 'பிடல் காஃப் சீரம்', புற்று நோய் சிகிச்சைக்கான 'ஆல்புமின்' ஆகியவற்றையும் மாடு தருகின்றது.

பசுவை புனிதத்தின் பெயரில் ஒதுக்கி வைத்தால் அவ்வரிய மருந்துகள் கிடைக்காது என்பதோடு, ஏழைகளே மிகவும் பாதிக்கப்படுவர்.

### தோல் பொருட்கள்

இந்தியத் தோல் தொழில் குறித்து இவ்விதழில் விரிவாக வேறு கட்டுரையில் எழுதியிருக்கிறோம். அதிகமான கால்நடைகள் வாழும் இந்தியா இயல்பாகவே தோல் உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றது. காலணி, கைப்பை, பெட்டி, பர்ஸ், தொப்பி, பெல்ட், துணிவகை, செல்போன் உறை, கார் இருக்கை உறை, விலங்குகளின் கழுத்து - இடுப்புப் பட்டைகள் முதலானவை மாட்டின் பங்களிப்பாகும். வேறெந்த நாடுகளின் மாடுகளை விடவும் இந்திய மாட்டுத் தோலின் தரம் உயர்வானதாகும். குளிர், வெப்பம் ஆகிய எதிர்மறைத் தட்பவெப்ப நிலையில் இந்திய மாடுகளின் தோல் இயற்கையிலேயே பதப்படுத்தப்படுவதுதான் இந்தத் தரத்திற்குக் காரணம்.

**தாவரங்கள் மற்றும் அதன் மருந்து வகைகளிலிருந்து மனித உடல் 3 சதவீதத்தை மட்டுமே உறிஞ்சிக் கொள்கிறது. ஆனால், மாட்டு இறைச்சியிலிருந்து 23 சதவீத சத்தை நமது உடம்பு ஏற்கிறது. மேலும், அன்றாடம் மாட்டிறைச்சியை உண்ணும் போது நமது உடல், தாவரங்கள் மற்றும் அதன் மருந்துகளிலிருந்து மேலதிக சக்தியை உறிஞ்சும் ஆற்றலையும் பெறுகிறது.**

### அழகு சாதனப் பொருட்கள்

மாடின்றி அழகு சாதனப்பொருட்கள் ஒன்று கூடத் தயாரிக்க முடியாது. முகச்சவர கிரீம்கள், லோசன்கள், குளியல் - சலவைச் சோப்புகள், சிவப்பழகுக் களிம்புகள், பற்பசைகள், மணம் வீசும் சென்டுகள், கூந்தலைப் பராமரிக்கும் ஷாம்புகள், தலைக்குப் பூசப்படும் பல வண்ணச் சாயங்கள் அனைத்திலும் மாடு இருக்கிறது.

### இதர பயன்பாடுகள்

பெயிண்ட், டிஸ்டம்பர், பிளைவுட், புகைப்படச் சுருள், மெழுகுவர்த்தி, பென்சில்கள், கோட்டு பட்டன்கள், இசைக்கருவி நரம்புகள், பிளாஸ்டிக் பொருட்கள், டயர், மசகு எண்ணெய், கிரீஸ், பிளாஸ்டிக் - சிமெண்ட் அச்சுகள், வெடிமருந்து, உரம், அச்சு மை, தாளின் வழவழப்பு, சலவை நோட்டின் விறைப்பு, தீயணைப்புப் பொருட்களின் நுரை ஆகியவற்றில் மாட்டின் பாகங்கள் சேர்க்கப்படுகின்றன. ஒவ்வொருவர் வீட்டிலும் சரி, ஒவ்வொருவரின் அன்றாட வாழ்க்கையிலும் சரி, மாடு இல்லாமல் எவரும் வாழமுடியாது.

ஒருவேளை இந்து மதவெறியர்கள் இப்படியும் கூறலாம்: ''இது வரை மாட்டின் மூலம் கிடைக்கின்ற மருந்துகள் - பொருட்களை அறியாமல் பயன்படுத்திவிட்டோம். இனி மறந்தும் கூடப் பயன்படுத்த மாட்டோம்.'' அப்படி உறுதியாகப் பின்பற்றினால் இந்து மதவெறி அமைப்புகளை இந்த மண்ணிலிருந்து வேரோடு பிடுங்கி எறியும் பணியை நாம் செய்ய வேண்டியதில்லை. 'கோமாதா'வே பார்த்துக் கொள்ளும்! ●

*- மாட்டின் பயன்பாடுகளை இணையத்திலிருந்து தொகுத்து, மொழிபெயர்த்தவர்:* **ஸ்பார்ட்டகஸ்**


படிப்பகம்

www.padippakam.com

மக்களிடம் நேருக்கு நேர்

# மலரும் நினைவுகளாய்...

# மணப்பாறை மாட்டுச் சந்தை

*"மணப்பாறை மாடுகட்டி, மாயவரம் ஏரு பூட்டி வயக்காட்டை உழுது போடு சின்னக் கண்ணு, பசுந்தழையைப் போட்டுப் பாடுபடு செல்லக் கண்ணு" - இந்தப் பாட்டைக் கேட்கும் போதெல்லாம் தமிழகத்தின் விவசாய மணம் நாசியில் உருகி, இதயத்தில் மிதந்து கரையும்.*

*மணியோசையின் தாளத்துக்குத் தப்பாமல் இராணுவ மிடுக்குடன் விரையும் காளைகள், உழவனின் வேர்வையுடன் இணைந்து பாடுபடும் உழவு மாடுகள், எண்ணெய் மணத்துடன் நாள் முழுவதும் சுற்றி வரும் செக்கு மாடுகள், பயிர் வாடாமல் இருக்க தான் வாடி நீரேற்றும் மாடுகள், கன்றுக்கும், பால்காரனுக்கும் பால் சுரந்துவிட்டு செல்லமாய் முரண்டு பிடிக்கும் கறவை மாடுகள், கிராமத்துக் குழந்தைகளோடு குழந்தையாய் துள்ளிக் குதித்து ஓடும் கன்றுகள், தேங்கி நிற்கும் தண்ணீரே சொர்க்கமென்று மகிழ்ந்து, சிறு கற்பாறைகளைப் போல மிதந்து காட்சி தரும் எருமை மாடுகள், மஞ்சு விரட்டிற்காக ஒரு வீரனைப் போல வளர்க்கப்படும் காளைகள், பூம் பூம் மனிதனுக்குப் படியளக்க அப்பாவியாய்த் தலையசைக்கும் அலங்கார மாடுகள், தனது ஏழை உரிமையாளனுக்காக மேம்பாலத்தில் நுரை பொங்க வண்டி இழுக்கும் நகரத்து மாடுகள்....*

*இந்தக் காட்சிகள் ஒன்று சேர்ந்து விரியும் பிரம்மாண்டம்தான் மணப்பாறை மாட்டுச் சந்தை. ஏருக்குப் பிரபலமான மயிலாடுதுறை இறால் பண்ணைகளைால் பாலைவனமாக மாறியதைப் போல, தமிழகத்தின் புகழ்பெற்ற இந்த மாட்டுச்சந்தை இன்று வெறும் அடையாளச் சந்தையாகச் சுருங்கிவிட்டது. முன்பு மாடுகளை விற்கவும், வாங்கவும் வரும் விவசாயிகளின் கனவுகள் பூத்துக் குலுங்கும் மகிழ்ச்சித் திருவிழாவாக இருந்த மணப்பாறைச் சந்தை இன்று கசப்பான நிகழ்காலத்தை மறக்க முனையும் பெருமூச்சாய் மாறிவிட்டது.*

*மாடுகளைப் பராமரிக்க இயலாமல் சீர்குலைந்து போன விவசாயம், தீவனமின்றி நலிவுறும் மாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்து வருகிறது. விவசாயிகளைத் தற்கொலை செய்ய வைக்கும் உலகமயமாக்கம் மாடுகளை மட்டும் விட்டு விடுமா என்ன? இத்தகைய நலிவுற்ற மாடுகளை விற்று கால்வயிற்றுக் கஞ்சி குடிக்கும் கிராமத்தையும், நலிவுற்ற மாடுகளின் இறைச்சியைக் கொஞ்சம் உண்டு கடும் உழைப்பு செய்யும் நகரத்தையும் பசு வதையின் பெயரால் ஒரே நேரத்தில் அச்சுறுத்துகிறது, பார்ப்பனியம். உழைக்கும் மக்களுக்கு இருபுறமும் அடி! இந்நிலையை மணப்பாறைச் சந்தைக்கு வரும் மக்கள் விவரிக்கின்றார்கள்.*

***இளங்கோ, சரவணன், மாரியப்பன் மாட்டுச் சந்தை வியாபாரிகள்***

எங்க ஊரு சந்தையில 10-15 வருசத்துக்கு முன்னால பார்த்தா பிரும்மாண்டமா இருக்கும். வாராவாரம் சந்தைக்கு 25-30 ஆயிரம் மாடுகள் எல்லா ஊருல இருந்தும் வந்து குவியும். உழவு மாடு வாங்கவே பல ஊரு விவசாயிகள் வரு வாங்க. அதுல 25 ஆயிரம் மாடுகள் உழவுக்காகப் போகும். மீதி அறுப்பு மாடாகப் போகும்.

இப்பப் பாத்தீங்கனா நகராட்சிக்காரன் சந்தை இடத்த பாதி வளைச்சிட்டான். மாட்டு எண்ணிக்கையும் முன்னமாதிரி அதிகம் கிடையாது. 2-3 ஆயிரம் மாடுகள்தான் வருது. இதுல எவ்வளவு நல்ல மாடாக இருந்தாலும் விவசாயி வாங்கினாத்தான் போச்சு, இல்லயினா அதுவும் அறுப்புக்குத்தான் போகும். மூவாயிரத்துல முக்காவாசி கேரளாவுக்கும், நம்மூர்களுக்கும் அறுப்பு மாடாகவும், மீதி வளர்ப்புக்கும் போகிறது.

சந்தைக்கு வர்ற மாடுங்க எல்லாம் பக்கத்து ஊருகள்ள இருந்து வருது. காங்கேயம், திருப்பூர், தாராபுரம், சிவலூர், உப்பிடமங்களம், பெருந்துறை, குன்னத்தூர் ஊர்ச் சந்தைகள்ள இருந்து வியாபாரிகள் மாடுகள வாங்கி புதுக்கோட்டை, ஆலங்குடி, மணப்பாறை இன்னும் மற்ற ஊர்ச் சந்தையில சென்று விற்போம். இப்ப வியாபாரம் இல்லாம பல கையாளுங்க (மாட்டுத் தரகர்) வேறு வேலைக்கு (வயல் வேலை, பெருநகரங்களுக்கு கூலி வேலை) போயிட்டாங்க. வியாபாரிகளும் குறைஞ்சிட்டாங்க. மாடுகளும் இப்ப அறுப்புக்குத்தான் போகுது.

நல்லா விவசாயம் நடந்த காலத்துல ஏரு மாட்டுக்கு வேலை இருந்தது. அது இருந்தாத்தான் விவசாயம் செய்ய முடியும். விவசாயிகளும் மாட்டுத் தீவனம் தனியாக வாங்கிப் போடத் தேவையில்லை; பச்சபுல்லு, வைக்கோல், கம்மந்தட்டை எல்லாம் கிடைச்சது. விவசாயிங்க கவலையில்லாம வாழ்க்கையை நடத்தினாங்க.

இப்ப மழைமாரியுமில்லாம காடுகள் வறண்டு போயிருச்சு. கூடுதலா உழவுக்கும் இப்ப ட்ராக்டர் வந்துருச்சு. அதனால பல இடங்கள்ள உழவு மாடு தேவையில்லாம போயிருச்சு. வச்சிருந்தாலும் தீனி வாங்கிப் போட பல நூறு செலவாகுது. விளச்சலும் இல்லாம போச்சு. இப்பவே தீவனம் இல்லாம மணப்பாறைக்குப் பக்கத்துல உள்ள பொன்னிவளநாடு, மருங்காபுரி, பாலக்குறிச்சி, வளநாடு, கோயில்பட்டி போன்ற கிராமங்களுக்குப் போயி கரும்புத் தோகையைக் கழித்துக் கொண்டு வந்துதான் தீனி போடனும். அதுவும் கரும்புத் தோட்டத்துக்காரன் அனுமதி கொடுத்தா உண்டு. இல்லயினா அதுவும் கிடைக்காது. வைக்கோல் கட்டுக்கு 12 ரூபாய் கொடுத்துத்தான் வாங்கிப் போடணும். அது இல்லாம தவிடு, உளுத்தம் பொட்டு, பருத்திக் கொட்டை, கடலை புண்ணாக்கு, எள்ளுப் புண்ணாக்கு இதையெல்லாம் வாங்கிப் போடணும்.

இதைச் செஞ்சும் பிரயோஜனமில்ல. பால் மாடுகளக் கூட நல்லா கறக்கும் வரைதான் வச்சுக்குவோம். இல்லயினா அதயும் வெட்டுக்கு அனுப்பிடுவோம். பசுமாடுன்னா ஒரு நாள் தீவனச் செலவு 70 ரூபாயும், உழவு மாட்டுக்கு கொஞ்சம் அதிகம் வரும். இந்தச் செலவு கிராமப்புறமாக இருந்தால் பாதிக்குப் பாதி குறையும். நகரமா இருந்தா தொட்ட தொண்ணூறுக்கும் பணம்தான். மாடுகளைப் பராமரிக்க முடியிற வரைக்கும், வீட்டில் பணத்தேவை இல்லாத வரைக்குந்தான் மாடுகளை வச்சுக்குவோம். கஷ்டநிலை வந்த உடனே அதை வித்துருவோம்.

இப்படி விக்கிற மாடுகள் வாங்கு



படிப்பகம்

www.padippakam.com

பவர் இல்லாமல் வெட்டு மாடாகத்தான் போகுது. இப்பவும் சந்தைக்கு வர்ற மாடுகள்ள ஜெர்சி, சிந்து, கலொகி, சுருளி, காங்கேயங் கன்று, தஞ்சை மொளைக் காளை, நாட்டு எருமை, ஜாதி எருமை, நாட்டு மாடுன்னு பல வகையும் வருது.

மணப்பாறைச் சந்தையில விற்கிற மாடுகள் கேரளாவில் உள்ள திருச்சூர், எர்ணாகுளம், பெருந்தாள்மன், கோழிக் கோடு, கோட்டயம், கோனலூர், கொடு மனம், கண்ணனூர், திருவனந்தபுரம் போன்ற ஊர்களுக்கும், பொள்ளாச்சி, செங்கோட்டை, மார்த்தாண்டம் போன்ற ஊர்களுக்கும் அனுப்பப்படுது.


மணப்பாறையில் மட்டும் ஒரு நாளைக்கு 50 மாடுகள் வெட்டுறாங்க. இப்ப எல்லா ஊர்லயும் எல்லாரும் மாட்டுக் கறி சாப்பிடுறாங்க. சாதி வித்தி யாசம் பார்க்கிறதில்ல. மணப்பாறை யில் மேல்ஜாதிக்காரங்க நேரடியா மாட்டுக்கறி வாங்குறது குறைவு தான். ஆனால் பிரியாணி, ஃபாஸ்ட் புட் கடை களில் அவுங்கதான் அதிகம் பேர் சாப்பி டுவாங்க.

பசுவதைத் தடைச்சட்டம் வந்தால் வியாபாரிங்க மட்டும் பாதிக்கப்படப் போவதில்லை. எல்லா தரப்பு மக்களும் பாதிக்கப்படுவாங்க. ஆத்திர அவசரத் துக்கு மாடுகள விக்க முடியாது. வீணாக மாட்டு எண்ணிக்கை அதிகமாயிடும். வியாபாரிகள் எல்லாரும் ஒன்னு சேர்ந்து சட்டத்தை எதிர்ப்போம்.

***சங்கரபாண்டியன், கடலூர் வியாபாரி***

தமிழ் நாட்ல ஒரு கிலோ மாட்டுக் கறி 40 முதல் 50 ரூபாய் வரை விக்கிது. சதைப்பிடிப்புள்ள பெரிய மாட்டை மூவாயிரம் ரூபாய்க்கு வாங்கினால் 60 முதல் 70 கிலோ வரை கறி கிடைக்கும். இதையும், தோல் பணத்தையும் சேர்த்தா கறி போடுறவுங்களுக்கு 300 முதல் 500 ரூபாய் வரை இலாபம் கிடைக்கும். வண்டிக் கூலி, வெட்டுக்கூலி போக ஏதோ கொஞ்சம் கிடைக்கும். பெரிய இலாபம் கிடையாது. கன்னுக்குட்டித் தோல் விலை ரூ. 150-200, நடுத்தர மாட்டின் தோல் ரூ. 500-700, விலை உயர்ந்த மாட்டின் தோல் ரூ. 1200-1500 வரை விற்கப்படுகிறது.

இந்தத் தோல்களில் பாதி ஜெர்ம னிக்குப் போகுது. இங்கு திருச்சி, திண்டுக்கல், பெருந்துறை, ஈரோடு போன்ற ஊர்களுக்கும் போகுது. இந்த ஊர்களில் உள்ள தோல் தொழிற்சாலை களில் ஆயிரக்கணக்கான தொழிலா ளர்கள் வேலை செய்கின்றனர். மாடு வெட்டக் கூடாதுன்னு சட்டம் போட்டா இவங்க எல்லாருக்கும் பட்டினிச் சாவுதான்.



அறுப்பிற்காக கேரளாவிற்கு கொண்டுச் செல்லத் தயாராகவிருக்கும் மாடுகள்

மாட்டெலும்பு உரக் கம்பெனி களுக்கு ஒரு கிலோ ரூ. 1.50 முதல் 2 வரை. 50,100 கிலோ என மொத்தமாக வாங்குவார்கள். ஒரு வாரத்துக்கு 300 ரூபாய் கூலி வாங்குற சாதாரண ஜனங்க 140 ரூபாய் போட்டு ஆட்டுக்கறி வாங்க முடியாது. 40 ரூபாய் கொடுத்து மாட்டுக் கறிதான் வாங்கிச் சாப்பிட முடியும்.

***மாடுகளை விற்க வந்த ஒரு விவசாயி***

மனுசனுக்கே சாப்பாடு இல்லைங் கிற போது மழையில்ல, மேச்சலுமில்ல, இதுல நான் என் மாட்ட வைச்சுக்கிட்டு என்ன பண்றது? பாத்தா பாவமா இருக்கு. எங்க வீட்டுக்காரி மாட்டுப் பட்டிப் பக்கம் போனாலே 'அம்மா... அம்மா'ன்னு கத்துது. அதான் நம்ம கையில பசியால சாவதை விட வியா பாரிகிட்ட கொடுத்தா அத அவன் எங்கையோ கொண்டு போயி வித்து ருவான். அதாம்ப்பா இந்த ரெண்டு மாட்டையும் சந்தைக்கு ஓட்டிவந்தேன். இதுல கிடைச்ச பணம் கிடைக்கட்டுமே. என்ன 3500, 4500 ரூபாய்க்கு விக்கும். வியாபாரிங்க மூவாயிரத்துக்கு மேல கேக்க மாட்டேங்குறான். என்ன செய்யு ரதுன்னு தெரியல, சந்தை முடியுர வரை பார்ப்போம், இல்லைன்னா கேட்ட விலைக்கு வித்துட்டு போக வேண்டி யதுதான்.

***மாரியப்பன், சந்தை வளாகத்தில் சிறு ஓட்டல் வைத்திருப்பவர்***

வாரத்துக்கு ஒரு முறைதான் சந்தை. இதுல செவ்வாய் மதியம் முதல் புதன் மாலை வரை கடை வைப்போம். 500 முதல் 700 ரூபாய் வரை லாபம் கிடைக்கும். அடுத்த சந்தை வரை குடும் பத்துக்கு தேவையான செலவும், நல்லது கெட்டது எல்லாமே இத வச்சி தான செஞ்சிக்கனும். பசுவதை தடைச் சட்டம் வந்தால் மாடு சந்தைக்கு வராது அது வராம நாங்க பொழைக்க முடியாது. கந்து வட்டிக்காரனிடம் கடன் வாங்கி மீண்டும் அடைக்கமுடியாது. மிஞ்சிய ஒரே வழி தற்கொலைதான். நான் மட்டுமல்ல இங்கு கடை வைத்தி ருக்கும் எல்லோரின் நிலையும் இதுதான்.

***வெள்ளைச்சாமி, சுமைதூக்கும் தொழிலாளி, திண்டுக்கல்***

வயல் வேலை எதுவும் அந்த அள வுக்கு எங்க ஊருல இல்ல. இந்த மணப் பாறை சந்தையில மாடு ஏற்றி விட்டால் ஒரு சந்தைக்கு 200 ரூபாய் கிடைக்கும். இது எனக்குப் பத்தாது. என் புள்ளய படிக்க வச்சிருக்கேன். அவனுக்கு பணம் அனுப்பணும். குடும்பத்தையும் நடத்தணும். அதனாலதான் ஒரு வாரத் துக்கு முன்னாடியே ஆந்திரா போயிட்டு, அங்குள்ள மாட்டு புரோக்கரைப் பிடிச்சு வேலை கேட்டு, மாடுகளை ஏத்திக்கிட்டு மணப்பாறை கொண்டு வந்தா 350 ரூபாய் கிடைக்கும். அத வீட்டுல கொடுத்துட்டு மறுபடியும் ஆந்திரா வுக்கோ, கேரளாவுக்கோ போகணும். தடைச் சட்டம் வந்தால் ரேசன் அரி சிக்குக் கூட வழியிருக்காது. பட்டினி கிடந்து சாகவேண்டியதுதான்.

***வெள்ளைக்கண்ணு, சின்னதுரை, மாட்டுக்கறிக் கடை***

எனக்கு டி.பி. நோய் இருந்தது முன்னாடி மாட்டுக்கறின்னாவே சாப்பிட மாட்டேன். எங்க குடும்பத்து லயும் சாப்பிட மாட்டாங்க. பிறகு டி.பி.நோய் போகணும்னா மாட்டுக்கறி சாப்பிட்டே தீரணும்னு டாக்டர் சொல்லி விட்டார். ஆரம்பத்துல சாப்பிடும்

www.padippakam.com

போது மனசுக்குச் சுத்தமா புடிக்கல, பல்லக் கடிச்சுக்கிட்டு சாப்பிடுவேன். இப்ப என் உயிர் இருக்கக் காரணம் மாட்டுக்கறிதான். அதனாலதான் இந்தப் பயன் எல்லாருக்கும் கிடைக்கணும்னு 7 வருசமா இந்தக் கடையை நடத்திக்கிட்டிருக்கேன். தடைச் சட்டம் கொண்டு வந்தால் யாருக்கெல்லாம் டி.பி, ஆஸ்த்துமா நோய் இருக்குதோ அவங்கெல்லாம் சாக வேண்டியதுதான். ஏன்னா மாட்டுக்கறியை விட உயர்ந்த மருந்து கிடையாதுன்னு ஆஸ்பத்திரியிலயே சொல்லியிருக்காங்க.

***கர்ணன், வியாபாரி, திண்டுக்கல்***


இந்தச் சந்தை எனக்குத் தெரிஞ்ச வரை என்தாத்தா காலத்துல இருந்தே இருக்கு. குறைஞ்சது 150 வருசமா இந்தச் சந்தை இருந்திருக்கும். மாடு வளர்ப்பு, விற்பனையில மொத்தமாப் பாத்தீங்கன்னா பல ஆயிரம் குடும்பங்கள் உயிர்வாழுது. இந்த வாரச்சந்தையில மட்டும் செவ்வாய் மதியத்திலிருந்து புதன் மாலை வரை மக்கள் கூட்டம் திருவிழா போல ஜேஜேன்னு இருக்கும்.

சந்தையை வைத்து மட்டும் பல குடும்பங்கள் பிழைக்குது. மாட்டுத் தரகர்கள் 900 பேர், மாடு ஏற்றும் தொழிலாளிகள் 500 பேர், மாடு ஏற்றிச் செல்லும் டெம்போ, லாரிகள் 100 வண்டிகள், ஒவ்வொரு வண்டிக்கும் ஒரு ஓட்டுநர், ஒரு உதவியாளர், இரண்டு அல்லது மூன்று பேர் வேலை செய்யும் சிறுகடைகள் 50, ஐஸ் விற்பவர்கள் 15 பேர், வைக்கோல்-புல்லுக்கட்டு விற்பவர்கள் 50 பேர், தண்ணீர் பாக்கெட் விற்பவர்கள் 25 பேர், மாட்டுக்குத் தலைக்கயிறு, மூக்கணாங்கயிறு, நெற்றிக்கயிறு, கழுத்துக் கயிறு விற்பவர்கள் 50 பேர், கொம்பு சீவுபவர்கள் 10 பேர், மாட்டுக்கு லாடம் கட்டுபவர்கள் 50 பேர், முடி திருத்தும் தொழிலாளர்கள் 10 பேர், லேகியம், நாட்டு மருந்து, கேசட் விற்பவர்கள் 50 பேர். இத்தனைப் பேரும் இந்தச் சந்தையை நம்பித்தான் பிழைக்கின்றனர்.

ஒரு லோடு மாடு என்றால் 22 மாடுகள்தான் ஏற்றவேண்டும். அதுல வியாபாரிகளுக்கு கட்டுப்படியாகாதுங்கறதுனால ஒரு லாரியில் 30 மாடுகள் ஏற்றுவோம். போலீசு கண்டுபிடிச்சா 100 ரூபாய் முதல் 500 வரை மாமூல் கொடுக்கணும். மாடுகளை தொடர்ச்சியாக வெளிமாநிலத்துக்கு ஏற்றிச் சென்றால் 'பாஸ்' எடுக்கலாம். அதுக்கு ஒரு மாட்டுக்கு 10 ரூபாய் கட்டணும்.

ஒரு முறை மதுரை மேலூர் சந்தையிலிருந்து 6 லாரிகளில் 150 மாடுகளை ஏற்றிச் செல்லும் போது செங்கோட்டை பக்கத்துல சுரண்டை வீராணத்தைச் சேர்ந்த தேவர் சாதி நபரும், போலீசும் சேர்ந்து மாடுகளை கறிக்காக வெளிமாநிலங்களுக்கு விற்கக்கூடாது என்று மிரட்டி 'கோசாலைக்கு' கொண்டு செல்வதாகப் பறித்துச் சென்றனர். அதற்கப்புறம் அந்த மாடுகள் எங்கே போச்சு என்பதே தெரியல. 'கோசாலை' என்ற பெயரில இப்படி வழிப்பறி நடக்குறது புதுசா எங்களுக்கு வந்திருக்கிற சோதனை!

*செய்தி, புகைப்படம் : பு.ஜ. குழு, திருச்சி*



உடம்பில் தோல்சொட்டை விழுந்த மாடுகள்.
வளர்ப்பிற்கு உதவாத இம்மாடுகள் கறிக்கு அனுப்பப்படுகின்றன.

## பசுவதைத் தடைச்சட்டம் குறித்து மணப்பாறை மாட்டுச் சந்தை வியாபாரிகளின் கருத்து

- *மாட்டை விக்காம விவசாயி வீட்டுல வரும் அவசரச் செலவுக்கு என்ன செய்யிறது, சினை பிடிக்காத மாடுகளை வச்சுக்கிட்டு என்ன செய்யிறது, சுழிமாடுகளை வீட்டுல வைச்சிருந்தா ஆகாதுன்னு சொல்லுவாங்க, அதை என்ன செய்யிறது?*

- *மாடுகள விற்கக் கூடாதுன்னு ஜெயலலிதா சட்டம் போட்டா செத்துப் போன மாடுகளையும், வயசு மூத்துன மாடுகளையும் போயசு தோட்டத்துல விடவேண்டியதுதான். அப்பதான் அவ நம்ம வழிக்கு வருவா.*

- *பசுவை தாய், தெய்வம் என்று சொல்றவங்கெல்லாம் அவங்களுடைய வீட்டில் உள்ள அம்மா, அப்பாவை அடிச்சித் துரத்திட்டு, பசு மாட்டையும், காளக்கன்னையும் தாய், தந்தையாக வைத்துக்கொண்டு வேளா வேளக்கி தரமான புண்ணாக்கு, தீவனம் போட்டு காப்பாத்தட்டும். அப்படிச் செஞ்சா ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி சொல்லாமலேயே நாங்க மாடு வெட்டுறத நிப்பாட்டிக்கிறோம்.*

- *அத விடுங்க, சீரங்குத்துல கோசாலை வச்சிருக்கான். எதுக்கு? பசு மாட்ட பாதுகாக்கத்தானே? ஆனால் மக்கள் பசுமாட்டை அங்க விட்டுட்டா அத ஏலம் போட்டு விக்கிறானுக. மாடு செத்துட்டா வெட்டியாங்கிட்ட ஏத்தி உடுறானுங்க. இவன் தெய்வம்ன்னு சொன்னா அதை அங்கேயே புதைக்கிறதுதானே?*

- *பசுமாட்ட தாய்னு சொல்றானுங்கல்ல, உலகத்துல எங்கியாவது தாய் மொலையில இருந்து பால் கறந்து விக்கிறத, குடிக்கிறத பார்த்திருக்கீங்களா. இதுதான் கொடுமையானது. மாடு உயிரோட இருக்கும்போது அதன் கொழுப்புச் சத்து எல்லாத்தையும் பாலா சாப்புடறது அவங்கதான். மிஞ்சிப்போன சக்கையைத்தான் நாங்க சாப்பிடுறோம். நீ பால் சாப்பிடாம வாழமுடியாது, செத்துப்புடுவே. ஆனால் நாங்க கறி சாப்பிடாம வாழமுடியும்.*

- *இவனுங்க இஷ்டத்துக்கு எதையும் செய்யுவானுங்க. ஆனால் காலம் காலமா கறிதிங்கறவங்க திங்கக் கூடாதுன்னு சொல்வதை எதிர்த்தா அது தப்பாம், அதுக்கு ஒரு சட்டமா? பசுவதைத் தடைச் சட்டம் மட்டும் வரட்டும், அதுக்கப்புறம் பாருங்க என்ன நடக்குதுன்னு. ஏன் இப்படி கோவமா சொல்றோம்னா .அந்தச் சட்டம் அமலுக்கு வந்தால் எங்கள மாதிரி ஏழை, நடுத்தர மக்கள் வாழவே முடியாது.*


படிப்பகம்

www.padippakam.com

# கோசாலை

## காப்பகமா காட்சிக்கூடமா?

''ஸமீபத்தில் ரொம்பவும் ஆச்சர்யமாக ஒன்று ந்யூஸ் பேப்பரிலேயே பெரிசாகப் போட்டு வந்ததைப் பார்த்தோம் - போபாலில் நடந்த பயங்கரமான 'காஸ் லீக்கேஜ்' விபத்தில் ஊர் பூராவும் ஜனங்களும் மிருகங்களும் பிராணன் போயும், ப்ரஜ்ஞாபங்கமாயும், பலவிதமான ரோகங்களுக்கும் ஆளாகியும் சாய்ந்த போதிலும் அக்னி ஹோத்ரப் புகை சூழ்ந்திருந்த ஒரு க்ருஹத்தில் மட்டும் எந்த ஹானியும் ஏற்படாமல் ஸ்வஸ்தமாக இருந்தார்கள் என்று ந்யூஸ் படித்தோம்''

- செத்துப்போன சீனியர் சங்கராச்சாரி, கோ ஸம்ரக்ஷண சாலா, மாம்பலம் - சென்னை வெளியிட்டுள்ள 'வெள்ளி விழா சிறப்பு மலரில்'.

போபால் விபத்தில் பத்தாயிரம் பேர் கொல்லப்பட்டதும், அமெரிக்க யூனியன் கார்பைடு - ஆண்டர்சன் குற்றவாளிக் கும்பல் தண்டிக்கப்படாததும், மத்திய அரசு - நீதிமன்றங்கள் அதற்கு உதவிசெய்வதும் குறித்துப் பலரும் எழுதி, பேசிப் போராடும்போது இந்து மதவெறியர்கள் மட்டும் இந்த 'அக்னி ஹோத்ர' பச்சைப் பொய்யை கோயபல்ஸ் பிரச்சாரத்தையும் விஞ்சிப் பிதற்றுகிறார்கள்.

சீனியரின் கூற்றுப்படியே பசு மாடுகளையும் உள்ளிட்ட எல்லா மிருகங்களும் செத்து மடிந்திருக்கின்றன. ஆனால், சாவதற்கு முன்னால் பசுவிடம் சேகரித்த பால், நெய்,வரட்டியினால் எரிந்து வந்த புகை ஒரு குடும்பத்தைக் காப்பாற்றியதாம்! எவ்வித ஆதாரமும், உண்மையுமற்ற வதந்தியின் மூலம் எழவு வீட்டிலும் ஆதாயம் தேடும் இவர்களை என்ன செய்வது? சங்கரமடத்தில் மெதில் ஐசோ சயனைடு வாயுவைத் திறந்துவிட்டு அக்னிஹோத்ர வேள்விப் புகையின் வலிமையைச் சோதிக்கலாம், அல்லது சங்கராச்சாரியின் வாயில் சைலன்சர் குழாயைச் சொருகிச் சோதித்துப் பார்க்கலாம்.

முசுலீம்களைக் குறிவைத்தும், பார்ப்பனப் பண்பாட்டைத் திணிப்பதற்கும் மாடுகுறித்து இவர்கள் புனைந்திருக்கும் கட்டுக்கதைகள் ஏராளம். முக்கியமாக இந்தி பேசும் மாநிலங்களில் பா.ஜ.க.வும் காங்கிரசும் ''பசுவின் புனிதம் காக்கும் சிறந்த இந்து யார்'' என்று தமக்குள் போட்டியிடுகின்றனர். வறட்சியினால் தவிக்கும் மத்தியப் பிரதேசத்தில் ஒரு லிட்டர் மாட்டு மூத்திரம் ஆறு ரூபாய்க்குக் கிடைப்பதில் பெருமைப்படும் முதல்வர் திக் விஜயசிங், தானே அதைத் தினசரி குடிப்பதாகவும் அறிவித்தார். வரும் சட்டமன்றத் தேர்தலில் உமாபாரதியின் காவிஅலையைத் தடுக்க காங்கிரசும் அதே அலையைக் கிளப்புகிறது. இந்தியா முழுவதும் பசுவதைத் தடைச் சட்டம் கொண்டு வருமாறு திக்விஜயசிங் வாஜ்பாயிக்கு கடிதம் எழுதியது இந்தக் கணக்கில்தான்.

ஆட்சியிலிருக்கும் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் பல ஆண்டுகளாகப் பசுவின் புனிதத்தை உருவாக்கி வருகிறது. பல இடங்களில் பசுக்காப்பகங்கள், பசு தெரபி என்றொரு வைத்திய முறை, பசுவைக் காக்க யாத்திரைகள் என ஆங்காங்கே செய்து வந்தவர்கள் தற்போதைய ஆட்சியின் உதவியால் அரசுப் பணத்தை விரயமிட்டு நாடு முழுவதும் இதைச் செய்து வருகின்றனர். சங்கப் பரிவாரங்கள் நாக்பூரில் அமைத்திருக்கும் ''பசு அறிவியல் ஆராய்ச்சி மையம்'' மாட்டின் பால், தயிர், நெய், மூத்திரம், சாணி ஆகியவற்றை வைத்து 32 வகையான மருந்துகளை உருவாக்கி, விற்று வருகிறது.

டி.ஜி.எஸ். தினகரன் பாணியில் 'சாட்சிகள்' குணமடைந்த கதைகளை வைத்து எந்த அறிவியல்-மருத்துவ அடிப்படையுமின்றிச் செய்யப்படும் இந்த 'மருந்து ஆராய்ச்சிகளுக்கு' மத்திய அரசின் பல்வேறு அறிவியல் - உயிரியல் ஆராய்ச்சி அமைப்புக்கள் பணமும், அறிவியல் முத்திரையும் அளிக்கின்றன. இந்திய தேசிய அறிவியல் அகாடமியின் கூட்டத்தில், பிரபலமான அறிவியலாளர்கள் நிறைந்திருக்கும் சபையில் மந்திரி முரளி மனோகர் ஜோஷி மாட்டு மூத்திர மகிமையை அறிவியல் என்று தைரியமாக எடுத்துரைக்கிறார். மத்திய அரசின் புகழ் பெற்ற ''அறிவியல் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனம்''

***மாம்பலம் கோசாலையின் பொறுப்பாளர் ஒருவரிடம் வேத கால ஆரியர்கள் மாட்டிறைச்சி சாப்பிட்டதையும், ஆயிரக்கணக்கான மாடுகள் கொல்லப்பட்டு வேள்விகள் நடந்ததையும் சொல்லி, ''அப்போது பசு புனிதமாகக் கருதப்படவில்லையே'' என்று கேட்ட போது, ''அதெல்லாம் பழைய விசயம், இப்போதுள்ள நிலைமையிலிருந்து பேசுவோம்'' என்று நழுவினார். ''பசுவைக் கொல்வது சொந்தத் தாயைக் கொல்வது போல மகா பாவமாகக் கருதுகிறீர்களே, அந்தத் தாய் இறந்த பின் தாழ்த்தப்பட்டோரைக் கூப்பிட்டு புதைக்கச் சொல்கிறீர்களே?'' என்று கேட்டதற்கு, ''எல்லாச் சடங்குகளும் பூசையும் செய்த பின்தான் அவரிடம் கொடுக்கிறோம். அதன் உருவம் பெரியதாக உள்ளது, நம்மால் தூக்கிப் போய் புதைக்க முடியாது.'' என்றார். கோமாதா பூசைக்கு வரும் தொந்தி பெருத்த நான்கு மாமாக்களுக்கு ஆளனுப்பி தூக்கிப்போய் புதைத்துப் புண்ணியம் தேடிக் கொள்ளலாமே!***

சங்கரமடத்து கோசாலை:
இடுப்பு வளையாமல் பழம் கொடுக்கும் சின்னவாள்.






படிப்பகம்

www.padippakam.com

மேற்படி நாக்பூர் மாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் மருந்து வகைகளுக்கு பணமும், அறிவியல் முத்திரையும் கொடுக்கிறது. இதே நிறுவனம்தான் இந்தியாவின் ஆங்கில மருந்துச் சந்தையை சோதித்தறிகிறதாம்! இந்தியாவில் போலி ஆங்கில மருந்துகள் ஆண்டுக்கு 6000 கோடி ரூபாய்க்கு விற்பனையாவதில் வியப்பென்ன?

13.09.03 தினமணியில் கா.சீனிவாசன் எனும் ஒரு ஆர்.எஸ்.எஸ். அடிப்பொடி பசுவதைத் தடைச் சட்டத்தை ஆதரித்து எழுதிய நடுப்பக்கக் கட்டுரையில் வயதான பசுவிற்கு ஓர் ஆண்டுச் செலவு ரூ. 8,000 தான்; அது ஆண்டொன்றுக்கு 20 டன் சாணம் போடும், அதன் உர மதிப்பு ரூ. 40,000 என்று எழுதியிருந்தார். இதன்படி அந்த மாடு நாளொன்றுக்கு 55 கிலோ சாணம் போடும். அதற்காக அது உட்கொள்ள வேண்டிய தீனியின் எடை 150-200 கிலோ என்று வருகிறது. இதன் விலை ரூ. 1000-1500 வரும்! வெறும் சாணியை மட்டும் விற்றாலே விவசாயி லட்சாதிபதி ஆகிவிடலாம் என்று எழுதுபவனையும், அதற்கு நடுப்பக்கத்தில் இடம் கொடுத்துப் புல்லரிக்கும் தினமணியையும் எதைக் கொண்டு அடிப்பது?

இத்தகைய புனிதப்புரட்டுகளை மீறி பால்வற்றிய, வயதான மாடுகளைப் பராமரிக்க முடியாத விவசாயிகள் அவற்றை அடி மாட்டுச் சந்தையில் விற்று வரும் யதார்த்தம் இந்து மதவெறியர்களை அலைக்கழிக்கிறது. அதற்கு அவர்கள் கண்டுபிடித்த ஒரு தீர்வு 'கோசாலா' எனப்படும் பசுக்காப்பகங்கள்.

ஆண்டுதோறும் வெட்டப்படும் இலட்சக்கணக்கான மாடுகள் அனைத்தையும் விலை கொடுத்து வாங்கிக் காப்பகம் வைத்தே ஆக வேண்டும் என்றால் ஆர்.எஸ்.எஸ். அம்பிகள் துண்டைக் காணோம், துணியைக் காணோமென்று ஓடி விடுவார்கள். புரவலர்களிடம் இடத்தையும், பணத்தையும் கறந்து, ஒரு சில நல்ல மாடுகளை மட்டுமே வைத்து நடத்தப்படும் இக்காப்பகங்கள் பசுவின் புனிதக் கதைகளைப் பரப்புவதற்கு மட்டுமே பயன்படுகின்றன.


நன்றி: அவுட்லுக்

மாட்டுச் சாணியும் மூத்திரமும் மருந்துகளாம்: மத்திய அரசின் அறிவியல் முத்திரை!

சென்னையில் பார்ப்பன 'மணம்' கமழும் மேற்கு மாம்பலத்தில் சங்கர மடத்தால் ஒரு மாட்டுக்காப்பகம் நடத்தப்படுகிறது. 1976-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இக்காப்பகத்தில் தற்போது 40 மாடுகளும் 20 கன்றுக்குட்டிகளும் இருக்கின்றன. 26 ஆண்டுகளாகியும் மாடுகள் ஆயிரக்கணக்கில் இல்லையே என்ற கேள்விக்கான விடையில்தான் சூட்சுமம் மறைந்திருக்கிறது. சங்கர மடத்தில் அவாள் சமூகத்தினரைத் தவிர எவரும் சுலபமாக நுழைய முடியாததைப் போல இங்கும் புறம்போக்கு மாடுகள் எவையும் உள்ளே வர முடியாது.

ஒரு மாட்டின் நுழைவுக் கட்டணம் குறைந்தது ரூ.1000 என வைத்திருக்கிறார்கள். பால் வற்றிய, வயதான மாடுகளாக இருக்கலாம். ஆனால் நோய்களுள்ள மாடுகளுக்கு அனுமதி இல்லை. இங்கிதமாக வேறு இடங்களுக்குக் கைகாட்டி விடுவார்கள். நாம் பார்த்த வரை உதவாக்கரை மாடுகள்

## கோவில் தான மாடு – ஒரு மோசடி

*தமிழகத்தின் புகழ்பெற்ற கோவில்களுக்கு மாடுகளைத் தானமாக அளிக்கும் வழக்கம் இருக்கிறது. பக்தியினால் இலவசமாக வரும் இம்மாடுகளைக் கூட பராமரிக்க முடியாமல் அடிமாடுகளாக மறைமுக விற்பனை செய்து நமது அரசாங்கமே காசு பார்க்கிறது. திருச்சி - திருவரங்கம் கோவிலுக்கு நாம் சென்றபோது 70 மாடுகள் இருந்தன. அரங்கநாதனை போஷாக்குடன் கவனிக்கும் கோவில் நிர்வாகம் மாடுகளை மட்டும் பட்டினி போட்டுப் பராமரிப்பின்றி வைத்திருக்கிறது. மாடுகளின் இருப்பை வைத்து அவ்வப்போது ஏலம் நடக்கும். ஏலதாரர்கள் அடிமாட்டுக்கு வாங்குவது தெரிந்துதான் ஏலம் நடக்கிறது. ஆக, அரங்கநாதனும் மாட்டிறைச்சி விற்ற காசில்தான் படுத்துக் கொண்டே சாப்பிடுகிறார்.*

*பார்ப்பன அர்ச்சகரைக் கொண்டு இயங்கி வரும் மதுரை அழகர் கோவில் எல்லா சாதி மக்களுக்கும் குறிப்பாக கோனார் சாதி மக்களுக்கும் முக்கியமான கோயில். மாடு தானமும் இங்கே அதிகம். கோவிலுக்கு மாடு கொடுக்க விரும்புவோர் ரூ.100 பணம் கட்டி விட்டு ஏலதாரிடம்தான் மாட்டை ஒப்படைக்க வேண்டும். நேரடியாக கோவிலுக்கு கொடுக்க முடியாது. நகராட்சிக் கக்கூசை ஏலம் விடுவது போல நேர்த்திக் கடனாக வரவிருக்கும் மாடுகளை முன்கூட்டியே ஏலம் விடுகிறது கோயில் நிர்வாகம். மேலும், அ.தி.மு.க. எம்.எல்.ஏ சாமியின் உறவினரான மாயன் என்பவர்தான் தற்போதைய ஏலதாரர். ஓராண்டு ஏலத்தொகையாக கோவிலுக்கு இவர் செலுத்தியது. ரூ.11,70,000 தான். ஆனால், இவரது ஆண்டு இலாபம் 10 இலட்சத்திற்குக் குறையாது என்கிறார்கள்.*

*ஆகஸ்டு மாதம் 40 மாடுகளும், செப்டம்பர் மாதம் 37 மாடுகளும் தானமாக வந்தன. தை முதல் சித்திரை வரை மாதம் 150 மாடுகள் வரை வரும். இலாபம் அதிகம் என்பதாலும், கோவிலில் புல்வெளிகள் அதிகம் என்பதாலும் மாடுகள் ஆரோக்கியமாக உள்ளன. மாடு கொண்டு வராத பக்தர்கள் ஏலதாரர் மாயனிடமே விலை கொடுத்து மாடு வாங்கி, நேர்ந்து கொண்டு, மாயனிடமே திருப்பி விடலாம். அதுமட்டுமின்றி மாடுகளின் தன்மையைப் பொறுத்து கறவைக்கோ, உழவுக்கோ, அடிமாடாகவோ மாயன் விற்று வருகிறார். நாம் முதல்நாள் பார்த்தபோது இருந்த 77 மாடுகளில் மறுநாள் மிச்சமிருந்தவை 3 தான். எல்லாம் மேலூர் சந்தையில் விலை போய்விட்டன.*

*தமிழகம் முழுவதும் உள்ள ஆண்டவன்களும், அரசுகளுமே மாடுகளைப் பராமரிக்க முடியாமல் அடிமாட்டுக்கு விற்கும் போது பாவப்பட்ட விவசாயி என்ன செய்ய முடியும்? ஒரு வேளை பசுவதைத் தடைச் சட்டம் முழுமையாக அமலுக்கு வந்தால், சீரங்கநாதனும், கள்ளழகரும்தான் முதலில் கம்பி எண்ண வேண்டிவரும். வேடிக்கையில்லை. நம் உரிமையியல் சட்டத்தின் படி கடவுள் சிலைகள் எல்லாம் சொத்துக்களின் உடைமையாளர்கள்!*

*— செய்தி: பு.ஜ. குழு, திருச்சி, பாலன் – மதுரை*


படிப்பகம்

www.padippakam.com



அரியானா : மாட்டுக்குப் பாதுகாப்பு கோரும் சங்க பரிவாரங்கள் மனிதர்களுக்கு தீ வைக்கிறார்கள். நன்றி: அவுட்லுக்

மிகவும் குறைவு. பால் சுரக்கும் கொழு கொழு மாடுகளே அதிகம். மொத்தத்தில் இதைக் காப்பகம் என்பதைவிட பண்ணை என்பதே சரி. அவலமே வாழ்க்கையாகிப் போன விவசாயிகள் உதவாத மாடுகளை 4000, 5000 ரூபாய்க்கு விற்று உதவும் மாடுகளைப் பராமரிக்க போராடுகிறார்கள். அவர்களின் மாடுகள் இங்கே வருவதற்கான வாய்ப்பேயில்லை. ஒருவேளை அந்தத் தொகைக்கு அம்மாடுகளை வாங்கிக் காப்பகம் அமைக்க வேண்டுமென்றால் நாசிக்கில் கூடுதலாக ஒரு ஷிப்ட் போட்டுப் பணம் அச்சடிக்கவேண்டும்.

மனிதாபிமானக் கணக்குக்காக நடத்தப்படும் இக்காப்பகத்திற்கு வரும் மாடுகள் எவருடையது? மயிலை கபாலீஸ்வரர் கோவிலுக்குத் தானமாக வரும் மாடுகளில் மதிப்புள்ளவை சங்கரமடச் செல்வாக்கால் இங்கு வருகின்றன. மதிப்பற்ற பெரும்பாலான மாடுகள் ஏலம் என்ற பெயரில் அடிமாடாக மாறுகின்றன. அப்புறம் பார்ப்பனக் குடும்பங்களில் இறந்தோருக்குச் செய்யப்படும் சடங்குகளில் புரோகிதருக்குத் தானமாகத் தரப்படும் மாடுகள் கோசாலைக்கு வருகின்றன. பணக்காரர்கள் வீடுகளிலிருக்கும் உதவாக்கரை - மாடுகள் பண உதவியுடன் வந்து சேருகின்றன.

மாடுகளைச் சேர்ப்பதற்கே இத்தனை விதிமுறைகள் வைத்திருக்கும் கோசாலையில் பசுவை நேசித்து, சேவை செய்ய விரும்புவோருக்கும் விதிமுறை தீர்மானித்திருக்கிறார்கள். போஷகருக்கு ரூ.5000, ஆயுள் சந்தா ரூ.1000. ஒரு மாடு ஒரு மாதம் போஷிக்க ரூ.500, அல்லது இஷ்டமான நன்கொடை என்று பல தினுசுகளில் சேவை செய்து புண்ணியமடையும் பாக்கியமுண்டு. சங்கராச்சாரிகள், ஆர்.எஸ்.எஸ்., வி.இ.ப., பா.ஜ.க தலைவர்கள் அடிக்கடி விஜயம் செய்யும் இக்கோசாலையில் உறுப்பினராகச் சேருவதன் மூலம் அரசியல் உறவுகள் - ஆதாயங்கள் பெறுவதற்கு வழியிருப்பதால் புரவலர்களுக்குப் பஞ்சமில்லை. இங்கே மாடு மனிதருக்குத் தரகுச் சேவை செய்கிறது!

இது போக மாம்பலம் கோசாலையின் தீவனச் செலவுகளை முழுமையாக கோவை கிருஷ்ணா ஸ்வீட்ஸ் ஏற்றுக் கொண்டுள்ளது. வெளிநாட்டு இந்தியர்களையும் உள்ளிட்ட பக்த கோடிகள் பலர் மாடுகளைத் தத்தெடுத்து வளர்ப்பதால் அமெரிக்க டாலர் காமதேனுவாய்ச் சுரக்கிறது. பால், பால்பொருட்கள், வரட்டி, எரு, விபூதி விற்பனையினால் வரும் பணம் கூடுதல் வரவாகும். காப்பகத்தின் உபரிப் பால் சங்கர மடத்தின் கோவில் அபிஷேகங்களுக்கும், வேதப்பாடசாலை அம்பிகளுக்கும் தினசரி கொட்டப்படுகிறது– உபரியாக வரும் மாடுகளும் ஏனைய சங்கரமட கோசாலைகளுக்கும், ஆதரவற்றோர் இல்லங்களுக்கும் தரப்படுகின்றன.

***மாடுகளைப் பராமரிக்க முடியாமல் விவசாயத்தைச் சீர்குலைத்திருக்கும் அரசு, மாடுகளை நகரில் வளர்க்கவும், வெட்டவும் தடை போடும் அரசு, கோசாலைகளை எப்படிக் கவனிக்கிறது? மத்திய அரசின் பிராணிகள் வதைத் தடுப்பு சங்கம் புதிதாகத் தொடங்கப்படும் கோசாலைக்கு ரூ.25,000 உதவி செய்கிறது. மேலும் ஒரு மாட்டுக்கு, நாளொன்றுக்கு ரூ.10 வீதம் மானியமும் அளிக்கிறது.***

கோசாலையின் நிர்வாகக் குழுவில் பார்ப்பன - மேல்சாதியினரில் அதிகமும் ஆர்.எஸ்.எஸ். குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நிறைந்திருக்கின்றனர். சங்கராச்சாரியார் வந்து போகும் கோசாலையின் மாடுகளைப் பராமரிக்க 4 பேர் இருக்கின்றனர். அதில் கும்பகோணத்தைச் சேர்ந்த ஒரு சைவ வேளாளத் தம்பதியர் அங்கேயே தங்கி உழைக்கின்றனர். இவர்களுக்கு தலா ரூ.1000 மாத ஊதியமாகக் கிடைக்கிறது. மாடுகளின் விளம்பரச் செலவை விட இம்மனிதர்களின் கூலி குறைவென்பது ஒரு பெரிய விசயமல்ல!

வெள்ளிதோறும் நடைபெறும் கோமாதா பூஜைக்கு மட்டும் மாம்பலத்து மாமா - மாமிகள் 50 பேர் தவறாமல் வருகிறார்கள். அன்றும் மற்ற நாட்களிலும் கூட சாணி அள்ளுவதற்கும், மாடுகளைக் குளிப்பாட்டுவதற்கும் மாமிகள் வருவதில்லை. அதெல்லாம் பூஜையில் சேர்த்தியில்லை. வருடந்தோறும் மாடுகளை வைத்து ஊர்வலம் நடத்தி "எங்காத்து மாடுகளைப் பாருங்கோ" என்று பெருமிதம் கொள்கிறார்கள். ஆண்டு விழாக்களில் சங்கராச்சாரிகளும், இல.கணேசன்களும் அருள் பாலிக்கிறார்கள். அதிலும் அந்தக் குண்டு சின்ன சங்கராச்சாரி இடுப்பு வளையாமல் மாட்டுக்கு பழம் தின்னத் தரும் அழகைப் படம் பிடிக்க அகிலா கிரேன் கூடப் போதாது!

அது சரி, கோமாதாக்கள் செத்தால் யார் புதைப்பார்கள்? வேறு யார், வெட்டிமைத் தொழில் செய்யும் தாழ்த்தப்பட்டவர்தான். மாம்பலம் கோசாலையின் செத்த மாடுகளைப் புதைக்கும் நண்பர் ராதாவை சைதாப்பேட்டையில் அவருடைய இல்லத்தில் சந்தித்தோம். இடுகாட்டில் வேலை செய்வதற்கான அடையாள அட்டை வைத்திருக்கும் ராதாவின் வார்த்தைகள் இந்தக் கோசாலைகளின் புனிதத்தை அழிக்கும் வல்லமை கொண்டவை.

"ஆரம்பத்தில் நான்கு மாடுகளை வளர்த்து, அந்த வருமானத்தில் எனது பெரிய குடும்பத்தைச் சமாளித்து வந்தேன். தற்போது சென்னையில் மாடுகள் வளர்க்கத் தடை வந்தபின் மூன்று மாடுகளை ஊருக்கு வெளியில் வசிக்கும் என் உறவினர்களிடம் கொடுத்து விற்கச் சொல்லிவிட்டேன். ஒரு மாட்டை என் குடும்ப உபயோகத்திற்காக வைத்துள்ளேன். பசுவதைத் தடைச்சட்டமும், நகரில் மாடு வளர்க்கத் தடையும் அநாவசியமானது. மாடுகளை வைத்து வாழ்க்கையைக் கழிப்பவர்களுக்கு வாழ்வா, சாவா என்ற போராட்டமாகி விட்டது. செத்த மாடுகளைப் புதைப்பதிலும் பெரிய வருவாயில்லை. ஒரு மாட்டைப் புதைப்பதற்கு மாம்பலம் கோசாலை தரும் ரூ.150-ல் ரூ.100 வண்டி வாடகைக்கே செலவாகிறது. அதிகம் கேட்டால் அவர்கள் தருவதில்லை."

● **இளநம்பி**

*செய்தியாளர்கள்:* ***சத்யா, பிரியா***

*நன்றி:* ***அவுட்லுக்***

www.padippakam.com



# கொழுப்பு

சா. செல்வராசு

''சீக்கிரம் எழு புள்ள, அப்படியே அந்த சூரி கத்திய தேடி எடுத்துக்குடு!''

பயந்துபோய் சடாரென எழுந்து உட்கார்ந்து கொண்டு, சற்று நேரம் குழம் பினாள் குள்ளச்சி. ஏதும் பேச முடியாமல் இருமல் முந்திக் கொண்டது.

''ராமசாமிக் கவுண்டரு மாடு சொக்கிருச்சாம், பாவம் சோளப் பயிர தின்னுட்டுக்கீது, வந்து எழுப்பி டீ வாங்கிக் குடுத்துட்டுச் சொல்லிட்டுப் போராரு. மாட்ட சீக்கிரம் எடுத்துர ணுமாம்.''

''அடப்பாவத்த, யான மாதிரி அந்த மாட்ட வச்சிருந்தாரு, நேத்து கூட வாச லுக்குச் சாணி எடுக்க போனப்போ பாத்தனே! பாவம் பெத்தபுள்ள மாதி ரில்ல வளத்தாரு கவுண்டரு'' சொல்லி முடித்து குள்ளச்சி மூச்சு வாங்குவ தற்குள், மாசிலான் குறுக்கிட்டான்.

''அதுக்கு என்ன செய்யச் சொல்றே? அது தலையெழுத்து நாம தின்னணுன்னு கீது, போ, போ, முதல்ல கத்தி எடுத்துக் குடு!''

மாடு உரிப்பதிலும், ஒர வஞ்சனை இல்லாமல் பங்கு போடுவதிலும் மாசி லானை விட்டா ஆள் கிடையாது.

● ● ●

விடிந்து ஏழு மணிக்கெல்லாம் புளி யந்தோப்பில் கும்பல் கூடிவிட்டது. வேடிக்கை பார்ப்பவர்களும், தனக்கும் பாத்தியம் உண்டு என உத்திரவாதபப் படுத்த வந்தவர்களுமாகத் தெருவே கூடி யிருந்தது.

மாட்டினுடைய வாயில் பச்சை நிறத்தில் நுரைதள்ள, வயிறு தண்ணீர் நிரம்பிய பாரி போல ஊதிப் போய், மறு பக்கம் கத்தியைத் தீட்டிக் கொண்டிருந்த மாசிலானை முழுதும் மறைத்திருந்தது. கால்களெல்லாம் விரைத்துப் போய் பெருத்த அம்மணமாகக் கிடந்தது. கண்கள் சாம்பல் பூத்து ஒரே திசையை நோக்கிக் குத்திட்டுக் கிடந்தன. வாய் மட்டும் மெல்லிய சிரிப்புடன் இருந்தது. வாயில் கிரசரில் சிக்கிய கரும்புச் சக்கை போல் சோளப் பயிர் வெளிப்பக்கம் தள்ளிக் கொண்டிருந்தது.

முன்னும் பின்னும், மூக்கிலும் வாயிலும் ஈக்கள் ஒரு பட்டாளமே மொய்த்துக் கொண்டிருந்தன. காதும், வாலும் செயலிழந்த இந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திக் கொண்ட காக்கைகள் மூக்கையும், காதையும் நோண்டித் தின்று கொண்டிருந்தன. இதைத் துரத்த மாசிலானுக்கும் நேர மில்லை, மற்றவர்களுக்கும் அக்கறை யில்லை. நுகத்தடிகள் போலக் கிடந்த விரைத்த பின்னங்கால்களில் சிறுவர்கள் ஏத்தம் விளையாட்டு விளையாடி னார்கள்.

''ஏய்... யார்ரா அவன்? போயி... (ங்) கொப்பன ஒரு நல்ல ஏத்தமா வாங்கிக் குடுக்கச் சொல்லி ஆடுறா. அதுக்கு மாட்டுக் காலுதான் கெடச் சிச்சா?''

அதற்குள் மற்றொருவன் வாலின் நுனியில் உள்ள முடிகளைப் புடுங்கிக் கொண்டிருந்தான்.

''டேய், டேய், டேய்! ஏன்டா பாவம் அப்படிப் புடுங்குற. ஓணான் புடிக்க னுன்னா உங்க அக்கா தலையில இதை விட நீளமா இருக்கும், போய் புடுங் குடா! ஆளப்பார்ரா... ஆள!

''ஏம்பா மாசிலான் என்னைக்கப்பா நீ அறுத்து பங்கு போட்டுக் குடுக்கறது. நேத்து செத்ததுப்பா, சீக்கிரம் பாரப்பா. இதுக்குன்னே பல பேரு சம்பாதனைய உட்டுட்டுக்கூட காத்துக் கெடக்கு றாங்க.''

''பெரிசு! கொஞ்சம் பொறுமையா இரு. விடிய நாலு மணியிலிருந்து ஆளப்புடிச்சி, மரத்தத் தேடி, கயித்தத் தேடி தூக்கினு வந்து போட்டினுகீது. நோகாம இன்னேரத்துக்கு வந்து பெரிய சேட்டு மாதிரி பங்கு கேக்கற, போயி ஒரு ஓரமா ஒக்காரு, பங்கு போட்டுட்டுக் கூப்புடறேன். ஒக்கார முடிலென்னா படுத்துத் தூங்கு, பங்கு போட்டுட்டு எழுப்புறே(ங்)''

பெரியவருக்கு வாய் திறந்ததே தப்பாப் போச்சுடா என்றாகி விட்டது.

இளம் வெயில் சுர்ரென்று சுட்டது. கத்தியைத் தீட்டி முடிப்பதற்குள் மாசிலா னுக்கு வியர்த்து விட்டது. சட்டையைக் கழட்டி பக்கத்திலிருந்த கொம்பில் மாட்டிவிட்டு, பீடியை வேகமாகப் பற்ற வைத்தான். வேட்டியைப் பின்பக்கமாக வாங்கி இறுக்கமாகச் செருகிக் கொண்டான்.

நாலு மைனர்களைக் கூப்பிட்டு, மாட்டை மல்லாக்காகப் பெறட்டி, நாலு கால்களையும் எதிரெதிர் திசையில் இழுத்துப் பிடிக்கச் செய்தான் மாசிலான்.

என்னவோ செய்யப் போகிறார்கள் என்று சிறுவர்கள் மிரட்சியுடன் விழி களை அகல விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். முன்னங்கால்களுக் கிடையில் இருந்த பந்து போன்ற பகு தியில் பதமாகத் தீட்டிய கத்தியை வைத்து அழுத்தி லாவகமாக ஒரு கீறல். பாதிப் பழுத்த மாதுளம்பழம் போலப் பிளந்து சிரித்தது அந்த இடம்.

''சும்மா சொல்லக் கூடாதுப்பா, கவுண்டரு இந்த மாட்டுக்கு நல்ல தீனி போட்டாருப்பா. அதனாலதான் இவ்வ ளவு பசையா இருக்கு'', பெருமிதத் தோடு புன்சிரிப்புடன் நிமிர்ந்து நின்றி ருந்த கூட்டத்தை ஒரு நோட்டம் விட்டான் மாசிலான். இந்த நல்ல கொழுப்புக் கறி கிடைக்கக் காரணமே நான்தான் என்பது அவன் பார்வையி லேயே தெரிந்தது.

''நல்ல சைன் தோலுப்பா. பாத்துக் கீறு. ஓட்ட உழுந்துரப் போகுது, நாலு தப்பட்டை கட்டலாம்'' பெரியவர் எச்ச ரிக்கைப்படுத்தினார்.

''என்னது... நாலு தப்பட்டையா? இந்தத் தடவ தோலு நமக்கு இல்லப்பா. கவுண்டரு தோல மட்டும் வித்து அவரு கிட்ட சேக்கச் சொல்லிட்டாரு.''

''ஏய்... என்னடா தமாஷ் பண்றியா? என்ன விளையாட்டா பண்ற'', ஊர் எஜமான் அதட்டினார்.

''நிஜமாதாம்பா சொல்றேங். தோல தர்றதா சத்தியம் பண்ண பிறகுதான் மாட்டையே தொட வுட்டாரு கவுண் டரு, தெரியுமா?''

''நீ எப்படிடா இதுக்கு ஒத்துக்கின. இது உனக்கு மொறைய மீர்றதா தெரி லியா? அப்படின்னா நாளைக்கு கவுண் டமாரு சாவுக்கு எந்த வாத்தியத்தை அடிப்ப. எல்லாரும் இப்படியே தோல வாங்கிக்கினா தொழில் எப்பிடிடா செய்யறது.''

''உனக்கும், எனக்கும் தெரியுது, இது அந்த கவுண்டருக்கு தெரியலியே!



படிப்பகம்

www.padippakam.com

என்ன பண்றது, ஏதோ தோலாவது வித்து குடுத்தா புண்ணாக்குச் செலவாவது மீறுமேன்னுதான்...'' இழுத்தான் மாசிலான்.

மாசிலானின் சப்பகட்டு எஜமானுக்கு நியாயமாகப்படவில்லை.

''என்னமோ பண்ணுங்கடா, எனக்கென்னவோ பழைய மொறைய மாத்துறது கொஞ்சமும் புடிக்கல,'' எஜமான் புலம்பினார்.

''என்னை என்ன பண்ணச் சொல்றீங்க. சொத்து கவுண்டருது. வாய் கூசாம தோல கேட்டுட்டாரு, வேற வழி எனக்குத் தெரில'' மீண்டும் மாசிலான் அதே பல்லவியை முனகினான்.

''டேய்! என்னடா பெரிய புடுங்கி மாதிரி பேசற. இன்னிக்கு தோல கேக்குறாரு, நாளைக்கு... நல்ல சைஸ் கறியா பாத்து யாருக்கும் தெரியாம எடுத்து வைய்யின்னுவாரு. அப்புறமா வீட்டுல கொஞ்சம் பிரச்... சனை. நீயே கறிய பெற...ட்...டி ஹி... ஹி... ஹி..ன்னுவாரு என்ன செய்யப் போறே? இதா பாரு. இப்படியே போனா நாம நாமளா இருக்க முடியாது.''

எங்கேயோ தப்பு நடந்து விட்டதாகப் பட்டது மாசிலானுக்கு. இருந்தாலும் வாக்குறுதியைக் காப்பற்றணும்னு கருதினான் மாசிலான்.

''அதெல்லா(ங்) சரிதா(ங்)... பேசாம நமக்குச் சொல்லாம கவுண்டரே மாட்ட பொதச்சிட்டிருந்தா என்ன பண்ணியிருப்பீங்க?''

இப்படி ஒரு குண்டைப் போட்டு விட்டு, கழுத்தில் கத்தியை வைத்தான் மாசிலான். அப்போது முதுகு வரை தோல் கழட்டப்பட்டிருந்தது.

''ஆமாண்டா! ரொம்ப புத்திசாலின்னு நெனப்போ, பதினாறு ஊரு கிராமத்த கூட்டி கவுண்டர கைகட்ட வச்சிருவே(ங்), நாக்க அடக்கிப் பேசு. இதுக்கு மேல பேசினா மரியாதை கெட்டுரும். சாதி கெட்டவன்தான்டா இப்பிடிப் பேசுவான்'' எஜமானுக்குச் சூடேறி விட்டது.

''ஏன்டா! பொழப்பத்தவங்களே... ஆகிற காரியத்த பேசு! ஏன்டா இப்படிக் கத்துறீங்க, கவுண்டரு பொதச்சிருவாரோ? அவரு ஒரு பக்கமும், அவரு பொண்டாட்டி புள்ளங்க ஒரு பக்கமும் புடிச்சி, மாட்ட தூக்கிக் கொண்டு போய் ஊருக்கும் வெளியே பொதச்சிருவாரா? இது நடக்குற காரியமா! போங்கடா'' இன்னொரு பெருசு அறைந்து கூறியது.

''ஏம்பா மாசிலா(ங்)... அந்த அரியா கொளத்தாரு பங்கு போட்டாச்சா?''

''ஆமான்டா! மொதல்ல உங்களுக்குத்தான்டா அவசரம். அந்தப் பக்கமா ஒக்காரு, கூப்பிடுறேன்'' வருபவர்களெல்லாம் மாசிலானை வேலை செய்ய விடாமல் தொல்லை கொடுத்தனர்.

அரியா குளத்தார் என்பவர்கள் குடியேறியவர்கள். உள்ளூரில் பெண்ணெடுத்துச் சம்பந்தி ஆனவர்கள். இவர்கள் மாடு தூக்க, மேளம் வாசிக்க வரமாட்டார்கள். பங்காளிமார்கள் சேர்க்கவும் மாட்டார்கள்.

''ஏம்பா! சீக்கிரம் கொஞ்சம் பங்கு போட்டுக் குடுப்பா. ஊரிலிருந்து எங்க மகளும், மருமவனும் வந்திருக்காங்க. பத்து மணி ரயிலுக்குப் போறணுமாம். ஏதோ அதுக்குள்ள இந்தக் கறியாவது வெச்சிப் போட்டு அனுப்பலாம்'' பரிதாபத்தோடு கேட்டான் முனுசாமி.

''ஏன்டா ஏதாவது உனக்கு அறிவு கீதா! இதையா மருமவனுக்கு போடப் போற. ஒரு கோழி கீழி அடிச்சி போடுவியா...''

''நீ இருக்கப்பட்டவம்பா! கோழியும் அடிப்ப, யானையைக் கூட அடிச்சிப் போடுவ. நாங் கூலிக்காரன், இப்படி ஏதாவது மாடு, கீடு செத்தாத்தான் கதி.''

''ஏம்பா இவன மொதல்ல அனுப்புப்பா. பாவம், பொலம்பித் தொலையுறான்,'' பரிதாபப்பட்டார் தர்மலிங்கம்.

கொஞ்ச நேரத்தில் மாடு, உரிச்ச கோழி மாதிரி ஆனது. பத்துமடத் தோலை விரித்து மல்லாந்து கிடந்தது.



www.padippakam.com

ஊதிப் பெருத்த, உப்பிக் கிடந்த வயிற்றில் தீட்டிய கத்திமுனை லேசாகப் பட்டதுதான் தாமதம், விஷக்காற்று கலந்து துர்நாற்றத்தோடு குப்பென்று காற்று பீறிட்டு வெளியேறி மாசிலான் மூக்கைத் துளைத்துச் சென்றது.

''நேத்து சாயந்திரம் செத்தது, நாத்தம் வராம என்ன செய்யும்?'' மாசிலான் நாற்றத்தைச் சமாளித்துக் கொண்டு, சமாதானம் செய்தான். நாற்றம் அந்தத் தோப்பையே சூழ்ந்தது. சுற்றியிருந்தவர்கள் மூக்கைப் பிடித்தும் பிடிக்காமலும் முகம் சுளித்தனர்.

சாணி கரைத்து வாசலில் தெளித்தது போல விரிந்து கிடந்த தோலின் மீது ரத்தமும், ஈழையும், மத்தமும் திட்டுத் திட்டாக உறைந்து கிடந்தன. அதன் மீது பிறந்த மேனியுடன் சிறுவர்கள் சறுக்கி விளையாடிக் கொண்டிருந்தனர். மாசிலான் விரட்டியதில் ஒரு சிறுவன் சறுக்கி தோலின் மீதே விழுந்து குய்யோ வென்று கத்தினான். அவனோட அம்மா ஓடிவந்து தன் மகனைத் தூக்கிக் கொண்டாள்.

''சும்மா இரு மாசிலா(ங்)! பிள்ளை ஏதோ ஆசையா சறுக்கி வெளையா டுறான்... மெரட்டுறியே! புள்ள பயந்து போச்சி! யாருடை செல்லம்... மாசி லானா? அவன அடிச்சரலாம் வா...'' அரவணைத்து கன்னத்தில் வழிந்த மாட்டு ரத்தத்தோடு முத்தமிட்டாள்.

இன்னும் சில சிறுவர்கள் தோலின் மேல் உறைந்து கிடந்த ரத்தத்தில் உள்ளங்கைகளை நனைத்து, ஒருவர் முதுகில் ஒருவர் அப்பி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அன்றையப் பொழுதில் செத்தமாடு தெருவையே திருவிழாக் கோலமாக்கி விட்டது.

''சாயந்திரம் நேரத்துல வந்து ருவேங்... பங்கு போட்டதும் கறிய வாங்கிவை. வரும் போது மொளகா செலவு வாங்கி வந்தர்றேன். கறிய வாங்கி மூடி வச்சிராதே! அடுப்புல கொஞ்சம் சூடு பண்ணி வைய்யி, இல்லன்னா கெட்டுடும்'', என்று மனை வியிடம் எச்சரித்து விட்டு வேலைக்குப் போனான் ஒரு தெருவாசி.

''ஏம்பா மாசிலான் பிச்சையில ஏதா வது கீதா பாருப்பா. உட்ராதே'' ஊர் எஜமான் நினைவுபடுத்தினார்.

மாசிலான் திடீரென நினைவுக்கு வந்தவனாக நுரையீரல், இதயம் இவை களை லாவகமாக விரல்களால் விலக்கி விட்டு, கணையத்தைத் தேடிப் பிடித்து திரும்பத் திரும்ப பித்தநீர்ப் பையை அழுத்திப் பார்த்தான், ஆனால் தென்ப டவில்லை என்பதை உதட்டைப் பிதுக்கிக் காட்டினான்.

நூறு மாடுகளில் ஒன்று இரண்டில் தான் கோரோஜனம் கிடைக்கும். நாட்டு மருத்துவர்களிடம் இதற்கு நல்ல மவுசு. 5 கிராம் கிடைத்து விட்டாலே 500 வரை விலை போகும். அன்றைக்கு மாசிலான் கொடுத்து வைத்தது அவ்வ ளவுதான்.

கொம்புகள் தூக்கி எறியப்பட்ட வுடன், பங்குகள் போடப்பட்டன. அவ ரவர் பங்கை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு நடையைக் கட்டினர்.

முகத்தில் கோபக் கனலோடு ஒருவர், ஒரு சிறுமியின் கைகளைப் பிடித்து தரதரவென இழுத்துக் கொண்டு மாடு அறுத்த இடத்திற்கு வந்தார். சிறு மியின் கையில் ஒடுங்கிப் போன அலு மினியச் சட்டி. அதில் ஒரு பங்கு கறி.

''ஏய்! எவண்டா இந்தப் பங்க எம்புள்ள கிட்ட போட்டனுப்பனவன். வெறும் எலும்பும் கொடலும் தான் எனக்கா? அவ்வளவு கேவலமா எம்புள்ள! போங்கடா... உங்க கறியும் நீங்களும்...'' என்று கறியைத் தூக்கி குப்பையில வீசி எறிந்தார்.

ரொம்ப நாளைக்கப்புறம் கிடச்ச கறி யிலேயும் அப்பன் மண்ணைப் போட்டுட்டானே என்று, குப்பையிலி ருந்த கறியையும், அப்பனையும் மாறி மாறிப் பார்த்து அழுதது அந்தப் பிள்ளை.

கடைசிப் பங்கை எடுத்த பையன், ''ஏம்பா எம்பங்குல கொஞ்சம் கொழுப்பு போடுப்பா'' என்று கேட்டான்.

''இருந்ததே அவ்வளவுதாம்பா! வேணுன்னா ஏம் பங்கைப் பாரு'' என்று எடுத்துக் காட்டினான் மாசிலான். கூட்டத்திலிருந்து ஒரு குரல் வந்தது. ''மாட்டுக்காரன் மாட்டுக்கு அழு வுறான்! பறையன் கொழுப்புக்கு அழு வுறான்!''

— இதைக் கேட்டதும் மாசிலான் கூனிக்குறுகிப் போனான். தலை குனிந்தான். தனக்குரிய பங்கை வேண்டா வெறுப்பாக எடுத்துக் கொண்டு போர்க் களத்தை விட்டு வெளியேறினான்.

● ● ●

பொழுது சாய்ந்து விட்டது. பறவை களும், ஆடு, மாடுகளும் தங்கள் இருப் பிடத்தைத் தேடிக் கொண்டிருந்தன. வேலைக்குப் போன குள்ளச்சி இன்னும் வீடு திரும்பவில்லை.

''பொழுது இருட்டிடுச்சி இன்னும் கழனியிலே என்னத்தப் புடுங்குறா...'' மனசுக்குள் குள்ளச்சியைத் திட்டிக் கொண்டான் மாசிலான். ஆறு மாதத் திற்கு முன் குள்ளச்சிக்கு வாரம் இரண்டு முறை மாட்டு ஈரல் தரச் சொல்லியி ருந்தார் டாக்டர். காசநோய் அப்பதான் குணமாகும். அவளுக்காக இரண்டு துண்டு ஈரலை மாசிலான் மறைத்து வைத்திருந்தான். தனது தொழில் தருமத் துக்கு இழுக்கு வந்ததை உணர்ந்து உள்ளுக்குள் நொந்து கொண்டேதான் அதைச் செய்தான்.

நினைவுகளில் மூழ்கியிருந்த மாசி லானைத் திடீரென எழுப்பியது ஒரு குரல். ''தாத்தா பாட்டி செத்திருச்சாம்! ஏதோ விஷக் கெழங்க பாட்டி பச்சையா தின்னுட்டு சொக்கி மயங்கி விழுந்தி ருச்சாம்'' முனியம்மாள் பதட்டத்துடன் சொன்னதும், பதறிப் போய் ஓடினான் மாசிலான்.

குள்ளச்சியைச் சுற்றி சிறு கும்பல். நாடியைப் பிடித்துப் பார்த்த நாட்டு வைத்தியர் மாசிலானைத் தனியாகக் கூப்பிட்டு ஏதோ கிசுகிசுத்து விட்டு திரும்பிப் பார்க்காமல் நடந்தார்.

வாய் பிளந்து, வயிறு ஒட்டி, கண்கள் சாம்பல் பூத்து திறந்து வெறு மையாகக் கிடந்தன. குள்ளச்சியைக் கட்டிலில் போட்டு நான்கு பேர் வீடு சேர்த்தனர்.

தெருவில் கறிவேப்பிலை மணத் துடன் உப்புக்கறி வாசம் மூக்கைத் துளைத்தது. வீசப்படும் எலும்புக்காக தெரு நாய்கள் எல்லைச் சண்டையில் ஈடுபட்டிருந்தன. தலையில் எண்ணைய றியாத பிள்ளைகளின் வாய், முக மெல்லாம் கொழுப்புப் பசை வடிந்தி ருந்தது.

குள்ளச்சிக்காக மறைத்து வைத்தி ருந்த ஈரலை மாசிலான் வெளியே எறிந்தான். எறிந்த மாத்திரத்தில் கவ்விய நாய்கள் சண்டையிட ஆரம்பித் தன.

மாசிலான் மனதைச் சோகம் கவ்விக் கொண்டது. குள்ளச்சியைக் கட்டிக் கொண்டதிலிருந்து எத்தனையோ காட்சிகள், சம்பவங்கள் அவன் மனத்தில் ஓடின. அப்படியே சரிந்து போய் மரத்தடியில் குந்தினான்.

ஒப்பந்தப்படி தோல் பணத்தை வாங்க கவுண்டர் அனுப்பிய ஆள் தொலைவில் வேகமாக வந்து கொண்டி ருந்தான்.

●

*(பு.க. மார்ச் 2000 இதழில் வெளியான சிறுகதை)*



படிப்பகம்

www.padippakam.com

# கிடா வெட்டும் போராட்டம்: மூடநம்பிக்கையை வளர்க்குமா?

ஜெயலலிதா அரசால் கடுமையாக அமல்படுத்தப்படும் தமிழ்நாடு பிராணிகள் மற்றும் பறவைகள் பலியிடுதல் தடைச் சட்டத்தின் உண்மையான நோக்கம், ''நாட்டார் தெய்வங்களின் கோயில்களில் ஆகம விதிகளின் அடிப்படையிலான பார்ப்பன வழிபாட்டு முறையைப் புகுத்துவதுதான்'' என்று பலரும் அம்பலப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்நோக்கம் மேலும் தெளிவுபடுத்தப்பட வேண்டும். சென்ற ஆண்டு ஜெயலலிதா கொண்டு வந்த 'கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம்', தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்களை இந்துமதத்திலிருந்து தப்பிக்க விடாமல் சிறை வைத்தது.

மனுதருமம் எனும் தண்டனைச் சட்டத் தொகுப்பையே தனது ஆன்மீகத்தின் இதயமாகக் கொண்டுள்ள பார்ப்பன இந்து மதம், ''மக்களின் ஆன்மீகத் தரத்தை உயர்த்துவதற்கு உபதேசங்களைக் காட்டிலும் உருட்டுக்கட்டைகளே உசிதமானவை'' என்று சிந்திப்பதில் வியப்பில்லை. 'கிடாவெட்டுத் தடைச் சட்டம்' என்பது இரண்டாவது உருட்டுக் கட்டை.

**கிடா வெட்டுத் தடைச் சட்டமல்ல, கட்டாய மதமாற்றச் சட்டம்!**

பலியிடுதலைத் தடுப்பதன் மூலம் பார்ப்பன அர்ச்சகர்களைப் புகுத்துவது என்பதை நோக்கமாகக் கொண்ட 'கிடா வெட்டுத் தடைச்சட்டத்'தின் உண்மையான பொருள் 'கட்டாய மதமாற்றச் சட்டம்'தான். அதாவது பார்ப்பன மதத்தின் நெறிகளுக்கும், விழுமியங்களுக்கும் வெளியே இருக்கும் பிற சாதியினர், பார்ப்பன மதத்தின் வழிபாட்டு முறைகளையும் விழுமியங்களையும், கடவுளரையும் ஏற்குமாறு கட்டாயப்படுத்தும் சட்டம்.

**ஜீவகாருண்யமா, மூட நம்பிக்கை ஒழிப்பா?**

இந்த ஜீவகாருண்யச் சட்டத்தை அமல்படுத்தியதற்காக ஆடுகளும் கோழிகளும் அம்மாவைப் பாராட்டுவதாகக் கூறியிருக்கிறார் அவைத் தலைவர் காளிமுத்து. இராம. கோபாலனும் வீரமணியும் கூடப் பாராட்டுகின்றனர். இது ''மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம்'' என்று விளக்கமளிக்கிறது திராவிடர் கழகம்.

ம.க.இ.க.வும், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியும் இணைந்து நடத்திய கிடா வெட்டும் போராட்டம் குறித்த செய்தியை வெளியிட்டு ''என்ன புரட்சியோ, என்ன முன்னணியோ'' என்று ஏளனம் செய்கிறது 'விடுதலை' நாளேடு.

''ஜெயலலிதா அரசு ஆணை பிறப்பித்ததும் தான், நாம் முற்போக்கு என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களிடமும் இத்தனை முட்டாள்தனம் இருக்க முடியும் என்பது அம்பலமாயிற்று'' என்கிறார் பத்திரிக்கையாளர் ஞாநி.

அரசனுக்கே தெரியாத அவனுடைய வீர பராக்கிரமங்களைப் புலவர்கள் கண்டுபிடித்துப் பாடுவது போல, சட்டத்திலேயே இல்லாத 'மூட நம்பிக்கை ஒழிப்பு' இலட்சியத்தை இவர்கள் ஜெயலலிதாவிற்குக் கற்பிக்கிறார்கள். இதை ஒப்பிடும்போது காளிமுத்துவின் புகழுரை மிகவும் நேர்மையானது என்று சொல்ல வேண்டும்.

**ஆகமவிதியை ஆதரிக்கலாமா?**

''சட்டத்தின் நோக்கத்தைப் பற்றி நமக்கென்ன கவலை? அதன் விளைவைப் பாருங்கள். காட்டுமிராண்டித்தனமான ஒரு மூடநம்பிக்கையிலிருந்து கோடிக்கணக்கான மக்களை அது விடுவிக்கிறதா இல்லையா?'' என்பது இவர்களுடைய அடுத்த வாதம்.

> ''மூடநம்பிக்கையில் ஆரியம் திராவிடம் என்று தரம் பிரிக்கக் கூடாது'' என்கிறது தி.க. ''இந்துமதம் சார்ந்த மூட நம்பிக்கைகளில் இத்தகைய வேறுபாடு உண்டு'' என்கிறோம் நாம்.
>
> பார்ப்பன மத மூட நம்பிக்கையின் சாராம்சம் - ஆதிக்கம். மக்களிடம் நிலவும் மூடநம்பிக்கையின் சாராம்சம் - கையறு நிலை.

இதன்படி, ''ஆகமவிதிகளின் நோக்கம் எதுவாக இருந்தால் என்ன? கல்லுக்குப் பாலும் தேனும் ஊற்றி வழிபாடு செய்யும் முட்டாள்தனமான அர்ச்சகன் வேலையிலிருந்து பார்ப்பனரல்லாத மக்களை அது விடுவித்திருக்கிறது'' என்று பெரியார் மகிழ்ந்திருக்க வேண்டும்.

''தலித் மக்களைக் கோயிலுக்குள் விட மறுக்கும் சாதி இந்துக்களின் நோக்கம் எதுவாக இருந்தால் என்ன, அந்த அளவிற்கு மூடநம்பிக்கையிலிருந்து தலித் மக்களுக்கு விடுதலை'' என்று நாம் மகிழ்ந்திருக்க வேண்டும். மாறாக, மேற்படி முட்டாள்தனத்தில் சம உரிமை கேட்டு ''அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கு'' என்று கோரிக்கை வைத்தார் பெரியார்.

கருவறை நுழைவுப் போராட்டத்தின் போது ''நீதான் நாத்திகனாயிற்றே, யார் அர்ச்சகராய் இருந்தால் உனக்கென்ன?'' என்று நம்மிடம் கேள்வி எழுப்பினார் திருவாளர் இராம.கோபாலன். ''அய்யிரே, இது ஆத்திக நாத்திகப் பிரச்சினை அல்ல, அய்யிரு - நொய்யிரு பிரச்சினை; பார்ப்பன ஆதிக்கத்திற்கும், தீண்டாமைக்கும் அரசியல் சட்டமே அங்கீகாரம் அளிப்பது குறித்த பிரச்சினை'' என்று நாம் விளக்கமளித்தோம்.

பத்தாண்டுகளுக்குப் பிறகு இன்று ஞாநிக்கும், 'உண்மை' இதழுக்கும் மட்டும் மேற்படி உண்மை விளங்கவில்லையாம்! ''மூடநம்பிக்கைக்கு ஆதரவாக முற்போக்காளர்கள் குரல் கொடுக்கலாமா?'' என்று கேள்வி எழுப்புகிறார்கள்.

**ஆட்டுக்கிடா - மூடநம்பிக்கை; பொங்கல் - பகுத்தறிவா?**

கிடாவெட்டிப் பொங்கல் வைத்து தம் குலதெய்வத்துக்குப் படையலிடுவது என்ற பெரும்பான்மை மக்களின் இறைவழிபாட்டு முறையில், கிடா வெட்டுக்கு மட்டும்தான் தடை விதிக்கிறது இந்தச் சட்டம். கிடாவெட்டு அசுத்தம், பொங்கல் சுத்தம்; முன்னது அநாகரிகம், பின்னது நாகரிகம்; முன்னது கொலை, பின்னது ஜீவகாருண்யம் என்ற அப்பட்டமான பார்ப்பன விழுமியங்கள்தான் இந்தச் சட்டத்திற்கு அடிப்படை. ''அவ

www.padippakam.com

பாப்பாத்தி, அதான் இப்பிடி சட்டம் போடுறா; எங்க சாமிக்கு கவிச்சி இல்லாம ஆகாது'' என்று கூறும் பாமரப் பெண்களின் ஞானம் கூட ஞாநிக்குக் கைவரவில்லை.

கிடாவுக்கும் பொங்கலுக்குமிடையில் தான் முரண்பாடு; மூடநம்பிக்கைக்கும் பகுத்தறிவுக்கும் இடையில் அல்ல. ஆனால் கிடாவெட்டு என்பது மூடநம்பிக்கை (அல்லது) அநாகரிகக் காட்டுமிராண்டித்தனமாகவும் பொங்கல் வைப்பது நாகரிகமான வழிபாட்டு முறையாகவும் இவர்களுக்குத் தெரிகிறது.

''அசைவ உணவைச் சாப்பிடுவதற்கான உரிமை என்பது வேறு. அதைக் கடவுள் பெயரால் சடங்கு செய்துதான் சாப்பிடுவேன் என்று கோருவது வேறு'' என்று பகுத்தறிவின் சிகரத்தில் நின்று கொள்கை முழக்கம் செய்கிறார் ஞாநி.

இந்த வாதத்தை இன்னொரு விதமாகவும் வைக்கலாம். ''அக்கார அடிசில் சாப்பிடும் உரிமை என்பது வேறு; அதையே சூத்திராள் கண்ணில் படாமல் துணிபோட்டு மூடி, மணியடித்து அரங்கநாதனுக்கு நைவேத்தியம் செய்துதான் சாப்பிடுவேன் என்று கோருவது வேறு'' என்றும் இதைச் சொல்லலாம்; சொல்லியிருக்க வேண்டும். ஆனால் ஞாநிக்கு இயல்பாகவே இப்படிச் சிந்திக்க வரவில்லை. ஞாநிக்கு மட்டுமல்ல; வாழ்நாள் முழுதும் கறி தின்றுவிட்டு, வயசான காலத்தில் கொலஸ்ட்ரால் பிரச்சினையால் 'வள்ளலார் வழி'யைத் தேர்ந்தெடுத்த திராவிட இயக்கத் தலைவர்களுக்கும் கூட அசைவம் மட்டுமே காட்டுமிராண்டித்தனமாகத் தெரிகிறது.

கடவுள் பெயரால் **சடங்கு செய்து சாப்பிடும் மூடநம்பிக்கையை** ஒழிப்பது தான் நோக்கம் என்றால், கொண்டு வந்திருக்க வேண்டியது கிடாவெட்டுத் தடைச்சட்டமல்ல, ''நைவேத்தியத் தடைச்சட்டம்.'' அப்படியொரு சட்டம் கொண்டு வந்தால் ஆண்டுக்கு ஒரிரு முறை மட்டுமே கறியைக் கண்ணால் பார்க்கும் சுடலைமாடனுக்குப் பிரச்சினை இல்லை. அனந்த சயனத்தில் இருந்தபடியே தினம் ஆறுவேளை அலுக்காமல் தின்னும் அரங்கநாதப் பெருமானைத்தான் அப்படியே ஒயாமெரிச் சுடுகாட்டுக்குத் தூக்க வேண்டியிருக்கும்.



**திருச்சி கிடா வெட்டும் போராட்டம்: பார்ப்பனமயமாக்கத்தின் மீது ஒரு வெட்டு.**

## மூடநம்பிக்கையெல்லாம் ஒரே ரகமல்ல!

''மூடநம்பிக்கையில் ஆரியம் திராவிடம் என்று தரம் பிரிக்கக் கூடாது'' என்கிறது தி.க. ''மூடநம்பிக்கைக்கு பார்ப்பன, சூத்திர, தலித் வேறுபாடுகள் இல்லை'' என்கிறார் ஞாநி. ''இந்துமதம் சார்ந்த மூட நம்பிக்கைகளில் இத்தகைய வேறுபாடு உண்டு'' என்கிறோம் நாம். நிறுவனமயமாக்கப்பட்ட மதநம்பிக்கைக்கும், ஏழை எளிய மக்களின் இறைநம்பிக்கைக்கும் பாரிய வேறுபாடு உள்ளது. அதிலும் வருண அடிப்படையிலான ஆதிக்கத்தையே தனது மத நம்பிக்கையாகக் கொண்டிருக்கும் பார்ப்பன மதமோ ஒரு அடக்குமுறை நிறுவனம்.

''பார்ப்பானைத் தவிர வேறு யாரும் அர்ச்சகராகக்கூடாது, தமிழ் வழிபாடு கூடாது, தலித் மக்களைக் கோயிலுக்குள் விடக் கூடாது'' என்றெல்லாம் கூறும் ஆகமவிதிகள் கூட ஒரு வகையில் பார்ப்பன உயர்சாதி இந்துக்களின் மூட நம்பிக்கைகள்தான்.

இத்தகைய ஆகமங்களோ, அர்ச்சகனோ, தேவபாஷையோ தேவையில்லாமல், சாமியாடி மூலம் நேரடியாகத் தனது தெய்வத்துடன் பேசி, தானே சமைத்த உணவைப் படையலிடும் ஒடுக்கப்பட்ட சாதி மக்களிடம் நிலவுவதும் மூடநம்பிக்கைதான்.

பார்ப்பன மத மூட நம்பிக்கையின் சாராம்சம் - ஆதிக்கம். மக்களிடம் நிலவும் மூடநம்பிக்கையின் சாராம்சம் - கையறு நிலை.

## குலதெய்வம் வேறு - குலங்களை உருவாக்கிய தேவர்கள் வேறு!

பார்ப்பன இந்து மதத்தின் கடவுளர்களான பிரம்மா, விஷ்ணு, சிவனைப் போல, உலகைப் படைத்தல் - காத்தல் - அழித்தல் போன்ற 'மாபெரும்' காரியங்களில் சுடலைமாடனோ, மதுரை வீரனோ ஈடுபட்டதில்லை. நாலு வேதம், ஆறு சாத்திரம், 18 புராணம், 36 வெங்காயம்... போன்ற எதுவும் நாட்டார் தெய்வங்களுக்கு இல்லை. வடக்கே காசி, தெற்கே ராமேசுவரம், கிழக்கே காளி, மேற்கே நரேந்திரமோடி என்று தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கும் பொறுப்பு எதையும் மாரியோ, கருப்போ ஏற்றதில்லை.

நாட்டார் தெய்வங்கள் அனைத்தையும் குறிப்பிட்ட வட்டாரத்தினர் அல்லது சாதியினர் மட்டுமே வழிபடுகின்றனர். இத்தெய்வங்கள் சாதி ஆதிக்கத்தை எதிர்த்ததனால் கொலை செய்யப்பட்டவர்கள் அல்லது போரில் மரித்தவர்கள், இன்னும் பல காரணங்களால் உருவாக்கப்பட்டவர்கள். பல இடங்களில் இயற்கை குறித்த விதவிதமான மூடநம்பிக்கைகளால் உருவான தெய்வங்கள். சுருங்கக் கூறின் இத்தெய்வங்கள் அனைத்தும் ஒடுக்கப்பட்ட சாதியினரைப் போலவே ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, தீட்டாக்கப்பட்ட தெய்வங்கள். பார்ப்பன மொழியில் துஷ்ட தேவதைகள்.

நாட்டார் தெய்வங்களின்பால் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையானது, நிறுவனமயமாக்கப்பட்ட மதத்தின் மீது மேல்சாதி மற்றும் மேட்டுக்குடி வர்க்கம் கொண்டுள்ள நம்பிக்கையுடன் ஒப்பிடத்தக்கதல்ல. இது மதத்திற்கு முந்திய பழங்குடி மரபின்பாற்பட்ட ஒரு தெய்வ நம்பிக்கை. அவ்வளவே. சிக்கலான தத்துவ விளக்


படிப்பகம்

www.padippakam.com

கங்கள், ஒழுக்க நெறிமுறைகள், விதிகள் போன்ற கட்டுமானங்கள் எதுவும் இதற்குக் கிடையாது. ஆண்டுக் கொருமுறை குலதெய்வத் திரு விழாவில் கூடி உண்பது, முரண்பாடு களைத் தீர்த்துக் கொண்டு உறவுகளைப் புதுப்பித்துக் கொள்வது என்ற சமூக நட வடிக்கைதான் இதில் முதன்மையானது.

தனது அன்றாட வாழ்வில் கட்டாய மாக மதத்துடன் பிணைக்கப்பட்டுள்ள கிறித்தவம், இசுலாம், இந்து போன்ற நிறுவன மதங்களைச் சார்ந்த பக்தர் களைக் காட்டிலும், ஆண்டுக்கு ஒரு முறை கிடா வெட்டிவிட்டு அப்புறம் அடுத்தவேலையைக் கவனிக்கும் இவர்கள் பகுத்தறிவுக்கு மாறிக் கொள்வதுதான் ஒப்பீட்டளவில் எளிதா னது.

மேலும் இந்த நாட்டார் தெய்வ மரபின் மீது படிந்திருக்கும் மூடநம் பிக்கை அழுக்கை அகற்றிவிட்டு அவற்றில் பொதிந்துள்ள பார்ப்பன எதிர்ப்பு, சாதி எதிர்ப்புக் கூறுகளை முன்னிறுத்தி நாம் பயன்படுத்தவும் முடியும். மதுரை வீரன் கதையையும் முத்துப்பட்டன் கதையையும் தமிழ் மக்கள் இசைவிழாவில் அவ்வாறு பயன்படுத்தியும் இருக்கிறோம். பார்ப்பனியம் முன்வைக்கும் தேவ மர பிற்கு எதிராக அசுர மரபை நாம் கைக்கொள்வதைப் போன்றதுதான் இது.

**கம்யூனிஸ்டு கிடா வெட்டலாமா?**


எவ்வாறாயினும் ''பகுத்தறிவு பேசும் கம்யூனிஸ்டுகள் கிடாவெட்டு போன்ற மூடநம்பிக்கைகளை ஆத ரித்துப் போராடுவது முரண்பாடில் லையா?'' என்று வினவலாம். முரண்பா டுதான். இது நாம் தோற்றுவித்த முரண் பாடு அல்ல. புறநிலையில் நிலவும் முரண்பாடு; பார்ப்பனியம் தோற்றுவித் துள்ள சாதி, இன, மொழி ஒடுக்குமு றையின் விளைவாக எழும் முரண்பாடு.

'கடவுள் இல்லை' என்கிறோம்; ஆனால் தமிழ் வழிபாடு கோருகிறோம், கருவறை நுழைவு நடத்துகிறோம், பக்திப் பாடலானாலும் தமிழில் பாடு என்கிறோம் - கூடவே நாத்திகப் பிரச்சா ரமும் செய்கிறோம். ''வர்க்கப் போராட் டமும் புரட்சியும்தான் வாழ்க்கைக்கு விடிவைத் தருமேயொழிய இறை நம்பிக்கையல்ல'' என்று புரிய வைக்கிறோம். இந்த முரண்பாடுகளுக் கிடையிலான உறவையும், முழுமை யையும் மக்கள் புரிந்து கொள்கிறார்கள்.

''கம்யூனிஸ்டுகளாகிய ம.க.இ.க. வினர் எப்படி கிடா வெட்டும் போராட்டம் நடத்தலாம்?'' என்று போராட்டம் நடந்த திருச்சி மாநகரில் எந்த பக்தனோ பூசாரியோ கூடக் கேட்க வில்லை. ''நம்மாளு போட்டான் பாரு'' என்பதுதான் மக்களுடைய மகிழ்ச்சிகர மான எதிர்வினை. சாதி, இனம், மொழி, வர்க்கம் என்ற ஒவ்வொரு தளத்திலும் மக்களின் சார்பாக நின்று போராடும் போதும் 'நம்மாளு' என்ற இந்த அங்கீ காரம் தொடர்ந்து வந்து கொண்டேயி ருக்கும். இதுதான் மக்களைப் பகுத்த றிவை நோக்கியும் இட்டுச் செல்லும்.

**பார்ப்பனமயம்தான் சீர்திருத்தமா?**

ஆனால் இந்தக் கிடா வெட்டும் கலாச்சாரம் வருண தர்ம அடிப்ப டையில் சுமத்தப்பட்டதென்றும் அதைத் தகர்ப்பதுதான் நம் வேலை என்றும்



நன்றி: குமுதம் ரிப்போர்ட்டர்

**சிறுமழஞ்சி கிடா வெட்டுத் தடை: திணிக்கப்பட்ட பார்ப்பனியம்.**

வாதிடுகிறது *'உண்மை'* இதழ். சுடலை மாடனைத் தகர்த்த இடத்தில் வரப்போ வது யார் - பெரியாரா, பிள்ளையாரா? கிடாவெட்டு ஒழிந்தபின் வரஇருப்பது பகுத்தறிவா, பிள்ளையார் ஊர்வலமா?

''பார்ப்பான் படிப்பதைப் பார்; அவன் முன்னேறுவதைப் பார் என்றுநாம் சொன்னால் பார்ப்பனர் களை ஆதரிப்பதாகப் பொருள்படுமா? நம்மக்களை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணம் வெளிப்படுமா?'' என்று கேட்கிறது *'உண்மை'*. 'நாகரிக மான' பார்ப்பன வழிபாட்டு முறை களைப் புகுத்துவதையே 'சீர்திருத்தம்' என்கிறார்கள் இந்தப் பகுத்தறிவா ளர்கள்.

கல்வியும் பதவியும் பெற்ற பார்ப்ப னரல்லாத நடுத்தரவர்க்கத்தினர், சிந்த னையால் பார்ப்பனர்களாக மாறியிருப் பதற்கான காரணம் என்னவென்று கேட்பவர்களுக்கு இதுதான் விடை. ''பார்ப்பானைப் பார், அவனைப் போல சாமி கும்பிடு'' என்று வெளிப்படை யாகச் சொல்லியிருக்கலாம்.

**ஒழிக்கப்பட வேண்டிய மரபு எது?**

''நாட்டார் மரபைப் பார்ப்பனமய மாக்கும் சதி'' என்று கூறி கிடாவெட்டுத் தடைச்சட்டத்தை நாம் எதிர்த்தால் அதற்குப் பதிலளிக்காமல் ''சாதிய கட்டைப் பஞ்சாயத்து முதல் உடன் கட்டை வரையிலான எல்லாமே மரபின் பெயரால் தான் நியாயப்படுத்தப்படு கின்றன'' என்று திசை திருப்புகிறார் ஞாநி. ''அப்படியானால் அலகு குத்துவ தையும் தீமிதிப்பதையும் ஆதரிக்கிறீர் களா?'' என்று மடக்குகிறது *'உண்மை'*.

மரபுகளில் கொள்வனவற்றை மட்டும்தான் கொள்ள முடியும். தள்ள வேண்டியவற்றில் ஆக முதன்மையா னது பார்ப்பன மரபு. தீண்டாமையை நியாயப்படுத்தும் அந்த மரபு இந்துமத உரிமையாகச் சட்ட அங்கீகாரம் பெற்றி ருக்கிறது.

தன்னைத் துன்புறுத்திக் கொள்ளும் மூட நம்பிக்கையை ஒழிப்பதற்கு முன், அடுத்தவனைத் துன்புறுத்தும் 'மூட நம்பிக்கை'யை ஒழிக்கக் கோர வேண்டும். யோக்கியர்கள் செய்ய வேண்டியது அதைத்தான்.

**பெரியார் திடலா, பெரியவாள் திடலா?**

*'உண்மை'* இதழின் கட்டுரையோ வேறொரு கோணத்திலிருந்து புத்தி


படிப்பகம்

www.padippakam.com

சொல்கிறது: ''கீழ் சாதிக்காரன் கோயில் - அங்கு கிடா வெட்டு நடக்கும்; அங்கு அய்யர் அர்ச்சகராக வரமாட்டார் என்ப தற்கு வசதி செய்து கொடுத்து விடுவதா காதா?'' என்று கேட்கிறது.

அதாவது, என்றேனும் ஒருநாள் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தை இவர்கள் கொண்டு வருவார் களாம். அப்படியொரு சட்டம் வந்த சூழ்நிலையிலும் நாம் கிடா வெட்டிக் கொண்டிருந்தால் அதைக் காரணம் காட்டியே சுடலைமாடன், முனீசுவரன் கோயிலுக்கு வராமல் அய்யர் 'எஸ்கேப்' ஆகிவிடுவாராம். அதனால் அய்யர் வருவதற்குத் தோதாக நாம் இப்பொழுதே நம்மைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டுமாம். அய்யருக்குத் தகுந்த மாதிரி சாமி மாறிக் கொள்ள வேண்டுமாம்! பெரியவாள் திடல் சொல்கிறது.

அய்யா! இதுதான் சட்டத்தின் நோக்கமும். இது எருமைக்கிடா வெட்டை எதேச்சையாகப் பார்த்து அம்மா போட்ட சட்டமல்ல; சங்கராச்சா ரியால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்ட திட்டம். ஆனால் அம்மா இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு முன்னாலேயே சங்கரமடம் தன் திட்டத்தை அமல்படுத்திக் கொண்டிருக் கிறது.

முனி - முனீஸ்வரனாகவும், சுடலை - சுடலைமாடஸ்வாமியாகவும் துரித கதியில் மாறிக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய கோயில் கும்பாபிஷேகங்க ளுக்குக் கணிசமான தொகையை சங்கர மடம் நன்கொடையாகத் தருகிறது. அறங்காவலர் குழுவில் அவாள் சேர்க்கப்படுகிறாள். கோயிலைப் புதுப் பிக்கும் சாக்கில் விநாயகர் அல்லது அனுமான் சிலை அங்கே புதிதாக நுழை கிறது. கும்பாபிஷேகத்தன்று கோயிலில் விசுவ இந்து பரிசத்தின் காவிக் கொடி பறக்கிறது. திருச்சியில் தலித் மக்கள் வாழும் பகுதியில் காவிக்கொடிகளை அறுத்தெறிந்து, கோயிலிலிருந்து விசுவ இந்து பரிசத் கும்பலையும் விரட்டியி ருக்கிறார்கள் எமது தோழர்கள்.

இவையல்லாமல் இந்து அறநிலை யத்துறையின் நிர்வாகத்தின் கீழுள்ள நாட்டார் தெய்வக் கோயில்களில் ஓசைப்படாமல் பார்ப்பன அர்ச்சகர்கள் நுழைக்கப்படுகிறார்கள். திராவிடர் கழகம் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்குவதற்குள் அனைத்துக் கோயில்களும் அவாள் கைக்கே போய்ச் சேர்ந்து விடும்.

**பார்ப்பனமயமாக்கம் மட்டுமல்ல, பாசிசமயமாக்கம்!**

தற்போது நடந்து கொண்டிருப்பது நாட்டார் மரபைப் பார்ப்பனமய மாக்கும் பண்பாட்டு நடவடிக்கை மட்டு மல்ல; பார்ப்பனத்தன்மை கொண்ட பொதுவானதொரு இந்து அடையா ளத்தை உருவாக்குவதென்பது இந்துத் துவச் சக்திகளின் அரசியல் நடவ டிக்கை. குஜராத்தின் பழங்குடி மக்கள் மத்தியில் பத்தாண்டுகளுக்கு முன் அனுமான் நுழைந்தான். விளைவு, முசு லீம்களைச் சூறையாட பழங்குடி மக்கள் இன்று களத்திலிறக்கப்பட்டனர்.

நாட்டார் கோயில்கள் என்பவை ஒரு சில சாதிகளையோ அல்லது வட்டா ரத்தையோ இணைக்கின்ற வலுவான கிராமப்புற நிறுவனங்கள். இந்த நிறுவ னங்களைக் கைப்பற்றுவதன் மூலம்தான் தமிழகத்தின் ஒடுக்கப்பட்ட சாதி மக்களைத் தன்பின்னால் திரட்ட முடியும் என்பதே ஆர்.எஸ்.எஸ்.இன் திட்டம்.

கீழிருந்து செய்யப்படும் இந்த பார்ப்பனமயமாக்கும் நடவடிக்கைக்கு மேலிருந்து ஜெயலலிதா செய்யும் உத விதான் இந்தத் தடைச்சட்டம்.

இவையெதுவுமே தெரியாதது போலப் பாசாங்கு செய்து கொண்டு நமக்குப் பகுத்தறிவு உபதேசம் செய்கி றார்கள் இந்த அறிவாளிகள். கிடா வெட்டு என்பது மூட நம்பிக்கைதான். நாம் அறிவோம். எனினும் நாம் முட்டாள் சனங்களின் பக்கம் நிற்கிறோம். இவர்களோ அயோக்கியர் களான பார்ப்பனக் கும்பலின் சார்பில் வாதாடுகிறார்கள்.

மதமாற்றத் தடைச்சட்டத்தை ஆத ரித்த சாதி இந்துக்கள் கூட, இன்று இந்தக் கிடாவெட்டுத் தடையை எதிர்க்கி றார்கள். பார்ப்பன விழுமியங்களைச் சாடுகிறார்கள். ஜெயலலிதாவுக்கு ஓட்டுப் போட்டவர்கள் வருந்துகி றார்கள். இது பாமரமக்களின் நிலை. பகுத்தறிவாளர்களின் நிலை என்ன?

சென்ற தேர்தலில் பாரதிய ஜனதா வுக்கு எதிரான 'மதச்சார்பற்ற ஜனநாயக சக்தி' என்று புரட்சித் தலைவியை நம்பினார் ஞாநி. வீரமணியோ இந்தக் கணம் வரை அவ்வாறே நம்புகிறார். நம்மையும் நம்பச் சொல்கிறார். நிச்சய மாக, கிடாவெட்டு இதைவிட மோச மான மூட நம்பிக்கையில்லை. எனினும் இவர்களுடைய மூடநம்பிக்கையைச் சட்டம் போட்டு ஒழிக்க முடியாதே!

● மருதையன்

## நூல் அறிமுகம்






பார்ப்பன இந்துமத மரபையும், நாட்டார் தெய்வ வழிபாட்டு மர பையும் தக்க சான்றுகளுடன் இனம் பிரித்துக் காட்டுவதுடன், விலங்கு உயிர்ப்பலித் தடைச்சட்டத்தின் பார்ப்பனமயமாக்கும் அரசியல் நோக்கத்தையும் இவ்விரு நூல்களும் அம்பலப்படுத்துகின்றன. வாசகர்கள் அனைவரும் தவறாமல் வாங்கிப் படிக்க வேண்டிய நூல்கள்.

**'விலங்கு உயிர்ப்பலித் தடைச்சட்டத்தின் அரசியல்'**

ஆசிரியர் :
**ஆ. சிவசுப்பிரமணியன்**

வெளியீடு :
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, நெல்லை, தூத்துக்குடி மாவட்டக் குழுக்கள்.

விலை: ரூ. 5/-

**'கருப்பு கேட்கிறான் கெடா எங்கே?'**

ஆசிரியர் :
**சு. வெங்கடேசன்**

வெளியீடு :
தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், மதுரை புறநகர் மாவட்டக் குழு, 27-எப், சர்வோதயா சாலை, மெகபூப்பாளையம், மதுரை - 10, தொலைபேசி: 0452 - 2602076.

விலை: ரூ. 7/-


## அறிவிப்பு

***இவ்விதழ் அதிக பக்கங்களுடன் வருவதால் விலை ரூ. 10/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இச்சிறப்பிதழ் அக். - நவ. இருமாத இதழாக வெளி வருகிறது. அடுத்த இதழ் டிசம்பரில் வெளிவரும்.***

***- (ஆ.ர்).***


படிப்பகம்

www.padippakam.com



# மாட்டுக்கறி ஒரு மக்கள் உணவு

***மாட்டுக்கறி கிடையாதுன்னு சட்டம் போட்டா என்ன பண்ணுவீங்க?***

*''கோயம்பேடு மார்க்கெட்டே இயங்காது. ஏன்னா நாங்க கறி சாப்பிட்ட தெம்புல இறக்குற மூட்டையத்தான் இங்க விக்கிறாங்க.''*

**- இராஜேந்திரன்,**
மூட்டை தூக்கும் தொழிலாளி,
சென்னை கோயம்பேடு காய்கனிச் சந்தை.

''முசுலீம்கள் மட்டுமே மாட்டுக் கறியை விரும்பி உண்ணுகிறார்கள்'' என்பது ஆர்.எஸ்.எஸ். கும்பலின் முக்கியமான பிரச்சாரம். இதன்படி 'இந்துக்கள்' தெய்வமென வழிபடும் கோமாதாத் தாயைக் காட்டுமிராண்டிகள் போல வெட்டிச் சாப்பிடுகிறார்கள் என்ற வெறுப்புணர்வை வளர்ப்பதே அதன் நோக்கமாகும். ஆனால், உண்மை என்பது இந்துமதவெறியர்கள் விரும்புகிறபடியெல்லாம் அமைந்து விடுவதில்லை.

உலகில் எங்கேயும் மாட்டிறைச்சி உண்ணும் பழக்கத்தை மதம் உருவாக்கவில்லை. சாதிய - வர்க்க ஏற்றத்தாழ்வுகளும், உற்பத்தி முறையும், வரலாற்றுரீதியான உணவுப் பழக்கமும், தட்பவெப்ப நிலை வேறுபாடுகளுமே இதற்குக் காரணமாக இருக்கின்றது. மாறாக, பார்ப்பன மதம் மட்டுமே மாட்டை 'கோமாதா' ஆக்கியிருக்கிறது. மாட்டிறைச்சி சாப்பிடுபவர்களெல்லாம் முசுலீம்கள் என்றால் 'இந்துக்கள்' எண்ணிக்கை சிறுபான்மையாகி விடும்.

தாழ்த்தப்பட்ட மக்களையும் உள்ளிட்டு இந்திய ஏழை மக்களுக்குக் கிடைக்கும் மலிவான புரதச் சத்து, விலங்கிறைச்சி, மாட்டுக்கறி மட்டுமே. மதங்களுக்கு இங்கே இடமில்லை. உதாரணமாக, முசுலீம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட காசுமீரில் எவரும் மாட்டிறைச்சியை உண்ணுவது கிடையாது. பசுவதைத் தடைச்சட்டம் அமலில் உள்ள இந்தி பேசும் மாநிலங்களிலும் முசுலீம்கள் ஆட்டிறைச்சி மட்டுமே உண்ணுகின்றனர். தலித்துக்களும், ஏழை முசுலீம்களும் எருமை மாட்டிறைச்சியை வாங்குகின்றனர். வடகிழக்கின் ஏழு மாநிலங்களிலும் உள்ள எல்லா பழங்குடி மக்களுக்கும் மாட்டிறைச்சிதான் அன்றாட உணவு. அதனால்தான் பசுவதை குறித்து பராளுமன்றத்தில் நடந்த விவாதத்தின்போது முன்னாள் சபாநாயகர் பி.ஏ. சங்மா, (மேகாலயாவைச் சேர்ந்தவர்) ''தேசிய அளவிலான தடை வடகிழக்கில் கடுமையான உணவுப் பிரச்சினையைத் தோற்றுவிக்கும்'' என்றார்.

குளிர் மிகுந்த மலைப்பகுதியும், வாழ்வதற்கேற்ற அடிப்படை வசதிகள் குறைவாகவுமிருக்கும் வடகிழக்கில் மாட்டிறைச்சி அடிப்படை உணவாக இருப்பதோடு திருமணம், கிறிஸ்துமஸ் போன்ற திருவிழாக்கால உணவாகவும் இருக்கிறது. ''ஒரு குறிப்பிட்ட இனத்தின் கலாச்சாரத்தைப் பரந்துபட்ட இந்திய மக்கள் மீதும் திணிப்பது தவறானது. எங்கள் கலாச்சாரத்துக்கும் உணவுப்பழக்கத்துக்கும் ஏற்ற ஒரு நாட்டை நாங்கள் ஏன் உருவாக்கிக் கொள்ளக் கூடாது என்ற எண்ணத்தை விதைக்கத்தூண்டும்'' என்கிறார், நாகலாந்தின் முன்னாள் மாணவர் தலைவரான ஆர்ட் டெக்ஸ். இவரது மனைவியும் கல்லூரி ஆசிரியையுமான அஞ்சலி, ''எனது 5 வயது மகள் பிபிக்கு தினமும் தேவைப்படும் மாட்டிறைச்சியை அரசு தடை செய்தால் என் குழந்தையின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும்'' என்கிறார். ''மேகாலயா மக்களை மாட்டிறைச்சி சாப்பிடக்கூடாது என்று சொல்வது வங்காளிகளை மீன் சாப்பிடக் கூடாது என்று தடை விதிப்பது மாதிரி'' என்கிறார், சமூக சேவகி ஹசீனா சர்பிக். முக்கியமாக இம்மாநிலங்களைச் சேர்ந்த பா.ஜ.க. தலைவர்களே பசுவதைத் தடைச் சட்டத்தை ஏற்கமுடியாது என்று எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள்.

கேரள அரசின் கால்நடை வளர்ப்புத்துறையின் மதிப்பீட்டின்படி ஆண்டுதோறும் 4.83 லட்சம் மாடுகள் வெட்டப்பட்டு, 24,278 டன் இறைச்சி உட்கொள்ளப்படுகிறது. பார்ப்பனர்களைத் தவிர முழுக் கேரளமும் மாட்டிறைச்சியை உண்ணுகிறது. அரசு அங்கீகரித்த 774 மாடு வெட்டும் கடைகளும் அதைப் போன்று மூன்று மடங்கு கடைகள்

சென்னை ஈக்காட்டுத்தாங்கல் கையேந்திபவனில் சுவையான மாட்டுக்கறி வறுவல்



www.padippakam.com

அனுமதி இன்றியும் இயங்கிவருகின்றன. வெட்டும் தொழிலை நம்பி மட்டும் 10,000 குடும்பங்கள் பிழைக்கின்றன.

பால் பொருட்களில் தற்போது உபரி உற்பத்தியைக் கொண்டிருக்கும் கேரளாவில், உதவாத 67,000 மாடுகள் ஆண்டு தோறும் இறைச்சிக் கூடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. மீதி மாடுகள் ஏனைய தென்னிந்திய மாநிலங்களிலிருந்து வருகின்றன. மேலும் அரசுக்குத் தெரியாமல் வெட்டப்படும் மாடுகள் 8 இலட்சம் ஆகும். இதையும் சேர்த்து 72,834 டன் இறைச்சி கேரளாவில் நுகரப்படுகிறது. இருந்தும் கேரளத்துக்குத் தேவையான இறைச்சியில் எப்போதும் பற்றாக்குறைதான் இருக்கிறது.

''மாட்டுத் தீவனத்தின் விலை அதிகம் என்பதால், கேரளத்தில் மாடுகளைப் பராமரிக்கும் செலவு அதிகம். தடைச் சட்டம் வரும் பட்சத்தில் தற்போது குருவாயூர் கோவிலில் இருக்கும் கோசாலையைப் போல மாநிலம் முழுவதும் திறப்பதற்கு நிதி நெருக்கடியுள்ள கேரள அரசால் சாத்தியமில்லை'' என்கிறார், அரசின் இறைச்சித் துறை இயக்குநர் டாக்டர் சசி. தன்னுடைய சகபாடியான மத்தியப் பிரதேசத்தின் திக்விஜய் சிங் போல கேரளத்தின் முதல்வர் அந்தோணி பசுவதை குறித்து வாயைத் திறக்க முடியாது என்பதோடு எதிர்க்க வேண்டியிருப்பதுதான் அங்கே யதார்த்தம். கேரளத்து ஆர்.எஸ்.எஸ். அம்பிகள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் மக்களை 'கோ மாதா' பூஜை செய்ய வலியுறுத்தினாலும் மக்களென்னவோ 'கறிக்கு பூசை எதற்கு' என ஓடுகிறார்கள். கிலோ 50 ரூபாயிலிருந்து 30 ரூபாய் வரை விற்கும் மாட்டுக் கறி கேரள மக்களின் தேசிய உணவு என்றால் மிகையில்லை.

இந்தியா முழுமையும் உள்ள ஒரு சில உட்பிரிவினர் தவிர தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் மாட்டுக்கறி உண்ணுபவர்கள்தான். ஆனால், வட இந்திய மாநிலங்களில் பார்ப்பன மதவெறிக் கும்பலின் அரசியல் மற்றும் கருத்தியல் ரீதியான ஆதிக்கம் நிலவுவதால் அங்கே மட்டும் விரும்பினாலும் அவசியமிருந்தாலும் உண்ணமுடியாத நிலை இருக்கிறது.

தென்னிந்தியாவில் அந்த நிலை இல்லை. கேரளாவைத் தவிர்த்து கர்நாடகம், ஆந்திரா, தமிழ்நாடு மூன்றிலும் பசுவைக் கொல்லக் கூடாது என்ற சட்டமிருப்பினும் அது பெரும்பாலும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. தென்னிந்தியாவில் தலித்துக்கள், பிற்படுத்தப்பட்ட மக்களையும் உள்ளிட்டு ஏழைகள் அனைவரும் மாட்டுக்கறியை

## கோமாதா ஒரு நம்பிக்கை; மாட்டுக்கறியோ எங்கள் வியாபார உரிமை

*சென்னை ஹோட்டல் உரிமையாளர் சங்கத்தில் ஐந்து நட்சத்திர விடுதிகளையும் உள்ளிட்டு ஆயிரம் உறுப்பினர்கள் இருக்கின்றனர். இதன் தலைவர் பாலகிருஷ்ணராவைச் (உடுப்பி பார்ப்பானர்) சந்தித்தோம்:*

**''பெரும்பாலும் மல்டி குசின் (பல்வகை உணவு) ரெஸ்ட்டாரண்டுகளிலும், ஸ்டார் ஓட்டல்களிலும் மாட்டுக்கறி அளிக்கப்படுகிறது. ஓட்டல் அதிபர்களில் எல்லா சாதி, மதம் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள். தொழில் என்று வரும்போது நாங்கள் எல்லாம் ஒரே உணவுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பசுவதைத் தடைச்சட்டத்தை எதிர்க்கிறோம். ஏனெனில் எங்கள் வாடிக்கையாளர்களின் திருப்தியை மட்டுமே முதன்மையாகக் கருதுகிறோம். வெளிநாட்டவர்களுக்கும், வெளிநாடு சென்று திரும்பியவர்களுக்கும் மாட்டுக்கறி முக்கியமானது. இந்துக்களைப் பொறுத்தவரை 'கோமாதா' என்பது ஒரு நம்பிக்கை, அவ்வளவுதான்'' என்றார், பாலகிருஷ்ணன்.**

-செய்தியாளர்கள்: **அரவிந்த், முகிலன்**



**கோயம்பேடு சந்தையில் 150 கிலோ மூட்டை தூக்கும் தொழிலாளர்களுக்கு பத்து ரூபாய் மாட்டுக்கறியே சத்தான உணவு.**

உண்ணுகின்றனர்.

சென்னையில் மாட்டிறைச்சி என்பது ஆட்டிறைச்சியை விட அதிக மக்களால் நுகரப்படுகின்றது. அரசே சோதித்து நடத்துகின்ற மாடு வெட்டும் தொட்டிகள் சில இருக்கின்றன. இங்கே பசுவையும், நோயுற்ற மாடுகளையும் தவிர்த்த ஏனைய மாடுகளைப் பரிசோதித்து விட்டு வெட்டலாம் என்று முத்திரை குத்துவதற்கு ஒரு அரசு மருத்துவரே இருக்கிறார். நாம் சென்ற புளியந்தோப்புத் தொட்டியில் மட்டும் தினசரி 100க்கும் மேற்பட்ட மாடுகள் வெட்டப்படுகின்றன. எவ்வித இயந்திர வசதியுமின்றி கைதேர்ந்த திறமையினாலும், வலிமையினாலும் தொழிலாளர்கள் மாடுகளை சில நிமிடங்களில் வெட்டி உரிக்கும் அழகு யாரையும் வியப்படைய வைக்கும். இங்கு வரும் மாடுகள் தமிழகத்தின் வட மாவட்டங்களிலிருந்தும் குறிப்பாக ஆந்திராவிலிருந்தும் கொண்டுவரப்படுகின்றன.

வரும் வண்டிகளில் பசுமாடு இருப்பதாகச் சொல்லி நீலச்சிலுவை சங்கம் (பிராணிவதைத் தடுப்பு சங்கம்) செய்யும் அடாவடித்தனங்களைச் சொல்லி தொழிலாளிகளும், வியாபாரிகளும் குமுறுகிறார்கள். தொழிலாளர்களில் தாழ்த்தப்பட்டவர்களே அதிகம். அரசுக்குத் தெரியாமல் ஆங்காங்கே பசுமாடுகளை வெட்டும் கடைகளும் ஏராளமிருக்கின்றன. இவர்கள் போலீசுக்கும் நகராட்சிக்கும் மாமூல் கொடுத்துவிட்டு வெட்டி விற்றுவருகின்றனர்.

தமிழகத்தின் நகர்ப்புறங்களில் கையேந்தி பவன்களிலும், துரித உணவ



படிப்பகம்

www.padippakam.com

# பசுவதைத் தடைச்சட்டம்: 'மாட்டைச் சாப்பிடுவது தாயைச் சாப்பிடுவது' என்பது குறித்து சென்னை மக்கள் பேசுகிறார்கள்:

● ''இவங்களா செய்யறாங்க, சங்கராச்சாரி ஃபேக்ஸ் அனுப்புறான், இந்தப் பொம்பள செராக்ஸ் எடுத்து எல்லாருக்கும் அனுப்புறா. உண்மையிலேயே உயிர்க் கொலையை குறைக்கணும்னா மாட்டை வெட்டணும்னுதான் சட்டம் போடணும். ஏன்னா 100 கோழி அறுக்கிறதுக்குப் பதிலா ஒரு மாட்டை வெட்டிட்டுப் போகலாமே! மிருகத்த அடித்துச் சாப்பிடுவது தப்பா, இல்ல இத்தனை பேர் வாழ்க்கை இதோடு சம்பந்தப்பட்டிருக்கிறதுன்னு தெரிஞ்சும் சட்டம் போட மிருகத்தை போலச் சிந்திப்பது தப்பா?

**- அப்துல்லா,**
பீஃப் பிரியாணிக் கடை வைத்திருப்பவர்.

● ''அடிப்படையில் நான் ஒரு விவசாயி, மாட்டப் பூட்டி ஓட்டும்போது கூட மாட்ட அடிக்க மாட்டேன். அடிப் பவனையும் வைவேன். ஆனா ஈனாத மாட்ட, கறக்காத மாட்ட, அடங்காத



மாட்ட என்ன செய்யச் சொல்ற? பால் மாட்டையா வெட்டுறோம், கறக்குற மாட்ட எவனாவது விப்பானா? மொத்தத்துல சட்டம் போட்டுத் திருடுற கூட்டம் திருடிக்கிட்டே இருக்குது.

மாட்ட அடிக்கலன்னா பாட்டா செருப்பு வருமா? மாட்டோட எந்த பாகமும் வேஸ்ட் இல்ல. வால்முடி - பிரஷ்; எலும்பு - மாத்திரை, உரம்; சாணம் - எரு; கொழுப்பு - சோப், கிரீஸ், மெழுவர்த்தி செய்யப்பயன்படுது. நெஞ்சுக்கறி உடம்புக்கு நல்லது, ரன்னிங் போறவங்க மாட்டு வால் சூப் குடிக்கணும்.''

**-காளிமுத்து**
ஏ-1 பீஃப் ஸ்டால், கறி விற்கும் தொழிலாளி, அ.தி.மு.க.

● ''நாங்க தினம் எந்திரிக்கும் போது இன்னைக்கு பொழப்பு இருக்குமா இருக்காதான்னு பயப்படுறோம். இப்ப சட்டம் போட்டா என்ன பண்றது. எந்தச் சட்டம் வந்தாலும் மாட்டுத் தொட்டியை விட்டு நாங்க போகமாட்டோம். மாட்டைத் தாயின்றியா, அப்ப தாய ஏண்டா இடுப்புல கட்ற (பெல்ட்), கால்ல போடுற (செருப்பு), முதல்ல இராம கோபாலனை (இந்து முன்னணி) இங்க கூட்டிட்டு வாங்க, வச்சு உரிச்சிடலாம். பாய்ங்கதான் இதுல இருக்காங்கன்னு சொல்றது தப்பு, தாழ்த்தப்பட்டவங்கதான் இந்தத் தொழில்ல அதிகம். மாட்ட வெட்றவன் காட்டுமிராண்டின்னு சொல்றவங்கதான் காட்டுமிராண்டி.''

**-தினேஷ்குமார்**
புளியந்தோப்பு மாட்டுத் தொட்டிக்கு அடிமாடுகளைக் கொண்டு வருபவர்.

● ''நாங்க தூக்கும் மூட்டை சில நேரம் 180 கிலோ வரை இருக்கும். அதத் தூக்கிட்டு படியில இறங்கும் போது கால் கொஞ்சம் திரும்பினாலும் முறிஞ்சிரும் அதோடு எங்க வாழ்க்கையே அவ்வளவுதான். அந்த மாதிரி கால் ஒடிந்து கோயம்பேட்டை விட்டுப் போனவங்க நிறையப் பேர். அப்படிப்பட்ட வேலை செய்யறவங்களுக்கு மாட்டுக்கறிதான் ஒத்து வரும்.''

**- இராஜசேகர்**
சுமை தூக்கும் தொழிலாளி, கோயம்பேடு.

● **பசுவைச் சாப்பிடுவது தாயை வெட்டிச் சாப்பிடுவது போல என்று இராமகோபாலனும், சங்கராச்சாரியும் கூறுகிறார்களே?**

''இரண்டு பேரையும் கோயம்பேட்ல காலையில ஒரு மூட்டைய தூக்கிக்கிட்டு ஒரு வீதியில நடக்கச் சொல்லு. வழுக்கி வுழுந்து (செய்து காண்பிக்கிறார்) பல்ல ஒடச்சுக்கிட்டா அப்படிப் பேச மாட்டானுங்க.''

**- பச்சையப்பன்**
சுமை தூக்கும் தொழிலாளி கோயம்பேடு.

கங்களிலும் மாட்டிறைச்சி சகஜமாக உட்கொள்ளப்படுகிறது. உதிரிப் பாட்டாளிகள் இலட்சக்கணக்கில் வாழும் சென்னையின் முக்கியச் சாலைகளில், அங்காடிப் பகுதிகளில், தொழில்துறை மண்டலங்களில் 50 அடிக்கு ஒரு கடையில் மாட்டுக்கறி உணவு கிடைக்கின்றது.

சென்னை நகருக்கு பூ, காய்கனிகளை விற்கும் கோயம்பேடு சந்தையில் சுமைதூக்கும் தொழிலாளிகள் ஏறக்குறைய 1000 பேர் இருக்கின்றனர். பொய்த்துப் போன விவசாயத்தை விட்டு மூட்டை தூக்க வந்த இத்தொழிலாளிகள் அதிகாலை 3 மணி முதல் 9 மணிவரை மூட்டை ஏற்றி-இறக்குவது செய்கின்றனர். ஒரு நபருக்கு 5 மூட்டைகள் கிடைப்பது அரிது. ஒரு மூட்டைக்கு ரூ 5 முதல் 10 வரை கிடைக்கும். சந்தை வளாகத்திலிருக்கும் உயர்தர சைவ உணவகங்களில் 2 இட்லி 5 ரூபாயும், தோசை 10 ரூபாயும், விற்கிறது. 100 முதல் 150 கிலோ மூட்டை தூக்கும் தொழிலாளி வயிறு நிறைய உண்ணுவதற்கு 10 இட்லிகளும் 10 தோசைகளும் குறைந்தபட்சம் தேவைப்படும். இதன் விலை ரூ 150 வருகிறது. சராசரியாக 75 முதல் 100 ரூபாய் வரை சம்பாதிக்கும் தொழிலாளிகள் என்ன செய்கிறார்கள்?

சந்தையின் கையேந்தி பவன்களில் கிடைக்கும் சோறும், மாட்டுக்கறியுமே அவர்களுக்கு உயிர் கொடுக்கிறது. 10 ரூபாய் முழுச் சாப்பாடு, 10 ரூபாய் கறி விற்கும் ஒரு கடையில் மட்டும் தினசரி 500 சாப்பாடுகள் விற்கின்றன. உயர்தர சைவ உணவகங்கள் இப்பாதையோரக் கடைகளின் மீது புகார் கொடுப்பதும், போலீசும் சுகாதாரத்துறையும் ரெய்டு வருவதும் தொடர்ந்து நடந்தாலும் தொழிலாளிகளை இட்லி, தோசைக்கு மாற்ற முடியவில்லை. கோயம்பேட்டில் ''மாட்டுகறியில்லாமல் சென்னை மரக்கறி இல்லை'' என்பது மறுக்கமுடியாத உண்மை. ஊரில் விட்டு வந்த விவசாயம், கடன், குடும்பம் என்று எவ்வளவோ துன்பங்களுக்கிடையில் இங்கு வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்கு உடல் உரத்தையும், உழைக்கும் சக்தியையும் மலிவாகக் கொடுப்பது மாட்டுக்கறிதான்.

பசுவைச் சாப்பிடுவது தாயைச் சாப்பிடுவது போல என்று கூறும் ஆர்.எஸ்.எஸ்.இன் கேள்விக்கு ஒரு தொழிலாளி சொன்னார்:

''பெத்த தாய்க்குத் தெரியாதா பிள்ளையை எப்படி பார்த்துக்கணும்னு; எது நல்லது கெட்டதுன்னு தாய்க்குதான் தெரியும்.''

● **வேல்ராசன்**

செய்தியாளர்கள்: ஜான், ஜோதி
நன்றி: அவுட்லுக், ஃப்ரன்ட்லைன், தினத்தந்தி.


படிப்பகம்

www.padippakam.com



# காக்க... காக்க...

## நிஜத்தில் வில்லன்கள் நிழலில் நாயகர்களாக...

அன்று மாலை சென்னையின் புற நகர்ப் பகுதி ஒன்றில் இரண்டு ரவுடிக ளுக்குள் சண்டை. வேடிக்கை பார்த்த மக்களையும் அடித்தார்கள். விரட்டிய டித்தார்கள். அந்த இரண்டே பேரைக் கண்டு பயந்து நூற்றுக்கணக்கான மக்கள் சிதறி ஓடினார்கள். கடைக ளுக்குள் பதுங்கினார்கள். கடைகளை மூடிக் கொண்டார்கள்.

ரவுடிகள் பலத்த கண்டனக் குர லோடு விடை பெற்றுச் சென்றார்கள்.

அரைமணி நேரம் கழித்து ஜீப்பில் மூன்று போலீசார் அதே இடத்தில் வந்து இறங்கினார்கள். 'யார்டா அது, இங்க தகராறு பண்ணது?' என்ற அதட்ட லோடு, தள்ளு வண்டிக்காரர்களை, அங்கு நிற்பவர்களை, நடப்பவர்களை அடித்தார்கள். விரட்டியடித்தார்கள். அந்த மூன்றே போலீஸ்காரர்களைக் கண்டு பயந்து மக்கள் சிதறி ஓடி னார்கள். கடைகளுக்குள் பதுங்கி னார்கள். கடைகளை மூடிக் கொண்டார்கள்.

ரவுடிகள் உபயோகித்த அதே கெட்டவார்த்தைகளைக் கொண்ட கண்டனக் குரலோடு விடை பெற்றுச் சென்றார்கள், ஸ்காட்லாந்த் யார்டு போலீசுக்குப் பிறகு உலகப் புகழ் பெற்ற தமிழகப் போலீசார்.

மக்கள் போலீசையும் - ரவுடி யையும் கண்டு ஒரே மாதிரிதான் பயப் படுகிறார்கள். 'இவுங்களோடு எதுக்குப் பிரச்சினை?' அதனால்தான் காவல் துறை மக்களால் நம்ப முடியாத 'உண்மையை' உரத்துக் கத்துகிறது, 'காவலர் உங்கள் நண்பன்'.

● ● ●

அவர் பிரபல ரவுடிகளுக்கெல்லாம் தலைவர். அதாவது தாதா. அவரைப் பற்றியான இந்தத் தகவல் பொது மக்களும், காவல்துறையினரும் அறிந் ததே.

இந்தத் தாதா சில தொழில்களிலும் முதலீடு செய்திருப்பதால் அவர் தொழில் அதிபராகவும் அறியப்பட்டார்.

கோயில் திருவிழாவிற்கு நன்கொடை, கும்பாபிஷேகத்திற்கு நன்கொடை இன்னும் மனமகிழ் மன்றம், நற்பணி மன்றம், ரசிகர் மன்றம் என்று பல ஊதாரித்தனங்களுக்கு நன்கொடை.

ஏழைப் பெண்களுக்கு சீதனத்துடன் கூடிய திருமணம், ஊனமுற்றவர்க ளுக்கு மூன்று சக்கர சைக்கிள் என்று ஒரு தாராளத் தாதாவாக இருந்தார் அவர். அவரின் இந்த தாராளத்தால், 'வள்ளல்' என்றும் மக்களால் அறியப்பட்டார்.

பல பொது நிகழ்ச்சிகள் இவர் தலை மையில்தான் நடக்கும். இவர் இல்லாத போது காவல் துறையின் உயர் அதிகா ரிகள் தலைமையில் நடக்கும். இவரிடம் அடியாட்களாக இருப்பவரின் உறவு, இன்ஸ்பெக்டர் - கான்ஸ்டபிள்களோடு.

இவரின் உறவு அரசியல் தலை வர்கள், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிக ளோடு.

● ● ●

கிரிமினல்கள் - தொழில் அதிபர்க ளாக பெயர் மாற்றிக் கொண்ட பின், தனது முந்தைய வாழ்க்கையில் கொலை, கொள்ளை என்று நேரடியாக ஈடுபட்ட போது, சொத்துக்களோடு அவர்களுக்குக் கிடைத்த விரோதம் காரணமாக, அவர் களின் பாசமிகு பழைய பார்ட்னர்கள் பழிதீர்க்க இன்னும் ஆட்களோடும், அரு வாக்களோடும் அலைந்துக் கொண்டு இருப்பதால், தன் அடியாட்களையும் தாண்டி ஒரு பரந்துபட்ட பாதுகாப்பு, தாதா தொழில் அதிபர்களுக்குத் தேவைப்படுகிறது.

அதனால் அவர்கள் தங்கள் சாதி மக்களைப் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொண்டே, சாதி சங்கத்தின் மூலமாக தங்கள் பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்கிறார்கள்.

இதுபோலவே, ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரிகள் தங்கள் சர்வீசின் போது - காவல்துறை, அரசின் பாதுகாப்போடு பல 'வீரதீர' செயல் களில் ஈடுபட்டதினால் ஏற்பட்ட விரோ தத்தின் காரணமாக, தன் மீதி வாழ்க்கையின் பாதுகாப்பு கருதி, அவர் களும் சாதி சங்கத்தையே தஞ்சம் அடை கிறார்கள். உதாரணம்: பொன் பரமகுரு, வால்டர் தேவாரம், மலைச்சாமி இந்தியன் வங்கியை அடகு வைத்த கோபாலகிருஷ்ணன். இதைத்தான் அவர்கள் சமூகப் பாசம் என்கிறார் களோ?

காவலர்களுக்கும் கிரிமினல்களுக் குமான உறவு ஒரு பங்காளி உறவு போல் தான். சண்டை போட்டுக் கொள்வதும், கூடிக் கொள்வதுமாக.

இந்த உறவுகளையெல்லாம் புறம் தள்ளி, ஐ.பி.எஸ் அதிகாரிகள் X தாதாக்கள் தகராறை மையமாக வைத்துப் படம் வந்திருக்கிறது **'காக்க.. .. காக்க . . .'** என்ற பெயரில். இந்தப் படத்தில் வரும் போலீசு அதிகாரி நிஜப் போலீசில் இருந்து முற்றிலும் வேறுபட் டவராக மட்டுமல்லாமல், வழக்கமான சினிமாப் போலீசில் இருந்தும் மாறுபட் டவராகவும் இருக்கிறார்.

● ● ●

எம்.ஜி.ஆர். போலீசாக வந்தால், சமூக விரோதிகளின் இருப்பிடத்தைத் துப்பறிந்து தனியாளாகச் சென்று அவர் களை நையப்புடைத்து அந்தக் கூட்டத்தின் தலைவன் யார் என்பதை அறிய அவன் முகமூடியைக் கிழித்து 'அட நீயா?' என்று அதிர்ச்சியாகி, (மாமனாரோ, அப்பாவோ?) எல்லோ ரையும் ஒரே கயிற்றில் கட்டி கோர்ட்டில் ஒப்படைப்பார். சில படங்களில் அவர் போலீசாக இருக்கிறாரா என்பது படத்தில் அவருடன் வருகிற கதாபாத்தி ரங்களுக்கும் தெரியாது. படம் பார்ப்ப வர்களுக்கும் தெரியாது. அவருக்கே கூடத் தெரியுமா என்பது சந்தேகமே. (அவ்வளவு ரகசியமாம்.) இது எம்.ஜி.ஆர். பாணி போலீசு.

தமிழ் சினிமா போலீசுகாரர்களுக்கு முன் மாதிரியாக கஞ்சி போட்டு, இஸ்திரி பண்ணி விரைப்புடன், தங்கப் பதக்கம் சவுத்திரியாக வந்த சிவாஜி கணேசன். இவர் காக்கிச் சட்டையை மாட்டினால் போலீசுக்காரர், கழட் டினால் குடும்பத் தலைவர். 'கடமை X குடும்பம்' என்று போராடி கடைசியில் தன் கையாலேயே தன் கிரிமினல் மகனைச் சுட்டு வீழ்த்தி விட்டு (என்கவுண்டர்) 'டிவிங்கிள் டிவிங்கிள் லிட்டில் ஸ்டார்' என்று சோகமாகப் பாடிக் கொண்டே கதறி அழுவார்.

ஒரு சாதாரண இன்ஸ்பெக்டராக இருந்து கொண்டே, பிரதமரின் மேசையைக் குத்திச் சவால் விட்டுப் பேசி, பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்குத் தக்க பாடம் புகட்டிடுவார் விஜயகாந்த்.

இதுதாண்டா போலீஸ், கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு, சாமி போன்ற படங்களில் வந்த பொறுக்கி



படிப்பகம்

www.padippakam.com

போலீசு. - இப்படியாக இதுவரை வந்த தமிழ் சினிமாவின் போலீசுக்காரர்களுக்கும் காக்க... காக்க... போலீசுக்காரருக்கும் பெரிய அளவில் மாறுபாடு இருக்கிறது.

மேற்சொன்ன அவர்களெல்லாம், குற்றவாளிகள் என்ன மாதிரியான குற்றங்கள் செய்கிறார்கள் என்பதைக் கண்டு பிடித்துச் சட்டத்தின் முன் ஒப்படைப்பார்கள். அப்படியும் முடியாத பட்சத்தில் எதிரிகளை நோக்கிக் கடுமையான எச்சரிக்கை தந்த பிறகே சுட்டுக் கொல்வார்கள். ''அவ்வாறு சுட்டுக் கொல்ல வேண்டிய அளவுக்கு கொடூரமானவன்தான் வில்லன்'' என்பதைப் பல சம்பவங்கள் மூலம் திரைக்கதை நியாயப்படுத்தியிருக்கும். கூடுதலாக கதாநாயகனின் தங்கையைக் கற்பழிப்பது அல்லது கதாநாயகியைக் கடத்துவது போன்ற கிளைமாக்ஸ் நடவடிக்கைகள் மூலம் கதாநாயகனுக்குத் தனிப்பட்ட முறையில் 'வெறி' உண்டாக்கப் பட்டிருக்கும். ஆனால் காக்க... காக்க.... படத்தில் வரும் அசிஸ்டென்ட் கமிசனர் கையில் போட்டோவை வைத்துக் கொண்டு மறைந்து நின்று ஒரு ஓய்வு நேரப் பொழுது போக்கிற்காக மிருகங்களை வேட்டையாடுபவனைப் போல், மனிதர்களைக் கொலை செய்கிறார்.

அதற்கு அவரே விளக்கம் சொல்கிறார். ''அவனை உயிரோடு பிடிக்க போலீசுபடை, அவன் குற்றத்தை நிருபிக்கக் கோர்ட் கேசுன்னு போனா ஆயிரக் கணக்குல செலவாகும். இப்ப ஒரே தோட்டாவுல பிரச்சினை முடிஞ்சது, வெறும் 50 ரூபாய்தான் செலவு'' என்கிறார் இந்தச் சிக்கனச் சிகாமணி.

இந்தப் படத்தின் திரைக் கதையிலும் காட்சியமைப்பிலும் இயக்குநரின் கிரிமினல் புத்தியே அதிகம் வெளிப்படுகிறது. ஒரு வேளை கவுதம் இயக்குநராக ஆக முடியாமல் போயிருந்தால் போலீசு ஆகவோ, கிரிமினலாகவோ ஆகியிருப்பாரோ என்னவோ? மற்றபடி, தமிழகப் போலீசின் துயரங்களுக்காக வருத்தப்பட்டு பாரம் சுமந்து, கடன் வாங்கி இந்தப் படத்தைத் தயாரித்திருப்பது யார் தெரியுமா?

''தமிழக அரசும் போலீசும் என் மீது பொய் வழக்குப் போட்டு பொடாவில் கைது செய்திருக்கிறது'' என்று கம்பிகளுக்குள் இருந்து கர்ஜித்துக் கொண்டிருக்கும், பொடா ஆதரவாளர் வைகோ கட்சியை சேர்ந்த தாணு என்கிற தமிழ் உணர்வாளர்தான் தயாரிப்பாளர்.

தலைவர் போலீசால் கைது செய்யப்



பட்டு பொடாக் கைதியாக இருக்கிறார். கட்சியின் முக்கியப் பொறுப்பாளர் போலீசின் துயரங்களுக்காக அழுது கொண்டிருக்கிறார். விளங்குமா அந்தக் கட்சி?

'காக்க... காக்க...' அன்புச்செல்வன் ஐ.பி.எஸ் உயர் பதவியில் இருந்து இறங்கி, ஒரு சப்-இன்ஸ்பெக்டரைப்போல் பஸ் ஸ்டாண்டில், ரோட்டில், இப்படிப் பொது இடங்களில், பெண்களிடம் வம்பு செய்யும் பொறுக்கி வாலிபர்களை விரட்டி விரட்டி அடித்து, தன் கதாநாயகத்தனத்தை கதாநாயகி முன் காட்டுகிறார். நடைமுறையில், நிஜப் போலீசு நடவடிக்கைகளிலும் இதுவே நிஜம். மறுப்பதற்கில்லை, பாராட்டுக்குரியதுதான்.

ஐ.பி.எஸ் அதிகாரிகளிலிருந்து, நேற்றைக்குப் புதிதாக வேலைக்குச் சேர்ந்த கான்ஸ்டபிள் வரை வீரம் காட்டுவது இப்படித்தான். இங்கு மட்டும்தான். கில் ஐ.பி.எஸ், பஞ்சாப் மாநில டி.ஜி.பியாக இருந்தபோது விருந்தொன்றில் ஒரு பெண் ஐ.ஏ.எஸ் அதிகாரியின் பின்புறத்தைத் தட்டினார்.

பஸ் ஸ்டாண்டு பொறுக்கித்தனத்தை விடவும் மோசமான இந்த நடவடிக்கையைக் கண்டித்து, அன்புச் செல்வன் போன்ற கறாரான ஐ.பி.எஸ் அதிகாரியால் கில் முகத்தில் ஓங்கி அடிக்க முடியுமா?

கலைவாணன் ஐ.ஏ.எஸ் என்னைக் கற்பழித்து விட்டார் என்று ஒரு ஆசிரியை பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். கறாரான ஐ.பி.எஸ் அதிகாரியால் கலைவாணன் முகத்தில் ஓங்கி அடிக்க முடியுமா?

முடியும். மிகவும் கறாரான ஒரு காவல்துறை அதிகாரியால் - கில், கலைவாணன் இன்னும் அவர்களைப் போல் 'பாலியல் சேட்டைகளில்' ஈடுபடும் அதிகாரிகள், அமைச்சர்களைக் கண்டவுடன் அவர்கள் முகத்தில் அல்ல, முகத்திற்கு எதிராக நின்று, மரியாதையான விரைப்பான ஒரு சல்யூட் மட்டுமே அடிக்க முடியும்.

● ● ●

மக்களின் நலன் கருதி சமூக விரோதிகளை போலீஸ்காரர்கள் விசாரணையின்றிக் கொல்வது (என்கவுன்டர்) தவறில்லை என்கிறது இந்தப்படம். அதைத் தீவிரமாக வலியுறுத்தி படத்தில் அன்புச் செல்வன் ஐ.பி.எஸ். : 'நாங்கள் மனிதர்களைக் கொல்லவில்லை. மிருகங்களைத்தான் கொல்கிறோம்'' என்கிறார்.

இதைச் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதாகச் சொல்லும் நிஜ ஐ.பி.எஸ் அதிகாரிகளும் 'சரிதானே' என்று வரவேற்று பாராட்டி இருக்கிறார்கள். சரிதான். அப்படியானால், தன் 'கணவனைக் காணவில்லை' என்று காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்த சிதம்பரம் பத்மினியைக் கூட்டாகச் சேர்ந்து பாலியல் சித்ரவதை செய்து, அவர் கணவரையும் கொலை செய்த, அந்தப் போலீசார், மிருகங்களா? மனிதர்களா?

''வீரப்பனைப் பிடிக்கப் போகிறோம்'' என்று சென்று, சின்னாம்பதி கிராமத்தின் அப்பாவிப் பெண்களின் முந்தானையைப் பிடித்திழுத்து அவர்கள் கதற, கதற தன் பாலியல் வக்கிரத்தைத் தீர்த்துக் கொண்டு அந்தப் பெண்களின் பிறப்புறுப்பில் லத்தியால் குத்திக் கொடுமை செய்த, 'அதிரடிப்' போலீசார், மிருகங்களா? மனிதர்களா?

பரிதாபத்திற்குரிய ரீட்டா மேரி என்கிற சின்னஞ்சிறிய பெண்ணை, தனது வழக்கமான பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தி, பிறகு விபச்சாரத் தரகர்களோடு சேர்ந்து, விபச்சார விடுதியில் விற்ற அந்தப் போலீசார், மிருகங்களா? மனிதர்களா?

உயிர் தப்பி ஓடிய பெண்களையும், குழந்தைகளையும் விரட்டி மடக்கி, 'அய்யா.. சாமி எங்கள வுட்டுடுங்க' என்று அவர்கள் கையெடுத்துக் கும்பிட்டுக் கதறிய போதும் மாஞ்சோலை தோட்டப் பெண் தொழிலாளர் தலை முடியைக் கொத்தாகப் பிடித்திழுத்து லத்தியால் அவர்கள் முகத்தில் ஓங்கி அடித்துத் தாமிரபரணி ஆற்றில் மூழ்கடித்துச் சாகடித்த போலீசார் மிருகங்களா? மனிதர்களா?

அவர்கள் மனிதர்களாயினும் சரி, மிருகங்கள் என்றாலும் சரி... அவர்களுக்கான என்கவுன்டரை யார் செய்வது?

● வே.மதிமாறன்


படிப்பகம்

www.padippakam.com





# பாரதி அவலம்

❑ மருதையன்

மார்க்சியவாதிகள் என்று தம்மைக் கூறிக் கொள்ளும் பாரதி அபிமானிகள் பாரதிக் கெதிரான விமரிசனங்கள் அனைத்தையும் 'வீட்டோ' செய்வதற்கு பயன்படுத்தும் ஒரு ஆயுதம், டால்ஸ்டாய் குறித்த லெனினது மதிப்பீடு. லெனினுடைய மேற்கோள்கள் மூலம் பாரதி அன்பர்கள் நிலை நாட்ட விரும்பும் விசயங்களை மட்டும் (எமது வார்த்தைகளில்) தொகுத்துக் கூறுகிறோம்:

*''டால்ஸ்டாயின் கருத்துகளிலுள்ள முரண்பாடுகளை இன்றைய தொழிலாளி வர்க்க இயக்கம் எனும் நிலையிலிருந்து மட்டும் மதிப்பிடக்கூடாது. வளர்ச்சியடைந்து கொண்டிருந்த முதலாளித்துவம் பெருந்திரளான மக்களிடமிருந்து நிலத்தைப் பறித்து, அவர்களை அழித்து வருவதை எதிர்த்து குலமரபு கிராமப்பகுதியிலிருந்து தோன்றிய எதிர்ப்பு என்னும் கருத்து நிலையிலிருந்தும் மதிப்பிட வேண்டும்.*

*''அரசு, மதம், தனியுடைமை ஆகியவை மீதான வெறுப்பையும், முன்னைக் காட்டிலும் சிறந்த வாழ்க்கை வேண்டுமென்ற முதிர்ச்சியடைந்த தேடலையும் டால்ஸ்டாய் பிரதிபலித்தார்.*

*''ரசியாவை அச்சுறுத்திய நெருக்கடிக்கான காரணங்களை டால்ஸ்டாய் புரிந்து கொள்ளவில்லை, இதனால் தீமையை எதிர்த்துப் போராடாதிருத்தல், தூய்மையாக்கப்பட்ட மதத்தைப் போதிக்கும் பிரச்சாரம், சோசலிசப் போராட்டம் குறித்த பாராமுகப் போக்கு போன்றவை அவரிடம் நிலவின.*

*''டால்ஸ்டாயின் கருத்தோட்டங்களில் இருக்கும் இந்த முரண்பாடுகள் அவருடைய சொந்தக் கருத்தோட்டங்களுக்கு மட்டுமே உரித்தான முரண்பாடுகள் அல்ல; மாறாக, ரசிய சமுதாயத்தின் பற்பல வர்க்கங்களின், பற்பல பிரிவுகளின் மனப்பாங்கை நிர்ணயித்த மிகமிகச் சிக்கலான, முரண்பாடான நிலைமைகள், வரலாற்று மரபுகள் ஆகியவற்றின் பிரதிபலிப்புகளாகும்.''*

-இவ்வாறு லெனினை மேற்கோள் காட்டி பாரதி அபிமானிகள் சொல்ல வருவது என்ன?

முதலாளித்துவச் சுரண்டலால் நொறுங்கி அழிந்து கொண்டிருந்த ரசிய கிராமச் சமூகத்தின் அவலக்குரலாக டால்ஸ்டாயை மதிப்பிடுவதைப் போன்று, ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்கொள்ள இயலாமல் தடுமாறிய வருண சமூகத்தின் அவலக்குரலாக பாரதியின் வேதகாலம் குறித்த ஏக்கத்தையும் பார்க்க வேண்டும் என்கிறார்கள்.

இரண்டாவதாக, பாரதியிடம் காணப்பட்ட முரண்பாடுகள் என்பவை, அந்தக் கால கட்டத்தின் சிக்கலான, முரண்பாடான நிலைமைகளின் பிரதிபலிப்பு என்றுதான் மதிப்பிடப்பட வேண்டும் என்கிறார்கள்.

லெனினையும், மார்க்சியத்தையும் மிகவும் கொச்சையாகவும், கேடாகவும் பயன்படுத்தும் இந்த 'ஆய்வுமுறை' கேலிக்குரியது; அல்லது வஞ்சகமானது. விரிவஞ்சி இதன் மையமான விசயங்களை மட்டும் பரிசீலிப்போம்.

டால்ஸ்டாய் குறித்த லெனினுடைய கட்டுரைகளின் மையமான பொருள் கலைக்கும், புரட்சிகர எதார்த்தத்திற்கும் இடையிலான உறவு குறித்தது. ''அரசுக்கும், மதகுருமார்களுக்கும் அவர்களுடன் கூட்டு சேர்ந்திருந்த போலீசுக்கும் எதிராக டால்ஸ்டாய் வெளிப்படுத்தும் கடுமையான, உணர்ச்சிபூர்வமான, இரக்கமற்ற வகையில் குத்திக்கிழிக்கின்ற விமரிசனங்கள்'' பல நூற்றாண்டுகளாய் தாங்கள் அனுபவித்து வரும் கொடுங்கோன்மைக்கு எதிராக ஏழை விவசாயிகளின் இதயத்தில் தேங்கிக் கிடக்கும் வெறுப்பையும் கோபத்தையும் அப்படியே பிரதிபலிப்பதாகக் கூறுகிறார் லெனின்.

நவீனத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் கண்ணோட்டத்தில் டால்ஸ்டாயின் விமரிசனங்கள் வைக்கப்படவில்லையென்றாலும், அவை ஒரு வெகுளித்தனமான விவசாயியின் கண்ணோட்டத்திலிருந்தும் மனநிலையிலிருந்தும்தான் வைக்கப்படுகின்றன என்றாலும், பிரச்சினையின் அடியாழம் வரை சென்று பார்ப்பதில் டால்ஸ்டாயிடம் காணப்படும் நாணயத்தையும் அச்சமின்மையையும் லெனின் மெச்சுகிறார்.

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஜார் ஆட்சியால் அறிமுகப்படுத்தப்பட்ட நிலச்சீர் திருத்தம் ஏழை விவசாயிகளைத் திவாலாக்கிக் கொண்டிருந்தது. இதை அற்புதமாகச் சித்தரித்த டால்ஸ்டாயின் படைப்புகள் உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்கும் விவசாயப் புரட்சி

*டால்ஸ்டாயினுடைய இலக்கியத்தின் (அழகியல் அறிதலின்) கூர்மையையும் செறிவையும் பாராட்டும் போதே, டால்ஸ்டாயிசம் எனும் பிற்போக்குச் சித்தாந்தத்தை எதிர்த்துப் போராட அறைகூவுகிறார் லெனின்.*



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றுதான் தீர்வு என்ற உண்மையை எத்தகைய பொருளாதாரப் புள்ளிவிவரங்களாலும் நிறுவ இயலாத அளவுக்கு உணர்ச்சி பூர்வமாக நிறுவின என்பதுதான் லெனினது மதிப்பீடு.

லெனினுடைய வார்த்தைகளிலேயே சொல்வதென்றால் ''டால்ஸ்டாயின் இலக்கியப் படைப்புகளைப் படிப்பதன் மூலம் ரசியத் தொழிலாளிவர்க்கம் தனது எதிரிகளை மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ளும்; ஆனால் டால்ஸ்டாயின் கொள்கையைப் பரிசீலிப்பதன் மூலம் தம் பலவீனம் எங்கே இருக்கிறது என்பதையும், எது முழு விடுதலையைப் பெறவியலாமல் தம்மைத் தடுக்கிறது என்பதையும் ரசிய மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.''

''விமரிசன நோக்கைப் பெற்றிருந்தாலும் கற்பனாவாதக் கோட்பாடுகள் வரலாற்று வளர்ச்சிக்கு எதிரானவை'' என்று மார்க்ஸ் விடுக்கும் எச்சரிக்கையையும் நினைவுபடுத்தி டால்ஸ்டாயிசம் குறித்து எச்சரிக்கிறார் லெனின்.

தொகுப்பாகச் சொன்னால் டால்ஸ்டாயினுடைய இலக்கியத்தின் (அழகியல் அறிதலின்) கூர்மையையும் செறிவையும் பாராட்டும் போதே, டால்ஸ்டாயிசம் எனும் பிற்போக்குச் சித்தாந்தத்தை எதிர்த்துப் போராட அறைகூவுகிறார், லெனின்.

ஒரு விவசாயப் புரட்சிக்காக ஏங்கித் துடித்த ஏழை விவசாயியின் குரலாய் ஒலித்த டால்ஸ்டாய் எங்கே, பாரதி எங்கே? ஐரோப்பிய வர்க்கச் சுரண்டலைக் காட்டிலும் நமது சாதிய மைப்பு மேலானது என்றும், மாட்டுக்கறி தின்பவர்களைத் தீண்டத்தகாதவர் ஆக்கியது நியாயம் என்றும், நிலவுடைமையாளர்களின் சொத்துக்களைப் பறிக்கக் கூடாதென்றும், பாதிரிகளை விடப் பார்ப்பனர்கள் நல்லவர்கள் என்றும் கூறுகின்றான் பாரதி.

சாதியக் கொடுங்கோன்மை, நிலப் பிரபுத்துவ வர்க்கச் சுரண்டல், இவற்றைப் பாதுகாக்கும் ஏகாதிபத்திய அரசு ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறவேண்டுமென்பதுதான் அன்று பெரும்பான்மை இந்திய மக்களின் வேட்கை.

ரசிய விவசாயிகளின் விடுதலைக்கு வழி சொல்லத் தவறினாலும் அவர்களுடைய உள்ளக்கிடக்கையைச் சரியாகவே பிரதிபலித்தார் டால்ஸ்டாய். ஆனால் பாரதி? பாரதியிடம் குறுகிய காலத்திற்கு நிலவிய ஏகாதிபத்திய எதிர்ப்பு கூட பார்ப்பன தேசியத்தின் அடிப்படையிலான, கருத்தியல் ரீதியான வெளிப்பாடுதான். பாரதியிடம் நாம் காண்பது பார்ப்பன மீட்புவாதக் கனவு, கற்பனாவாத நம்பிக்கையல்ல.

டால்ஸ்டாயின் இலக்கியம் ரசிய விவசாயிகளின் துன்பத்தைப் பருண்மையாகச் சித்தரித்தது; பாரதியின் கவிதையோ விடுதலை, சுதந்திரம், சமத்துவம் பற்றி சூக்குமமாகப் பேசியது.

டால்ஸ்டாய் சித்தரித்த புறவுலக உண்மைகளை இருட்டடிப்பு செய்துவிட்டு, அவருடைய அகவுலக மாயைகளான எல்லோர்க்கும் பொதுவான அன்பு, நீதி, அகிம்சை போன்றவற்றை மட்டும் முதன்மைப்படுத்தும் பேராசிரியப் பித்தலாட்டங்களைத் தனது கட்டுரைகளில் சாடுகிறார் லெனின். டால்ஸ்டாய் விசயத்தில் லெனின் எதைச் சாடுகிறாரோ அதைத்தான் பாரதி விசயத்தில் கொண்டாடுகிறார்கள் இவரது அபிமானிகள்.

டால்ஸ்டாயிசம் ரசிய விவசாயிக்கு விடுதலையைப் பெற்றுத்தரவில்லை, போல்ஷ்விசம்தான் பெற்றுத் தந்தது; எனினும் ரத்தமும் சதையுமான ரசிய விவசாயியை, அவன் உள்ளக் கிடக்கையை டால்ஸ்டாயின் இலக்கியம் நிலைக் கண்ணாடியைப் போலப் பிரதிபலித்துக் காட்டியது.

டால்ஸ்டாயிசத்தின் வாரிசெனக் கூறப்படும் காந்தியோ விவசாயியைப் போல வேடமணிந்து இந்திய விவசாய வர்க்கத்தைப் 'பிரதிபலித்தார்'. பாரதியின் மீசையும் முண்டாசும் பார்ப்பனிய எதிர்ப்பைப் 'பிரதிபலித்தன'. இந்தக் குறியீடுகளின் பின்னால் பாதுகாப்பாக ஒளிந்து கொண்டன ஆளும் வர்க்கங்கள். இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பிரதிபலித்த நிலைக் கண்ணாடிகளின் கதை இதுதான்.

பாரதி குறித்த 'முற்போக்கு' முகாமின் 'விஞ்ஞானப் பார்வை' ஜீவாவிடமிருந்து தொடங்குகிறது: ''பாரதி ஒரு பொதுவுடைமைவாதியென்று எடைபோட்டு சீர்தூக்கிக் காட்ட முடியுமானால், மெய்யான பாரதி அன்பர்கள் ஒவ்வொருவரையும் பொதுவுடைமைத் திசையில் அனுதாபத்தோடு தம் சிந்தனைத் தேரை ஓட்டச் செய்ய முடியும்'' என்று எழுதுகிறார் ஜீவா.

''டால்ஸ்டாயை மட்டும் கம்யூனிஸ்டாகச் சித்தரிக்க முடியுமானால் ரசிய விவசாயிகளை கோழி அமுக்குவது போல அமுக்கி விடலாம்'' என்று லெனின் கூறவில்லை. ஏனென்றால் உண்மையான கம்யூனிஸ்டுகளால் இப்படிச் சிந்திக்கவே முடியாது.

கம்பராமாயணத்தையே முற்போக்கு இலக்கியம் என்றார் ஜீவா. இந்தியா வேதங்களின் நாடு என்றார் நம்பூதிரிபாடு. இப்படிச் சிந்திப்பது போலிகளுக்கு மட்டுமே சாத்தியம். காந்தியை ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகச் சித்தரித்தார்கள்; எம்ஜியாரை கல்யாணசுந்தரம் புரட்சிக்காரராகச் சித்தரித்தார்; கடைசியாக, சென்ற தேர்தலில் ஜெயலலிதாவை மதச் சார்பற்றவராகச் சித்தரித்தார்கள். தற்போது தங்களைக் கம்யூனிஸ்டுகளாகச் சித்தரித்துக் கொள்வதற்கே அரும்பாடு படுகிறார்கள்.

*பாரதியிடம் குறுகிய காலத்திற்கு நிலவிய ஏகாதிபத்திய எதிர்ப்பு கூட பார்ப்பன தேசியத்தின் அடிப்படையிலான, கருத்தியல் ரீதியான வெளிப்பாடுதான். பாரதியிடம் நாம் காண்பது பார்ப்பன மீட்புவாதக் கனவு; டால்ஸ்டாயிடம் காணப்படும் கற்பனாவாத நம்பிக்கையல்ல.*



படிப்பகம்

www.padippakam.com

நரியைப் பரியாகக் காட்டும் வேலை எங்கே தொடங்குகிறதோ அங்கே அறிவு நாணயம் விடை பெற்றுக் கொள்கிறது. ''வேதமறிந் தவன் பார்ப்பான்'' என்றால் ''யாருக்கெல்லாம் வேதம் தெரிகிறதோ அவர்களெல்லாம் பார்ப்ப னர்கள் என்பதே பாரதியின் கருத்து'' என்று விளக்கம் தருவது; ஆரியர், மிலேச்சர், புலையர் - என பாரதி பயன்படுத்திய சொற்களுக் கெல்லாம் விதவிதமாகப் பொருள் சொல்லி புதிய தமிழ் அகராதியையே உருவாக்குவது; கவிதைக்கெதிராகக் கட்டுரையையும், கட்டுரைக்கெதிராகக் கவிதையையும் காட்டி வாதாடுவது - என முடிவின்றித் தொடர்கிறது பாரதி ஆய்வு.

ஆனால் ஒரு மனிதனின் உலகக் கண்ணோட்டம் என்பது பல்வேறு விசயங்கள் குறித்து அவன் தெரிவிக்கின்ற கருத்துக்களின் கூட்டுத்தொகையோ, சராசரியோ அல்ல. அம்மனிதனுடைய கண்ணோட்டத்தின் பொதுமைப் படுத்தப்பட்ட முழுமைதான் அவனுடைய உலகப் பார்வை. பாரதி அபி மானிகள் விதந்து போற்றும் அவனுடைய 'சீர்திருத்தம், புரட்சி, சமத்துவம்' போன்றவை அனைத்தும் இந்த மீட்புவாதம் எனும் சட்டகத் திற்கு உள்ளடங்கியவைதான்.

இன்று பாரதி குறித்த விவாதம் என்பது இந்துத்துவத்தை எதிர் கொள்வதெப்படி என்ற நடைமுறைப் பிரச்சினையோடு நேரடியாகத் தொடர்புள்ளதாயிருக்கிறது. எனவே பாரதி குறித்து சமரசவாத மதிப்பீட்டை முன்வைப்ப வர்கள், அநேகமாக பார்ப்பன பாசிசம் குறித்தும் அத்தகைய போக்கையே கடைப் பிடிக்க இயலும்.

*இன்று பாரதி குறித்த விவாதம் என்பது இந்துத்துவத்தை எதிர் கொள்வது எப்படி என்ற நடைமுறைப் பிரச்சினையோடு நேரடியாகத் தொடர்புள்ளதாக இருக்கிறது. எனவே பாரதி குறித்து சமரசவாத மதிப்பீட்டை முன் வைப்பவர்கள், அநேகமாக பார்ப்பன பாசிசம் குறித்தும் அத்தகைய போக்கையே கடைப்பிடிக்க இயலும்.*

பாரதிபுத்திரனின் நூலுக்கு கோவைஞானி வழங்கியுள்ள அணிந்துரை இதற்குச் சான்று: ''இந்து மதமும் இந்துத்துவமும் ஒன்றல்ல; இந்துத்துவம் பாரதியைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதற்காக பாரதியை இந்துத்துவத்தின் பக்கம் நாமே தள்ளிவிடக் கூடாது; அத்வைதத்தில் நம்பிக்கையுள்ள அசலான பிராமணன் என்பவன் இடது சாரிப் பார்ப்பனன்; மதம், சாதி ஆகியவற்றைக் கடுமையாகத் தாக்கியதன் காரணமாகத்தான் இந்துத்துவம் பெருகுகிறது; தொழில்வகை ஏற்றத்தாழ்வுகள் தவிர்க்கவியலாதவை'' இவை ஞானி கூறியுள்ள கருத்துக்கள், வெறும் கருத்துகளல்ல, இந்துத்துவத்தை வீழ்த்த அவர் நமக்கு வழங்கும் 'ஆயுதங்கள்'!

இந்த 'ஆயுதங்கள்' போதாதென்று மேலும் இரண்டு 'ஆயுதங்கள்' சென்றமாதம் சந்தைக்கு வந்துள்ளன. இலங்கையின் தேசிய கலை இலக்கியப் பேரவைச் செயலர் ந.இரவீந்திரன் எழுதியுள்ள 'இந்துத்துவக் கலைச்சூழலின் மறு வாசிப்பில் பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இந்துத்துவம் - இந்து சமயம் - சமூக மாற்றங்கள்' என்ற இரு நூல்களும் பாரதி ஆய்வில் புதிய எல்லையைத் தொட்டிருக் கின்றன.

''பாரதியைக் கற்றலும் அவர் வழி முறையை மார்க்சியத்துடன் இணைத்து வளர்த் தெடுப்பதும் இன்றைய வரலாற்றுக் கட்டத்தின் அவசர அவசியப் பணி'' என்று கூறும் நூலா சிரியர் மார்க்சியவாதிகளுக்கு 'பாரதியம்' எனும் புதிய இசத்தை அறிமுகம் செய்கிறார்.

பாரதியை ஆதரிப்போர் கூட அவரது ஆன்மீகப் பார்வையையும் சமுதாயப் பார்வை யையும் முரண்பட்டவையாகச் சித்தரிப்பது குறித்து விமரிசிக்கும் இந்நூலாசிரியர், பாரதி யின் மெய்ஞ்ஞானத்திற்கு அடிப்படை இயங் கியல் பொருள் முதல்வாதம்தான் என்று ஒரே போடாய்ப் போடுகிறார்.

அதெப்படி என்று கேட்டால், இந்து தத்துவ மரபில் அடங்கிய பொருள் முதல்வாதத் தத்துவ சிந்தனையைத்தான் பாரதி வரித்துக் கொண்டார் என்கிறார். இவரது கூற்றுப்படி வேதமரபும் வேதமறுப்புத் தத்துவங்களின் மரபும் 'இந்து தத்துவ மரபில்' அடங்குபவைதானாம். இந்து மதத்தின் சாரம் சாதி இல்லையாம். நாம் இந்தப் 'புரட்சிகர இந்து மதத்தை' ஆயுதமாக ஏந்தி இந்துத்துவத்தை எதிர்த்துப் போராட வேண்டுமாம்!

விவேகானந்தர், திலகர், காந்தி ஆகியோர் இந்தியத் தேசியத்தை ஆன்மீகமயமாக்கியது மிக நுட்பமான அரசியல் தந்திரமாம்! இந்த இந்து விடுதலை நெறியின் அடிப்படைச் சாரமும், அதன் வரலாற்று வளர்ச்சியும், கிளர்ச்சிப் பண்பும், சாதனைகளும் எடுத்துக் காட்டப்படல் அவசியமாம்!

இதைத்தான் ஆர்.எஸ்.எஸ் செய்து கொண்டி ருக்கிறது. ஆயிரக்கணக்கான கடவுளர்கள், நூற்றுக்கணக்கான வழிபாட்டு முறைகள், நாத்திகர்களையும் இந்துவாக அங்கீகரிக்கும் பெருந்தன்மை போன்றவை உலகில் வேறெந்த மதத்திற்கும் கிடையாதென்பதும், இந்தப் பன்முகத்தன்மை காரணமாகத்தான் இந் நாட்டில் ஜனநாயகமும் மதச்சார்பின்மையும் உத்திரவாதப்படுத்தப்படுகின்றன என்பதும் ஆர்.எஸ்.எஸ்-இன் வாதங்கள். அரசியலை ஆன்மீகப் படுத்த வேண்டும் என்பதுதான் அவர்களின் கோரிக்கை. ஆர்.எஸ்.எஸ். வலப் புறம் நின்று பேசுவதை இடப்புறத்திலிருந்து வழி மொழிகிறார் இரவீந்திரன்.

மதிமாறன் தன்னுடைய நூலுக்கு 'பாரதி'ய ஜனதா பார்ட்டி என்று பெயரிட்டது பொருத் தம்தான் என்பதை அவருக்கு மறுப்புக் கூற வந்த நூலாசிரியர்கள் நிரூபித்திருக்கிறார்கள். அதற்காக நன்றிகூற வேண்டும்.

*(முற்றும்)*



படிப்பகம்




# வாசகர் கடிதம்

● தோழர் சூரியனின் *''அரசு ஊழியர் மீதான அடக்குமுறை: எதிர்பாராத சூறாவளியா? எதிர்கொள்ள வேண்டிய போராட்டமா?''* என்ற கட்டுரை படித்தேன். இன்றைய சூழலில் அரசும், அரசு சார்ந்த அத்தனை அமைப்புக்களும், இயக்கங்களும் ஊழியர்களும் சுயநலம் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை, போராட்டத்தில் இறங்க இலட்சக்கணக்கானோர் தேவையில்லை. இதில் தோற்றாலோ உயிர் துறந்தாலோ அவமானமாகக் கருதத் தேவையில்லை. மாறாக அதைத் தியாகமாகவும் போராடியவரை தியாகியாகவும் கருத வேண்டும். அதுவே நமது தலையாய கடமையும் உரிமையும் ஆகும்.

**– ஆ. சிங்கராயர்,** திருவரங்கம்.

● *''புரட்சியே உனக்கொரு காலை வணக்கம்''* என்ற ஹியூஸ் அவர்களின் பாடல் வரிகளை என் மனது மீண்டும் மீண்டும் மனனம் செய்கின்றது. பாட்டாளி வர்க்கம் காண ஒரு படைப்பாளன், பண்பாட்டுத் தளத்தில் ஒரு பாடலையோ கவிதையையோ இப்படித்தான் படைக்க வேண்டும் என்று என் சிந்தனையில் ஆழமாய்ப் பதிந்தது.

**– வே. கணேசமூர்த்தி,** சென்னை

● *''எதிர்ப்பை நிறுவனமயமாக்கும் பாசிசத் தந்திரம்''* கட்டுரை, படைப்பவனும் நானே அழிப்பவனும் நானே என்ற பரமாத்மாவின் சீடர்கள், ஏகாதிபத்திய அடிமையும் நானே, அதை எதிர்ப்பவனும் நானே - என்ற இரட்டை வேடம் போட்டாலும் அடிமையின் எதிர்ப்பு அடங்கிப் போவதுதான் என்பதை விளக்குகிறது. உண்மையான எதிர்ப்பை உழைக்கும் மக்கள்தான் தொடங்க வேண்டும்.

**– கோவிந்தன்,** தருமபுரி.

● என் பெயர் தனு. நான் 7-ஆம் வகுப்பு படிக்கின்றேன். புதிய கலாச்சாரத்தில் *''தீ''* என்னும் சிறுகதை படித்து நானும் என் தம்பி கபிலனும் அழுது விட்டோம். ஒருவேளைச் சோறுக்கு எவ்வளவு கஷ்டம் என்று தெரிந்தது. எத்தனையோபேர் உண்மையாகவே இப்படித்தான் இருக்காங்க என்று நாங்கள் உணர்கிறோம். அதிலிருந்து நாங்கள் சாப்பிடும் போதெல்லாம் அய்யோ எவ்வளவு பேர் பட்டினியாக இருக்கிறார்களோ என நினைத்து வேதனைப் படுகிறோம். அந்தத் ''தீ'' கதை மாதிரி இன்னும் உண்மைச் சம்பவ கதைகளை எதிர்பார்க்கிறோம்.

**– இரா.தனு, இரா.கபிலன்,** ஈரோடு.

● *''பாரதி அவலம்''* கட்டுரை இக்காலத்திற்கு மிக முக்கியமானது. இந்து தேசியவாதி எனப் பொதுவாகத் தெரிந்தாலும் குறிப்பான விசயங்கள் தெரியாமல் இருந்தது. இந்து தேசியவாத கோட்பாட்டாளர்கள், மலட்டு அரசியல் கோட்பாட்டாளர்கள், போலிக் கம்யூனிஸ்டுகள், தங்களது மலட்டுத்தனமான அரசியலுக்கேற்ப சாயம்பூசி பாரதியை முன்னிறுத்துகின்றனர். இவர்களது அரசியல் அடிப்படையை, பாரதியைப் பகுத்தாராய்வதன் மூலம் புரிந்து கொள்ள கட்டுரை ஏதுவாக அமைந்தது.

*பாகிஸ்தான் இராணுவத்தை எதிர்த்த விவசாயிகளின் போராட்டம்* மிகுந்த உற்சாகமளிக்கிறது. பொதுவாக பல இசுலாமிய நண்பர்கள், இசுலாமிய நாடுகள் என்னவோ பூலோக சொர்க்கமாக இருப்பதாக இசுலாமிய தேசியவாத மாயையை உருவாக்குகின்றனர். ஆனால் அது உண்மையில் மாயைதான் என்று கட்டுரை தெளிவாக நிரூபித்துள்ளது. உலகில் அனைத்து மூலைகளிலும் உண்மையில் வர்க்கப் போராட்டமே நடக்கிறது என்றும், அது தேசம், மொழி, இனம், மதம் என்ற போர்வையால் மூடப்பட முயற்சித்தாலும், அவை காலத்தால் திரைகிழிக்கப்படும் என்பதை உணர முடிந்தது.

*''தோழருக்காக ஒரு உதவி''* என்ற கவிதை உண்மையில் 'தோழர்களுக்கு' பெரிய உதவிதான். கவிதையில் கவிஞரின் அரசியல் கூர்மை போற்றத்தக்கது. உண்மையில் அரசியல் கூர்மையான கவிதைகள் *புதிய கலாச்சாரத்தில்* மட்டுமே இடம் பெறுகிறது என உறுதியாக நம்புகிறேன்.

**– புரட்சித் தூயன்,** தருமபுரி.

● அரசு ஊழியர்களுக்கு எதிராக நீதிபதி ஷா கொடுத்திருக்கும் தீர்ப்பானது (வேலை நிறுத்தம் என்பது எந்தவொரு நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாது, சட்ட திட்டங்களுக்கு முரணானது என்ற தீர்ப்பு) சட்ட அமைப்பிற்கே முரணானது என்பதைப் பல்வேறு முன்னுதாரணங்களிலிருந்து [ஐ.டி.ஏ(1947)ன் பிரிவு - 22-ன் கூற்று, நீதிபதி அகமதியின், பி.ஆர். சிங் வழக்கின் மீதான கூற்றுக்கள் (1989), இன்றைய தமிழ்நாடு உயர்நீதி மன்றத்தின் நிலைப்பாடற்ற தீர்ப்புகள்] அறிந்து கொள்ளலாம்.

நீதிமன்றமானது, 'வேலைநிறுத்தம்' அடிப்படை உரிமையா, இல்லையா என்பதைப் பற்றியே வாதிட்டுவிட்டு, இத்தகைய ஒட்டுமொத்த வேலை நீக்கமானது சட்டப்பூர்வமானதா, இல்லையா என்பதை அலசுவதற்குத் தயாராக இல்லை.

காரணம், உழைப்பாளர் - தொழிலாளர் வர்க்கத்தின் பிரச்சினைகளை என்னவென்றே அறியாத ஜெயா தலைமையிலான தமிழக அரசு, நீதிமன்றங்கள், மொத்தத்தில் இந்திய நாடே, நமக்குள்ளடங்காத மூன்றாம் காரணியான உலக வங்கி, ஏகாதிபத்திய நாடுகளின் கைகளில் சிக்குண்டுள்ளது.

அத்தகைய கோணத்தில் போராடும் வர்க்கத்தினரை சிந்திக்கத் தூண்டிய பாங்கு இக்கட்டுரையின் சிறப்பம்சம் ஆகும்.

**– எஸ்.சீராளன்,** அரியானா

## சந்தாதாரர் கவனத்திற்கு

**இந்த இதழுடன் (அக்டோபர் – 03) முடிவுறும் சந்தாதாரர்கள்: 15, 17, 55, 61, 68, 142, 161, 232, 234, 238, 247, 250, 257, 259, 260, 273, 275, 276, 278, 306, 372, 468, 507, 608, 613, 614, 620, 628, 643, 644, 645, 646, 647, 648, 649, 650, 651, 652, 653, 654, 655, 663, 664, 665, 666, 667, 668, 669, 670, 671, 672, 673, 674, 675, 676, 677, 678, 680, 681, 682, 684, 685, 686, 687, 688, 689, 691, 692, 693, 694, 695, 696, 697, 698, 699, 700, 701, 702, 703, 704, 705, 706, 707, 708, 709, 710, 711, 712, 713, 714, 741, 742.**

**அடுத்த இதழுடன் (நவம்பர் – 03) முடிவுறும் சந்தாதாரர்கள்: 26, 129, 147, 155, 160, 162, 163, 168, 284, 288, 289, 290, 293, 295, 300, 301, 366, 747, 748, 749, 750, 751, 752, 753, 754, 755, 756, 757, 758, 759, 760, 761, 762, 763, 764, 765, 766, 770,771, 772.**

*குறிப்பு:* 25 தேதிக்கு முன்பே சந்தா செலுத்திவிடவும். M.O அனுப்பும் போது தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். புதிதாகச் சந்தா செலுத்துவோர், புதிய சந்தா என எழுதி தங்களது முழு முகவரியை அ.கு. எண் (Pin Code) உள்ளிட்டு தெளிவாகக் குறிப்பிடவும்.

படிப்பகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.

www.padippakam.com

PUTHIYA KALACHARAM
Tamil Monthly
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN/PMG (CCR)/239/03-05



சர்க்கரை நோயின் மருந்தே நமஹ
காப்பிக் கொட்டையின் உரமே நமஹ
தொந்தியைக் கவ்வும் பெல்ட்டே நமஹ
மாமிகள் ஹேண்ட் பேக்கே நமஹ
உதட்டுச்சாயக் கொழுப்பே நமஹ
ஜான்சன் பேபி சோப்பே நமஹ
சாக்லெட், ஐஸ்கிரீம் சர்வமும் நமஹ
பேர் அன்ட் லவ்லி க்ரீமே நமஹ
பேட்டா செருப்பின் தோலே நமஹ
கோட் - சூட்டின் பட்டனே நமஹ
டென்னிஸ் மட்டை நரம்பே நமஹ
செல்லநாயின் உணவே நமஹ
யமாஹா வண்டி டயரே நமஹ
மாருதி சீட்டின் கவரே நமஹ
காரின் லூப்ரிகேன்ட் ஆயிலே நமஹ
பளிச்சிடும் டிடர்ஜென்ட் சோப்பே நமஹ
ஷட்டர் கதவின் க்ரீசே நமஹ
செல்போன் மீது கவரே நமஹ

# பார்ப்பன கோமாதாவும் மக்களின் மாடும்!




## மாட்டிறைச்சியை மருந்தாகவோ பொருளாகவோ நுகராதவன் இல்லை.

## ஆர்.எஸ்.எஸ் அம்பிகள் தற்கொலை செய்துகொள்ளத் தயாரா?

படிப்பகம்